★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜுலை 22 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
92 1932–2024 ANNIVERSARY
தினகரன்

வரு. 92 இல. 173 | Monday 22, July, 2024 | 20பக்கங்கள் | 50/-

## ஆணழகன் போட்டியில் ராஜ்குமார் முதலிடம்

துபாய் எமிரேட்ஸ் ஆணழகன் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த மாதவன் ராஜ்குமார் முதலிடத்தைப் பெற்றுள்ளார். எண்பது கிலோ எடைப் பிரிவில் அவர் இந்தப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். இதேவேளை, 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 53ஆவது ஆசிய ஆணழகன் போட்டியில், பங்குபற்றி மாதவன் ராஜ்குமார் வெண்கல பதக்கத்தைப் பெற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே அரசியலை உருவாக்க வேண்டும்

### அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்காக நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க இடமளிக்கப் போவதில்லை –ஜனாதிபதி



## ஜனாதிபதி ரணிலை வேட்பாளராக்க கம்பஹாவில் ஏகமனதாக தீர்மானம்

**பொதுஜன பெரமுன அமைச்சர்கள், எம்.பிக்கள் உள்ளிட்ட 28 பேர், முன்னாள் உள்ளூராட்சி உறுப்பினர்கள் 380 பேர் மற்றும் 15,000 பேருக்கும் மேலான மக்கள் ஏகமனதாக அங்கீகாரம்**

அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க, ஒருபோதும் தாம், இடமளிக்கப் போவதில்லை என்றும் நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே அரசியலை உருவாக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தப் பயணத்தில் இணையுமாறு சஜித் பிரேமதாச, அனுரகுமார திசாநாயக்க ஆகியோருக்கும் அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒன்றாக வெல்வோம் என்ற தொனிப் பொருளில் கடவத்தை பஸ் நிலைய வளாகத்தில் நடைபெற்ற மக்கள் பேரணிக் கூட்டத்தில், உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இந்த கூட்டத்தின் போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற முன்மொழிவை, கம்பஹா மாவட்ட மக்கள்

06

## அஸ்வெசும; புதிதாக 4,50,000 பேர் விண்ணப்பம்

### நலன்புரி நன்மைகள் சபை தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்காக 4,50,000 பேர், புதிதாக விண்ணப்பித்துள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. புதிய விண்ணப்பங்கள் உரிய விதத்தில்

06

## அபிவிருத்தியின் வெற்றி அனைவருக்குமானதே

### அரசியல் பேதங்களுக்கு அப்பால் செயற்படுவோம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்க அதிகாரிகள் மக்களுக்காக உச்சளவில் சிறந்த சேவையை வழங்குவது அவசியம் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டின் அபிவிருத்தியில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என கேட்டுக்கொண்ட

06

## மாணிக்க கங்கையில் நுழைவாயில் திறப்பு

கதிர்காமம் மாணிக்க கங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது இயல்பான பாதம் கழுவும் நுழைவாயிலை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோர் நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தனர். இந்நிகழ்வில் சிறப்பதிதியாக ஜனாதிபதியின் ஆளணி பிரதானி சாகல ரத்னாயக்க கலந்து கொண்டுள்ளார்.

வரலாற்று புகழ்மிக்க ருஹுணு மஹா கதிர்காம தேவாலயத்தின் எசல பெரஹரவுக்கு சமகாலத்தில், இந்த

06





ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிசாம் காரியப்பர் எழுதிய "அந்த கல்முனைக்குடி நாட்கள்" எனும் கவிதைத் தொகுப்பு நூலின் வெளியீடு சனிக்கிழமை (20) பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நூலின் பிரதியொன்றை அவரது தாயிடம் நூலாசிரியர் கையளிப்பதை படத்தில் காணலாம். (தெஹிவளை கல்கிஷை விசேட நிருபர்)

## IMF பிரதிநிதிகள் குழு இவ்வாரம் வருகை

### பொருளாதார வளர்ச்சி மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராய்வு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு இவ்வாரம் நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார முன்னேற்ற நிலை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு

06

## பங்களாதேஷ் வன்முறைகள்; இலங்கையருக்கு பாதிப்பில்லை

### பல்கலைக்கழக மாணவர் ஐம்பது பேரில் கரிசணை



பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள வன்முறைகள் பாரியளவில் வியாபித்துள்ளதால், அமைதியைக் கொண்டுவருவதற்கு உரடங்குச்சட்டம்அமுல்படுத்தப் பட்டுள்ளது. மக்களின்

06

## ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தலா? விஷேட ஆராய்வு

### தேவையாயின் பாதுகாப்பு ஏற்பாடுகள்




ஜனாதிபதி வேட்பாளர்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தீர்மானித்துள்ளார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்கும் நோக்கிலேயே இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கித் தாக்குதல்

06

## க்ளப் வசந்த படுகொலை: கைதான யுவதி மீது 48 மணி நேர விசாரணை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

க்ளப் வசந்தவின் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய 21 வயது யுவதியை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம்

06

## காணி உரிமை விடயத்தில் ஒற்றுமையுடன் செயற்படவும்



### மலையக பிரதிநிதிகள், தொழிற்சங்கங்களுக்கு சண்முகம் திருச்செல்வம் அழைப்பு

பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக்கொடுப்பதில் மலையக அரசியல் பிரதிநிதிகள் கட்சி, தொழிற்சங்க பேதமின்றி ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென, ஐக்கிய தேசியக் கட்சியின்

06

## தேசிய மக்கள் சக்தியின் அரசில் அரச திட்ட நிதியம் நிறுவப்படும்



தேசிய மக்கள் சக்தியால் அமைக்கப்படும் அரசாங்கத்தின் கீழ், அரச திட்ட நிதியமொன்று ஆரம்பிக்கப்படும் எனவும் இதில் எந்தவொரு நபரும் பணத்தை முதலீடு செய்ய

06

## ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவது நல்லது

### ஸ்திரமற்ற அரசியல் சூழலால் பொருளாதாரமே பாதிக்கும்

**கரவெட்டி தினகரன் நிருபர்**



ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவது தமிழ் மக்களுக்கு நன்மையளிக்குமென்று,

06

## முட்டையை மீண்டும் இறக்குமதி செய்ய நேரிடும்

முட்டை இறக்குமதியில் மீண்டும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. முட்டை உற்பத்தியாளர்கள் தொடர்ந்து முட்டை விலையை அதிகரித்து வருகின்றனர். இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌரியங்களை தவிர்க்கும் நோக்கிலே, இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

நாட்டில் முட்டையின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவது குறித்து ஊடகமொன்று வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று (22)

06

## 25 விரல்களுடன் பிறந்த அதிசய குழந்தை



இந்தியாவில் பெண்ணொருவர் 25 விரல்களுள்ள அழகிய ஆண் குழந்தையை பிரசவித்துள்ளார்.

கர்நாடகா – பாகல்கோட்டை மாவட்டம் ராபகவி அருகே கொன்னூரை சேர்ந்த 35 வயதுள்ள பாரதி என்ற பெண்ணே இந்த அதிசயக் குழந்தையை பிரசவித்துள்ளார்.

06

## அசங்க அபேகுணசேகர விமான நிலையத்தில் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தேசிய பாதுகாப்பு கற்கை நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் அசங்க அபேகுணசேகர நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து விமான மூலம் நேற்று இலங்கைக்கு வருகை

06

# புலம்பெயர் தொழிலாளர்கள் நாடு திரும்பியவுடன் கௌரவமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்படும்



## 'விகமனிக ஹரசர' ஆரம்ப விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு

புலம்பெயர் தொழிலாளர்கள் தமது சேவைக் காலத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் கௌரவமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த பொருளாதார நெருக்கடியின்போது நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தந்த அவர்களின் பங்களிப்புக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு இது பெரும் பலமாக இருந்ததாகவும் தெரிவித்தார்.

குருநாகல் சத்தியவாதி விளையாட்டரங்கில் நேற்று (21) நடைபெற்ற 'விகமனிக ஹரசர' நிகழ்ச்சியின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பை பாராட்டுவதற்காக, நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்ட 'விகமனிக ஹரசர' நிகழ்ச்சி வடமேற்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதில் குருநாகல், புத்தளம், அனுராதபுரம், மாத்தளை, கேகாலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் சுமார் 5,000 பேர் கலந்துகொண்டனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடத்தும் நலன்புரி உதவித் திட்டத்தின் கீழ் தொழில் முனைவர்களை உருவாக்குவதற்கு புலம்பெயர் தொழிலாளர்கள் பரிந்துரைக்கும் சுயதொழிலை ஆரம்பிக்கத் தேவையான நிதி மூலதனமாக தலா 50,000 ரூபாவையும் ஜனாதிபதி வழங்கினார்.

புலம்பெயர் சமூகத்தை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வலுப்படுத்தவும், புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவும், தேவையான கொள்கைகளை வகுப்பதற்கான கருத்துகளையும் பரிந்துரைகளையும் பெற்றதுடன், புலம்பெயர் தொழிலாளர்களிடையே சென்று அவர்களின் நலன்களைக் கேட்டறியவும் ஜனாதிபதி மறக்கவில்லை.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாவது:

"நாட்டிற்கு அந்நிய செலாவணி, ஈட்டித்தந்துவிட்டு நாடு திரும்புபவர்களுக்கு புதிய வாழ்க்கையைத் தொடங்க அரசாங்கம் ஆதரவு அளித்துள்ளது. இது பரிசு அல்லது அன்பளிப்பு அல்ல. நீங்கள் செய்த சேவைக்கு நீங்கள் பெற்ற உரிமை என்றுதான் கூற வேண்டும்.

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய பின்னர் பழைய தொழில்களில் ஈடபட சிலர் விரும்புவதில்லை. வாழ்க்கையில் முன்னேறுவதற்கு அது மாத்திரம் போதாது என்று அவர்கள் நம்புகிறார்கள். அப்படி அர்ப்பணிப்பும் வலிமையும் உள்ளவர்களுக்கு உதவும் வகையில் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது, நீங்கள் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்தீர்கள். அவ்வாறு நிதி கிடைக்கவில்லை என்றால் நமது பொருளாதாரம் மீண்டு வராது. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்த நேரத்தில் நான் நாட்டைக் பொறுப்பேற்றேன்.

எரிபொருள் இல்லாத, உரம் இல்லாத, எதிர்காலம் இல்லாத நாட்டை நான் ஏற்க வேண்டியதாயிற்று. நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்லும் போது, முதல் சில மாதங்களில் நாம் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நீங்கள் பணத்தை அனுப்பவில்லை என்றால், எங்களால் நிலைமையை சமாளிக்க முடியாமல் இருந்திருக்கும்.

மேலும் சரியான நேரத்தில் உரங்களை வழங்க முடிந்ததால், சென்ற போகங்களில் வெற்றிகரமான அறுவடை கிடைத்தது. இதன் மூலம் நமது நாட்டின் பொருளாதாரம் முன்னேறியது. நீங்கள் நாட்டுக்கு அனுப்பிய ஒவ்வொரு டொலருக்கும் மதிப்பு அதிகம். அதற்காக அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

உங்களது பங்களிப்பின் காரணமாக கடந்த சிங்கள புத்தாண்டு, வெசாக், பொசன் பண்டிகைகளை சிறப்பாக கொண்டாட எம்மால் முடிந்தது. இந்த நிலையில் இருந்து முன்னேறி நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். எப்பொழுதும் கடன் பெற்று பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது.

இதுவரை நாம் பெற்ற வெளிநாட்டுக் கடனைத் திருப்பி செலுத்தும் வகையில் சலுகைகளைப் பெற்றுள்ளோம். ஆனால் கடனை திருப்பிச் செலுத்துவதால் மாத்திரம் நமது பிரச்சினைகள் தீர்ந்துவிடாது.

நமது அந்நிய செலாவணியை அதிகரிக்க வேண்டும். தேவையான அளவு அந்நியச் செலாவணி கிடைக்கும் வரை கடன் பெறவேண்டியுள்ளது. நாம் கடன் பெறும்போது, நம் கடன் அதிகரிக்கிறது. எனவே, அந்நியச் செலாவணி அளவை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு தொழிலுக்குச் செல்பவர்களுக்கு முறையான பயிற்சி அளிப்பது அவசியம். தொழிலை முடித்துவிட்டு நாடு திரும்பும் போது தொழில்சார் அறிவு கொண்ட தொழில் முயற்சியாளர்களாக உங்களை மாற்றத் தேவையான வேலைத் திட்டத்தைத் தயார் செய்யுமாறு அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். நாம் ஏற்றுமதி பொருளாதாரத்திற்குச் செல்ல வேண்டும்.

வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதுடன் சுற்றுலாப் பயணிகளையும் நாட்டுக்கு அழைத்து வர வேண்டும். இந்தப் புதிய பாதையில் நாடு முன்னேற வேண்டும்.

மேலும், நாட்டில் விவசாயம் முன்னேற வேண்டும். நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது. அதற்காக விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம்.

ஒரு நாடாக நாம் அச்சமின்றி முன்னேற வேண்டும். பாரிய அளவிலான நிறுவனங்களுக்கு முதலீட்டாளர்கள் அதிகம் வருகிறார்கள். இது ஒரு நல்ல நிலைமையாகும். அதற்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க அரசாங்கம் செயல்பட்டு வருகிறது.

ஆனால் அது மாத்திரமின்றி, இந்நாட்டின் சாதாரண மக்களையும் முன்னேற்றுவதே எனது நோக்கமாகும். அதற்குத் தேவையான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

அதற்காக 'அஸ்வெசும' மற்றும் 'உறுமய' வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 'உறுமய' வேலைத் திட்டத்தின் மூலம் நாட்டு மக்கள் அனைவரும் காணி உரிமைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். அத்துடன் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்குத் தேவையான கடன்களை வழங்க 50 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், நாடு முன்னேறும் போது, கீழ்மட்ட மக்களை முன்னேற்றத் தேவையான திட்டத்தைத் தயாரித்துள்ளோம்.

நாட்டில் ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்கும்போது, தமது கிராமத்தின் பொருளாதார வளர்ச்சியில் தாம் அக்கறை செலுத்த வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பொறுப்பாக இருக்கும் அதேவேளையில், கிராமத்தின் வளர்ச்சிக்கு தேவையான உதவிகளையும் செய்து வருகிறோம். மீண்டும் நாட்டின் எதிர்காலத்துடன் விளையாட முடியாது.

அரசியல் என்பது, பொய்யான வாக்குறுதிகளை அளிப்பதோ, முகத்தைப் பார்த்து வாக்களிப்பதோ அல்ல. தமது எதிர்காலத்தை நினைத்து வாக்களிக்க வேண்டும். அதன்போது உங்கள் அனைவருக்கும் இருக்கும் பொறுப்பை நீங்கள் நினைவில்கொள்ளுங்கள்."

இவ்வாறு ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார உரையாற்றுகையில், "வெளிநாட்டு ஊழியர்கள் 2019 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 6.1 பில்லியன் டொலர்களை அனுப்பியதாலேயே ஒரு நாடாக காலூன்றி நிற்க முடிந்தது. 2022 ஆம் ஆண்டில் இது 3 பில்லியன் டொலர்களாக குறைந்து போனது. எவ்வாறாயினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 12 பில்லியன் டொலர்களை வெளிநாட்டுத் தொழிலாளர்கள் இலங்கைக்கு அனுப்பியுள்ளனர்.

சில அரசியல் தலைவர்கள் டொலர்களை அனுப்ப வேண்டாம் என்று கூறி நாட்டின் அரசியல் நிகழ்ச்சி நிரலை செயற்படுத்த முயன்றனர். ஆனால் வெளிநாட்டு தொழிலாளர்கள் அவ்வகையான அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள பொருளாதார வேலைத் திட்டத்தினால் வெளிநாட்டு ஊழியர்கள் இந்த நாட்டுக்கு பணம் அனுப்ப ஆரம்பித்துள்ளனர். அதன்படி, நாட்டின் அடிப்படைத் தேவைகளுக்குத் தேவையான அந்நிய செலாவணியை அரசாங்கம் ஈட்டிக்கொண்டுள்ளது. புலம்பெயர் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கம் பல சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

வாகன அனுமதிப் பத்திரத்தை விரைந்து வழங்குதல், ஆறு முறைக்கு மேலாக வெளிநாடு சென்றவர்களுக்கு பரிசு, சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன. இன்றும் புலம்பெயர் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வேலைத் திட்டமே முன்னெடுக்கப்படுகிறது. அதன்படி புலம்பெயர் தொழிலாளர்களை தொழில் முனைவோராக மாற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது" என்று தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார உரையாற்றுகையில், "நாட்டை போரிலிருந்து மீட்க இராணுவத்தினர் பாடுபட்டனர். 2022 ஆம் ஆண்டிலும் பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கிக் கொண்டதால் உரத் தட்டுப்பாடு, பதினான்கு மணி நேரம் மின்வெட்டு, எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மக்கள் வீதிக்கு வந்தனர்.

அதன் போது 'அரகலய' என்ற பெயரில் சந்தர்ப்பவாதிகள் சிலரால் அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகினார். ஆளும் கட்சியாகவிருந்த பொதுஜன பெரமுன எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு அழைப்பு விடுத்தது. சவாலை ஏற்றுக்கொள்ள சஜித் பிரேமதாச முன்வரவில்லை. பாராளுமன்ற குழுவினர் அனுரகுமார திஸாநாயக்கவை சந்தித்து நிர்வாகத்தை பொறுப்பேற்குமாறு அழைப்பு விடுத்தனர். ஜனாதிபதி பதவி விலகாவிட்டால் நாட்டைக் பொறுப்பேற்க முடியாது என நிபந்தனை முன்வைத்தனர்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க எவ்வித நிபந்தனையுமின்றி நாட்டைப் பொறுப்பேற்று மக்களை அடக்குமுறையிலிருந்து விடுவிக்க முன்வந்தார். இன்று நாட்டை பொருளாதார ரீதியாக மீளக்கட்டியெழுப்ப புலம்பெயர் தொழிலாளர்களான உங்களது பங்களிப்பு மிக அவசியமானதாகும்.

இன்று பங்களாதேஷைப் பாருங்கள். கடந்த முறை முந்நூறு நாடாளுமன்றத் தொகுதிகளில் 224 தொகுதிகளை வென்ற ஷேக் ஹசீனா பிரதமராக தெரிவானார். அங்கு தோல்வி கண்ட அரசியல் குழுக்கள், மாணவர் இயக்கம் இணைந்து போராட்டத்தை ஆரம்பித்துள்ளன. இரண்டு வருடங்களுக்கு முன் இலங்கையில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது. நாட்டை தீக்கிரையாக்கி ஆட்சியைப் பிடிக்க சிலர் முயற்சிக்கின்றனர். இந்த விடயங்களை கருத்தில் கொண்டு மக்கள் தீர்மானம் எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமட் உரையாற்றுகையில், "இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாடு எதிர்கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடியின் காரணமாக எதிர்காலம் நிச்சயமற்றதாக இருந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் பொறுப்பேற்று புலம்பெயர் தொழிலாளர்கள் மீது நம்பிக்கை வைத்து பொருளாதார வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார்.

இன்றும் அந்த வேலைத்திட்டம் வலுவாக முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. வெளிநாட்டு கையிருப்பு 20 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. பணவீக்கத்தை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் கலந்தாலோசித்து 08 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிவாரணத்தை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. அத்தகைய சாதனைகளை செய்த ஒரே அரசியல் தலைவராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மட்டுமே உள்ளார்" என்று தெரிவித்தார்.

கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத் உரையாற்றுகையில், "தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு வெளிநாட்டுப் பணியாளர்களின் உழைப்பை நாட்டுக்குத் தேவையான வகையில் பயன்படுத்தியது. இரண்டு வருடங்களாக நீடித்து வந்த கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க இந்த வெளிநாட்டு பணியாளர்கள் அளப்பரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். 134 பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் மூலம் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற வேளையில் இரு பக்கங்களும் பற்றி எரியும் விளக்கை போன்றதாகவே நாட்டின் நிலைமை இருந்தது.

ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தில் நம்பிக்கை கொண்ட புலம்பெயர் தொழிலாளர்கள் இந்த நாட்டுக்குப் பணத்தை அனுப்ப முன்வந்தனர். தற்போது நாடு பொருளாதார ரீதியாக முன்னேறி வருகிறது. தொடர்ந்தும் அதனை வலுவாக செயற்படுத்துவதற்கான பங்களிப்பை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்று தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உரையாற்றுகையில், "இலங்கைக்காக வெளிநாடுகளில் பாடுபடுவோரின் குடும்பங்களைப் பலப்படுத்தும் நோக்கிலேயே அரசாங்கம் இவ்வாறான திட்டங்களை செயற்படுத்துகிறது. இந்த பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் உங்களை வலுவூட்ட அரசாங்கம் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இவற்றோடு 'அஸ்வெசும', 'உறுமய' போன்ற வேலைத் திட்டங்களின் கீழ் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. இந்த நிவாரணங்களைக் கொண்டு வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.பி.ஏ.விமலவீர உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு...









**கடினமான காலங்களில் நாட்டுக்கு அந்நிய செலாவணியைக் கொண்டுவந்து பங்களிப்புச் செய்தமைக்கு நன்றி**

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜுலை 22 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ் - 04.41
லுஹர் - 12.18
அஸர் - 03.43
மஃரிப் - 06.32
இஷா - 07.47

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் ஆடி 06

ராகுகாலம் : காலை : 7.31 - 9.01வரை
சுபநேரம் : பகல் : 12.01 - 1.31வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# கடன் மறுசீரமைப்பில் ஜப்பானின் உதவியை மறக்க முடியாது

## அமைச்சர் பந்துல குணவர்தன ஜப்பான் தூதுக்குழுவினரிடம் தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஜப்பான் அரசாங்கம் வழங்கிய உதவியை ஒரு போதும் மறக்க முடியாதென,போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாட்டுக்கு விஜயம் செய்துள்ள ஜப்பான் தூதுக்குழுவினருடன் நடந்த சந்திப்பிலே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இச்சந்திப்பு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சில் இடம் பெற்றது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை புதிய தொழில்நுட்பத்துடனான டிஜிட்டல் மயமாக்கல், கண்டிக்கான அதிவேகப் பாதையின் நான்காவது பிரிவை ஆரம்பித்தல்,



இலகு ரயில் திட்டம் மேலும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழுள்ள திட்டங்களை ஜப்பானிய உதவியின் மூலம் ஆரம்பித்தல் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது.

இது தவிர போக்குவரத்து சேவையை டிஜிட்டல் மயமாக்குவது குறித்தும், ரயில்வே சேவையை மேம்படுத்த ஜப்பானின் பங்களிப்பை பெறுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் ஜப்பான் அரசாங்கம் பெற்றுக் கொடுத்த ஆதரவிற்கு ஜப்பானிய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்த அமைச்சர், கடன் மறுசீரமைப்பில் ஜப்பான் வழங்கிய ஆதரவை இலங்கை ஒரு போதும் மறக்காது எனவும் தெரிவித்தார்.

# கல்கிஸ்ஸ பகுதியில் இரண்டு கைக் குண்டுகள் மீட்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்கிஸ்ஸ பகுதியில் இரண்டு கைக் குண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கிஸ்ஸ ரயில் பாதைக்கு அருகிலிருந்தே, இவ்வாறு வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட இரண்டு கைக் குண்டுகளையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த பகுதி ரயில்வே வீதியில் பயணித்த மூன்று நபர்கள் அது தொடர்பில் கல்கிஸ்ஸ பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தனர்.

இதை யடுத்து உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் அந்த இரண்டு கைக் குண்டுகளையும் மீட்டுள்ளனர்.

அந்த இரண்டு கைக் குண்டுகளும் பழைமையான நிலையில் காணப்பட்டதாகவும் சில வருடங்களுக்கு முன் அந்த கைக்குண்டுகளை எவராவது நபர்கள் அந்தப் பகுதியில் ஒழித்து வைத்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அந்த கைக்குண்டு இரண்டினதும் க் ளிப்கள் உடைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# போலி மின்னஞ்சல்கள் இணையதளங்கள் சைபர் பாதுகாப்பு நிபுணர்கள் எச்சரிக்கை

தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகள் செயலிழப்புடன் தொடர்புடைய சூழ்நிலையை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஹேக்கிங் மோசடி முயற்சிகள் குறித்து பொது மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

உலகெங்கிலும் உள்ள இணையத் தள சைபர்பாதுகாப்பு நிபுணர்கள் மற்றும் முகவர் நிறுவனங்களே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளன. இணையங்கள் செயலிழந்தமைக்கான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை.எவ்வாறாயினும் தீங்கிழைக்கும் நடவடிக்கையால் இது ஏற்பட்டதற்கு எந்த ஆதாரமும் இல்லை.



இருப்பினும் சில மோசடியாளர்கள் இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்த முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போலி மின்னஞ்சல்கள், அழைப்புகள் மற்றும் அதிகாரப்பூர்வமாக செயல்படுவதாக கூறிக்கொள்ளும் இணையதளங்கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு

பிரிட்டன் மற்றும் அவுஸ்திரேலியாவில் உள்ள இணைய தள சைபர் முகவர் நிறுவனங்கள் பொது மக்களை எச்சரித்துள்ளன.

# சனி, சந்திர கிரகணங்கள்

சனி மற்றும் சந்திர கிரகண அபூர்வ நிகழ்வொன்று இம்மாதம் (24) புதன்கிழமை இடம் பெறும் என்றும் அதனை இலங்கையர்களால் பார்க்க முடியும் என்றும் ஆர்தர் சி கிளார்க் மையம் தெரிவித்துள்ளது. இது ஒரு அரிய வானியல் நிகழ்வு என்பதுடன் ஜூலை 24 நள்ளிரவின் பின்னர் ஜூலை 25இல் சுமார் 12.40 மணியளவில் சந்திரனைப் பார்ப்பதன் மூலம் இந்த நிகழ்வை கண்களால் பார்க்க முடியும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

தொலை நோக்கியின் உதவியுடன் இந்த நிகழ்வை சிறந்த முறையில் பார்க்க முடியும்.

ஒரு விண்வெளி கோள் மற்றொன்றுக்குமுன்னால்செல்கையில், அதன் காட்சி மறைக்கப்படும் போது இந்த நிகழ்வு ஏற்படுகிறது.

சந்திரன், சனி கிரகத்தின் முன் பயணிக்கும் போது, அது பூமிக்கு தெரியாமல் மறைவதுடன் சுமார் ஒரு மணித்தியாலம் இருபது நிமிடங்களுக்கு அந்நிகழ்வு நீடிக்கும். இந்நிகழ்வை பூமியின் சில பகுதிகளில் மட்டுமே பார்க்க முடியும்.

மீண்டும் 2037ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் திகதியே இவ்வாறானதொரு நிகழ்வை இலங்கை மக்கள் காணமுடியும் என்றும் ஆர்தர் சி கிளார்க் மையம் தெரிவித்துள்ளது.



ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளரும்,பௌதீக ஆசிரியருமான முஹம்மது யூசுப் எழுதிய மூன்று நூல்களின் வெளியீட்டு நிகழ்வு, கடந்த சனிக்கிமை அக்கரைப்பற்று ஆயிஷா பாளிகா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா மாணிவயருக்கு நூல்களை கையளிக்கிறார். **(அக்கரைப்பற்று நிருபர்)**

# தேர்தல் அறிவிக்கப்பட்டதும் சகல நடவடிக்கைகளும் துரிதமாக்கப்படும்

ஜனாதிபதி தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தயாராக உள்ளதாக,அரசாங்க அச்சகத் திணைக்கள பிரதானி கங்கனி லியனகே தெரிவித்துள்ளார்.

இதுபற்றித் தெரிவித்த அவர்: தேர்தலை நடத்துவதற்கான ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர் வரும் எந்த தேர்தலுக்கும் திணைக்களம் தயாராக உள்ளது.தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அச்சகத் திணைக்கள செலவுகள் குறித்து தெரிவிக்கப்படும்.

கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடுகையில்,அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் பிரதானி கங்கானி லியனகே மேலும் தெரிவித்தார்.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2024 ஜுலை 24ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக ரூ. 160,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124J255 | LKA18225A241 | LKA36425G259 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 45,000 | 45,000 | 70,000 | 160,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 ஜுலை 24
தீர்ப்பனவுத் திகதி : 2024 ஜுலை 26
வழங்கப்படும் திகதி : 2024 ஜுலை 26
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 ஜுலை 24 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்கள் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடெட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# அரச நிதி முகாமைத்துவ சட்டமூல விவாதம் எதிர்வரும் 25 இல்

பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 23 முதல் 26ம் திகதி வரை நடைபெறவுள்ளன.அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் மற்றும் பொருளாதார பரிவர்த்தனை சட்டமூலம் ஆகிய சட்டமூலங்கள் எதிர்வரும் (25) பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் அண்மையில் கூடிய பாராளுமன்ற விவகாரம் தொடர்பான குழு கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# 22: திருத்த யோசனை இவ்வார சபை ஒழுங்கில் இல்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்த யோசனை இவ் வார பாராளுமன்ற அமர்வுக்கான ஒழுங்குப் பத்திரத்தில் உள்வாங்கப்படவில்லை என சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 22 ஆவது அரசியலமைப்பு திருத்த யோசனை, ஜனாதிபதித் தேர்தலுக்கு அழுத்தமாக அமையாது என்றும் இது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்துள்ள அமைச்சர் 22 வது அரசியலமைப்பு திருத்த யோசனை உடனடியாக கொண்டு வரப்பட மாட்டாது என்றும் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் இந்த வாரத்திற்கான பாராளுமன்ற அமர்வுகளுக்கு தயாரிக்கப்பட்ட ஒழுங்குப் பத்திரத்தில், அந்த யோசனை உள்ளடக்கப்படவில்லை.

எனினும் அது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு அழுத்தமாக அமையாது.சில தரப்பினர் அதனை வாசிக்காமல் பிரசாரங்களை முன்னெடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அறிவித்தல்

மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவில் கண்டி குருநாகல் வீதியில் 9ஆம் மைல் கல்லில் இலுக்கேவெலயில் சில்லறைக் கடையினை நடத்திச் சென்ற முஹம்மது ஹனிபா முஹம்மது அக்ரம் நுகர்வோர்களுக்கு பொருத்தமற்ற வகையில் உணவுப் பொருட்களை விற்பனை செய்தமைக்காக மாவத்தகம பிலஸ்ஸ மஜிஸ்ட்ரேட் நீதவான் ரூபா 39,000/- தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். அதேவேளையில் அதனை தேசிய பத்திரிகையில் காட்சிப்படுத்தும்படியும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மாவத்தகம சுகாதார பரிசோதகர் மேற்கொண்ட சோதனையின் போது வெளிநாட்டு பேரீச்சம்பழம் களஞ்சியப்படுத்தி விற்பனைக்கு வைக்கப்பட்டமைக்காகவும் உள்ளே சுகாதாரத்துறை முறைமையற்றதாகக் காணப்பட்டதாகவும் அதிகளவு சுகாதார சான்றிதழ்கள் இன்றி உணவுப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் உரிய விளம்பர லேபல் இன்றி கருப்புக் கடலை, முறுக்கு, மரவள்ளி ஆகிய உணவுப் பொருட்கள் விற்பனை செய்தமைக்காக மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் சுகாதார பரிசோதகர் முன்வைத்த முறைப்பாட்டை அடுத்து இந்த தண்டனை குறித்த நபருக்கு தண்டப் பணமாக 39 ஆயிரம் செலுத்துமாறும் இது தொடர்பில் பத்திரிகையில் வெளிவந்த அறிக்கையை நீதிமன்றத்தில் கொண்டு வந்து காட்ட வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார். சுகாதாரப் பரிசோதகரின் ஆறு முறைப்பாடுகளுக்கு அமைய இந்த ரூபா 39000/- தண்டப் பணம் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டது.

# சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம்

நீர்கொழும்பு – கொச்சிக்கடையை பிறப்பிடமாகவும், மினுவாங்கொடை கல்லொழுவையை வசிப்பிடமாகவும் கொண்ட எம்.ஆர். மொஹொமட் ரிஸ்வி, சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் முன்னிலையில், இவர் சத்தியப்பிரமாணம் செய்தார்.

நீர்கொழும்பு – அல் ஹிலால் மத்திய கல்லூரி மற்றும் நீர்கொழும்பு லொயோலா கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் நீதிமன்ற உரை மொழிபெயர்ப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நீர்கொழும்பு கொச்சிக்கடையைச் சேர்ந்த மர்ஹூம் மொஹமட் ரிஷாத் – சித்தி ஜெஸீமா தம்பதியினரின் புதல்வர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாசிப்பயறு உற்பத்தியில் விவசாய அமைச்சு கவனம்

சிறுபோக நெல் அறுவடையையடுத்து பாசிப் பயறை மூன்றாவது பருவகால உற்பத்தி அல்லது இடைநிலை பருகால உற்பத்தியாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதற்கமைவாக ஒரு ஹெக்டேருக்கு25கிலோ பாசிப் பயறு விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது. மேலும் இதற்கென, விவசாயம் மற்றும் தோட்ட கைத்தொழில் அமைச்சு ஒரு விவசாயிக்கு 25 ,000 ரூபாவை செலவிடவுள்ளது. இந்த இடைப்பட்ட பருவத்தில் 63,750 ஏக்கரில் பாசிப் பயறை உற்பத்திச்செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, நீர்ப்பாசனத்தின் கீழ் 40,000 ஏக்கரிலும், மகாவலி திட்டத்தின் கீழ் 16,250 ஏக்கரிலும், மாகாணங்களுக்கு இடையில் 7,500 ஏக்கரிலும் பாசிப்பயிறை உற்பத்திச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
FRIDAY 2024.07.19
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5539 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 41,812,328.00
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 3 8 0 7 9 1

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 114 — ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 0 7 9 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3781 — சீட்டிழுப்பு திகதி 2024.07.19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,654,509.12
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 04 24 36 55 — விசேட எழுத்து Y — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 36806

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1887 — 2024.07.19 — 08484 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 439,355,882.00
ஆங்கில எழுத்து U — சுப்பர் இலக்கம் 03 — வெற்றி இலக்கங்கள் 13 53 60 61
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.07.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0365
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 6 4 5 1 5 5
L7 எழுத்து F — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 33,107,209.28

ராசி சுப பலன் — திகதி 2024.07.19 — சீட்டிழுப்பு இலக்கம் 848 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,256,297.60
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 21 29 36 61 — தனயோக இலக்கம் 44622 — நாளுக்கான விதி எண் 09

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1569 — 2024.07.19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 102,134,197.12
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 03 34 41 53 — விசேட எழுத்து B — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 06519

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனி 2024.07.20
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5540 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 42,164,440.00
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 9 7 2 1 9 7

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 115 — ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 2 1 9 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3782 — சீட்டிழுப்பு திகதி 2024.07.20 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,776,539.12
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 09 14 25 68 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 73907

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1888 — 2024.07.20 — 71933 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 439,461,566.00
ஆங்கில எழுத்து E — சுப்பர் இலக்கம் 26 — வெற்றி இலக்கங்கள் 30 37 55 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.07.20 — சீட்டிழுப்பு இலக்கம் 0366
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 8 9 4 1 2 0
L7 எழுத்து A — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 33,165,337.68

ராசி சுப பலன் — திகதி 2024.07.20 — சீட்டிழுப்பு இலக்கம் 849 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,313,477.60
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 04 06 09 13 — தனயோக இலக்கம் 56856 — நாளுக்கான விதி எண் 03

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1570 — 2024.07.20 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 102,134,197.12
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 05 11 34 54 — விசேட எழுத்து M — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 26982

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 06ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 15



**குறள் தரும் சிந்தனை**

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்

*அடக்கம் அழியாத புகழைக் கொடுக்கும். அடங்காமை வாழ்வையே இருளாக்கி விடும்.*

# உயர்கல்வி மேம்பாட்டினால் நாட்டின் அபிவிருத்தி உயரும்

மட்டக்களப்பு புணானையில் அமைந்துள்ள விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச பல்கலைக்கழகத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் மாணவர்களிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். இலங்கையரின் உயர்கல்வியை மேம்படுத்துவதற்காகவும் விரிவுபடுத்துவதற்காகவும் முன்னெடுக்கப்பட்டுள்ள மற்றொரு நடவடிக்கையாக இப்பல்கலைக்கழகம் விளங்குகிறது.

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் கல்வி, உயர்கல்வி மேம்பாடு இன்றியமையாததாகும். இன்றைய நவீன உலகின் முன்னேற்றத்திலும் அபிவிருத்தியிலும் கல்வியின் பங்களிப்பு அளப்பரியது. கல்வி முன்னேற்றத்தின் ஊடாகவே பெரும்பாலான நாடுகள் அபிவிருத்தி அடைந்துள்ளன.

அந்த வகையில் இலங்கையின் இலவசக் கல்வித்திட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறான நடவடிக்கைகளில் ஒன்றாக இலங்கையைக் கல்வியின் கேந்திர நிலையமாக மேம்படுத்தும் திட்டம் கடந்த காலங்களில் முன்மொழியப்பட்டது. ஆனால் அத்திட்டம் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை. அதற்கு அரசியல் கட்சிசார் ஒரிரு பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள் ஆட்சேபனை நடவடிக்கைகளை முன்னெடுத்து இடையூறுகளை ஏற்படுத்தின. அதன் விளைவாக அந்த முன்மொழிவுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படாது கிடப்பில் போடப்பட்டன. இது ஒரு துர்ப்பாக்கிய நிலையாகும்.

கல்வியை அடிப்படையாகக் கொண்டு நாட்டையும் மக்களையும் முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது அவற்றுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும். இதை விடுத்து அத்தகைய திட்டங்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவது எவ்விதத்திலும் நியாயப்படுத்தக் கூடியதல்ல. அத்தகைய நடவடிக்கைகள் நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்தை சீர்குலைப்பதற்கான முயற்சிகளாகவே அமையும். நாட்டின் உண்மையான சமூக, பொருளாதார முன்னேற்றத்தை எதிர்பார்க்கும் சமூக ஆர்வலர்களின் கருத்து அதுவேயாகும்.

என்றாலும் அரச பல்லைக்கழக கட்டமைப்புக்களில் செயற்படும் கட்சி அரசியல் சார்பு ஒரிரு மாணவர் அமைப்புகள் அரச பல்கலைக்கழகங்களுக்கு அப்பால் உயர்கல்வியை விரிவுபடுத்துவதற்கு இடையூறுகளை ஏற்படுத்தக்கூடியனவாக உள்ளன. இத்தகைய கட்சிகள் தம் அரசியல் நலன்களை அடைந்து கொள்ளவென மாணவர்களைப் பயன்படுத்திடவும் பின்னிற்காதவையாக உள்ளன. இதனைப் புரிந்து கொள்ளத் தவறுகின்ற அப்பாவி மாணவர்கள் அக்கட்சி அரசியலின் சூழ்ச்சிக்குள் சிக்கிக் கொள்கின்றனர். இதன் விளைவாகவே அரச பல்கலைக்கழகங்களில் வகுப்பு பகிஷ்கரிப்பு, ஆர்ப்பாட்டம், மறியல் போராட்டம் என்றவாறான நடவடிகைகள் இடம்பெறுகின்றன. இவ்விதமான நடவடிக்கைகளின் விளைவாக அரச பல்கலைக்கழங்களின் உயர்கல்வி நடவடிக்கைகளை உரிய காலவேளையில் நிறைவு செய்துகொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை நாட்டில் காணப்படுகிறது.

ஆனால் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கு உயர்கல்வி விரிவுபடுத்தப்படுவது அவசியம். அதனால் நாட்டின் நலன்களை கருத்தில் கொண்டு அத்தகைய திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும்.

அந்த வகையில் நாட்டின் கல்வி மேம்பாட்டின் ஊடாக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஷேட கவனம் செலுத்தியுள்ளார். அதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளார்.

இவ்வாறான சூழலில் மட்டக்களப்பு புணானை பல்கலைக்கழகத்தை மாணவர்களிடம் கையளித்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பல்கலைக்கழகக் கட்டமைப்பில் இருந்து அச்சுறுத்தும் அரசியலை அகற்ற வேண்டும். பல்கலைக்கழகத்திற்குள் தங்களுக்கு விருப்பமான கற்கையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டதோடு, பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களைச் சீர்குலைக்காமல் முறையான கல்வி நிறுவனங்களாக அவற்றை மாற்றுவதற்கான காலம் வந்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

இது முற்றிலும் உண்மையான கூற்றாகும். பல்கலைக்கழகங்களில் இருந்து அச்சுறுத்தும் அரசியலை அகற்றுவது அவசியம். குறிப்பாக ஜே.வி.பி சார்பு மாணவர் குழுக்கள் இத்தகைய அரசியலை முன்னெடுப்பதாக குற்றச்சாட்டுக்களும் உள்ளன. இக்குழுவின் செயற்பாடுகளால் கடந்த காலங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் பலவிதமான அசௌகரியங்களுக்கும் நெருக்கடிக்கும் முகம்கொடுத்துள்ளனர். உயர்கல்வி நடவடிக்கைகளை உரிய காலவேளையில் நிறைவு செய்து கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கும் மாணவர்கள் உள்ளாகியுள்ளனர். சில மாணவர்கள் தங்கள் உயர்கல்வி நடவடிக்கையை இடைநடுவில் கூட கைவிட்டுள்ளனர்.

ஆனால் உயர்கல்வி நிலையங்களில் அச்சுறுத்தும் அரசியல் முன்னெடுக்கும் குழுக்களின் செயற்பாடும் அவற்றின் செல்வாக்கும் நாடொன்றுக்கு ஆரோக்கியமானதல்ல. மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான கற்கையை தெரிவு செய்து கற்கவென சுதந்திரமான சூழல் இருக்க வேண்டும். அதற்காக பல்கலைக்கழக முறைமையை இளம் பராயத்தினரதும் நாட்டினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி மறுசீரமைப்பது அவசியம்.

ஆகவே நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்படும் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கப்பட வேண்டும். அது நாட்டின் துரித முன்னேற்றத்திற்கு அளிக்கும் பாரிய பங்களிப்பாக அமையும் என்று உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# பல்கலைக்கழக முறைமையை மறுசீரமைப்பது அவசியம்

## மட்டக்களப்பு புணானையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை மாணவர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க












பல்கலைக்கழகக் கட்டமைப்புக்குள் அச்சுறுத்தல் அரசியலை இல்லாதொழிக்க வேண்டும் எனவும், மாணவர்கள் சுதந்திரமாகக் கல்வி கற்க வேண்டுமானால் பல்கலைக்கழக முறைமையை மறுசீரமைக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்களைச் சீர்குலைக்காமல், முறையான கல்வி நிறுவனங்களாக மாற்றுவதற்கான காலம் வந்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பு புணானையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை நேற்றுமுன்தினம் (20) மாணவர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளித்த பின்னர் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து பல்கலைக்கழகத்தை மாணவர்களிடம் கையளித்த ஜனாதிபதி, அதனைப் பார்வையிட்டதுடன், மாணவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.

இதன்போது, பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் இலங்கையிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மேலும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை மாணவர்களுக்கு கையளிக்கும் நிகழ்வையொட்டி நினைவு முத்திரை ஒன்றும் வெளியிடப்பட்டது.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாவது:

"1985 இல் ஹிஸ்புல்லாஹ்வை நான் முதன் முதலில் இளைஞர் சேவை மன்றத்தில் சந்தித்தேன். அவர் இன்று இந்த சர்வதேச பல்கலைக்கழகத்தை ஆரம்பித்துள்ளார். இந்த பல்கலைக்கழகம் நமது பிள்ளைகளுக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதே அரசின் நோக்கமாகும். தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான அறிவைக் கொண்ட மக்களே நமது நாட்டிற்கு அவசியமாகும். அதனால்தான் இந்தப் பல்கலைக்கழகம் நாட்டுக்கு மிகவும் முக்கியமானது.

நமது நாட்டின் பிள்ளைகளுக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்க நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு மிகவும் நன்றி. இப்பல்கலைக்கழகத்துடன் தற்போது கிழக்கு மாகாணத்தில் மூன்று பல்கலைக்கழகங்கள் உள்ளன.

இந்த நிறுவனங்கள் இலாபம் ஈட்டும் நிறுவனங்கள் அல்ல. இந்நிறுவனத்திற்கும் கிடைக்கும் நிதி சேமிக்கப்பட்டு, குறித்த நிதி இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கே பயன்படுத்தும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் மட்டுமல்ல, உலகில்

### பல்கலைக்கழகக் கட்டமைப்புக்குள் அச்சுறுத்தும் அரசியலை இல்லாதொழிக்க வேண்டும்!

இலாபம் ஈட்டாத தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் உள்ளன.

ஹார்வர்ட், ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக்கழகங்களை இலாப நோக்கமற்ற பல்கலைக்கழகங்கள் என்று அழைக்கலாம். கொத்தலாவல பல்கலைக்கழகம், NSBM பசுமைப் பல்கலைக்கழகம், SLIIT நிறுவனம் போன்றவையும் இலாப நோக்கமற்றவை.

சிலர் இவற்றை பட்டங்களை விற்பனை செய்யும் கடைகள் என்று கூறினர். அப்படியானால், கேம்பிரிட்ஜ், ஹார்வர்ட், ஒக்ஸ்போட் பல்கலைகழகங்களும் பட்டங்களை விற்கும் கடைகளா? அந்த மனப்பான்மையால்தான் இந்நாட்டின் அரச பல்கலைக்கழகங்கள் வீழ்ச்சியுற்று வருகின்றன. எனினும், இவற்றை நாம் மேலும் மேம்படுத்த வேண்டும்.

அன்று இருந்தது போன்று இன்று பல்கலைக்கழகங்கள் இல்லை. இன்று பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் கல்வியைச் சீர்குலைக்கும் குழுக்கள் உள்ளன. அந்தக் குழுக்கள் ஒரு சர்வாதிகாரத்தைப் போல மாணவர்களைக் கையாளுகின்றன. இத்தகைய சூழலில் கற்பிக்கும் விரிவுரையாளர்களைப் பாராட்டுகிறேன்.

பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களை பட்டங்களை விற்கும் கடைகள் என்ற கேவலமான பேச்சுக்கு நாம் செவி சாய்க்கக் கூடாது. பிள்ளைகள் சுதந்திரமாக கல்வி கற்கும் வகையில் இந்நாட்டில் உள்ள பல்கலைக்கழக முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும். நாளை முதல் சமூக வலைதளங்களில் இதனைச் சொல்லி என்னைக் குறை கூறலாம். பல்கலைக்கழகத்தில் அரசியல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. பல்கலைக்கழகக் கட்டமைப்பில் இருந்து அச்சுறுத்தும் அரசியலை அகற்ற வேண்டும். பல்கலைக்கழகத்திற்குள் தங்களுக்கு விருப்பமான கற்கையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். நமது பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் சீர்குலையாமல் முறையான கல்வி நிறுவனங்களாக மாற வேண்டும்.

இப்பல்கலைக்கழகம் அபிவிருத்தியடைந்தால் ஏனைய பல்கலைக்கழக கட்டமைப்புகளும் அபிவிருத்தியடையும் என்று எதிர்பார்க்கின்றேன். மேலும் இது போன்ற பல பல்கலைக்கழகங்கள் இன்னும் உருவாகும் என்று எதிர்பார்க்கின்றேன். இந்நாட்டில் உயர்கல்விக்காக விசேட பணியை ஆற்றிய லலித் அத்துலத்முதலி பெயரில் கல்வி நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்கவும் நாம் எதிர்பார்த்துள்ளோம். தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் உட்பட நான்கு கல்வி நிறுவனங்களை ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது".

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

மட்டக்களப்பு சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகரும், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா உரையாற்றுகையில்

"இந்தப் பல்கலைக்கழகத்தை திறந்து வைக்க வந்தமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறேன். இதனை நிர்மாணிக்க பல இடங்களைத் தேடினோம். இறுதியில் குறைந்த வருமானம் ஈட்டுவோர் அதிகளவில் வாழும் ஊவா, வட மத்திய, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தி பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்தோம். இந்த பல்கலைக்கழகம் மூன்று மாகாணங்களினதும் மக்களுக்கு பயனளிக்கும் என்று கருதுகிறேன்.

பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி அறிவுரை வழங்கினார். நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் 1,200 மாணவர்கள் தற்போது இங்கு கல்வி பயில்கின்றனர். இது ஒரு இனத்திற்காகவோ மதத்துக்காகவோ தனியாக அமைக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்ல. அனைத்து இன, மத மாணவர்களுக்கும் இங்கு இடமுண்டு.

நாட்டில் நல்ல பிரஜைகளை உருவாக்குவதே எமது நோக்கமாகும். அன்று எமது நாடு நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. அப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நாட்டைப் பொறுப்பேற்று நாட்டைக் கட்டியெழுப்பியதால் நாம் இலங்கையர் என்று உலகத்திற்கு பெருமிதமாக சொல்லிக்கொள்ள முடிகிறது" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், வட மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ல்ஸ், இராஜாங்க அமைச்சர்களான பிரமித்த பண்டார தென்னக்கோன், சிறிபால கம்லத், பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியூதீன், ரவூப் ஹக்கீம், அலி சாஹிர் மௌலானா, பைசால் காசிம், ஜகத் சமரவிக்ரம, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் லால் ரத்னசேகர, பிரதி உபவேந்தர் பேராசிரியர் கே.முபாரக், பதிவாளர் பீ.டீ.ஏ.ஹசன், விஞ்ஞான தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் தலைவர் ஹிராஸ் ஹிஸ்புல்லா உள்ளிட்டவர்களுடன் சவூதி இராஜதந்திரிகளும், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பெருந்திரளான பிரதேச மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு...**

# உலகின் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவியேற்று 64 வருடங்கள்



உலகின் முதல் பெண் பிரதமராக வரலாற்றில் இடம்பிடித்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அப்பதவியை ஏற்று நேற்றுடன் (21) 64 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

திருமதி பண்டாரநாயக்காவின் கணவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா 1960 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி அன்று கொலை செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரானார்.

1960 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20 ஆம் திகதியன்று நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மொத்தமாக 10, 22, 171 வாக்குகளைப் பெற்றதுடன் 75 ஆசனங்களைப் பெற்றது. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உலகின் முதல் பிரதமரானார். இலங்கையை அணிசேரா நாடாக மாற்றும் முயற்சிக்கு அவர் தலைமை தாங்கினார். 1960_1965, 1970_1977 மற்றும் 1994_2000 ஆகிய காலப்பகுதிகளில் திருமதி பண்டாரநாயக்கா பிரதமராகப் பதவி வகித்தார். பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபடுவதற்காக 1972 இல் முன்வைக்கப்பட்ட குடியரசு அரசியலமைப்பின் மூலம் இலங்கையை இறையாண்மை கொண்ட நாடாக மாற்றுவதற்கு இவர் நடவடிக்கை மேற்கொண்டார்.

2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில் வாக்களித்துவிட்டு நிட்டம்புவ ஸ்ரீ சங்கபோதி கல்லூரியில் இருந்து கொழும்புக்கு வந்துகொண்டிருந்த போது, வழியில் திடீரென சுகவீனமுற்ற நிலையில் அவர் மரணமடைந்தார்.

# இந்திய இடைத்தேர்தலில் இந்திய கூட்டணியின் எழுச்சி!



இந்தியாவின் பெரும் பணக்காரர்களில் ஒருவரான அப்பானியின் மகன் ஆனந்த் அம்பானி_ ராதிகா மெர்ச்சன்ட் திருமணக் கொண்டாட்டத்தில் இந்தியாவில் 7 மாநிலங்களில் 13 தொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தல் பற்றி அதிகமாக பெறப்படாமலே கடத்தப்பட்டிருக்கிறது. 7 மாநிலங்களில் நடந்த 13 தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி 10 இடங்களை வென்றுள்ளது. பா.ஜ.க கூட்டணி இரண்டு இடங்களிலும் சுயேச்சை ஒரு இடத்திலும் வெற்றி பெற்றிருக்கின்றன.

இடைத்தேர்தலைப் பொறுத்தவரையில் ஆளுங்கட்சியாக இருப்பவர்களே அதிகம் வெற்றி பெறுபவர்களாக இப்பதுதான் வரலாறாக இருந்துள்ளது. தற்போது நடந்திருக்கும் இடைத் தேர்தலில் எதிர்க்கட்சியாக இருக்கும் இந்தியா கூட்டணியே அதிக இடங்களை வென்றிருப்பது ஆச்சரியத்தை தருவதோடு, பா.ஜ.க கூட்டணி மீதான மக்களின் வெறுப்பு இன்னும் இருக்கிறது என்பதையே காட்டுகிறது. இந்தத் தேர்தல் முடிவு நாட்டில் மாறிவரும் அரசியில் சூழலை பிரதிபலிப்பதாக காங்கிரஸ் கூறியுள்ளது. தமிழ்நாட்டில் விக்ரவாண்டி, மேற்குவங்கம் (4 தொகுதிகள், இமாச்சல பிரதேசம் (3), உத்தரகாண்ட் ( 2), பஞ்சாப் (1), மத்திய பிரேதேசம் (1) பீகார் (1), ஆகிய 7 மாநிலங்களில்

### பா.ஜகவுக்கு தொடர் வீழ்ச்சி

13 தொகுதிகளில் ஜுலை 10 ஆம் திகதி சட்டப் பேரவைக்கான இடைத்தேர்தல் நடைபெற்றது, இதில் காங்கிரஸ் , திமுக, திரிமுணல் காங்கிரஸ், ஆம் ஆத்மி ஆகிய இந்தியா கூட்டணி கட்சிகள் பா.ஜ.கவை எதிர்த்துப் போட்டியிட்டன,

மக்களவை தேர்தல் முடிந்த நிலையில் நடக்கும் இடைத் தேர்தல் என்பதால் இதன் முடிவு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது, இத்தேர்தலில் பதிவான வாக்குகள் ஜுலை 14 ஆம் திகதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.இதில் இந்தியா கூட்டணி 10 இடங்கங்களில் வென்று இந்திய அரசியலை திரும்பிப் பார்க்க்க வைத்துள்ளது. ஆளும் கட்சியாக இருக்கும் பா.ஜ.க நின்ற தொகுதிகளில் ஏன் அதிக இடங்களை இழந்துள்ளது என்பதும் வினாவாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் விக்ரவாண்டி தொகுதியில் நின்ற தி.மு.க வேட்பாளர் அன்னியூர்சிவா அதிக வாக்குகளைப் பெற்று சாதனை வெற்றி பெற்றுள்ளார்.

## மானுடவியல்



173

துயிலும்போது, பரமசிவன் அவ்விருவருக்கும் சொப்பனத்திலே தோன்றி, "காலபேதத்தினாலே நீங்கள் மனவாட்டம் அடையீர்களாயினும், உங்களை வழிபடுகின்ற அடியார்களுடைய வருத்தத்தை நீக்கும் பொருட்டு, இப்பஞ்சம் நீங்கும்வரைக்கும் நாம் தினந்தோரும் திருக்கோயிலின் கிழக்குப்பீடத்திலும் மேற்குப்பீடத்திலும் ஒவ்வொரு காசு உங்களுக்குத் தருகின்றோம்" என்று சொல்லி, மறைந்தருளினார்.

பிள்ளையார் விழித்தெழுந்து, திருவருளைத் துதித்து, அப்பமூர்த்தியோடு திருக்கோயிலிற் புகுந்தபோது, கிழக்குப்பீடத்திலே காசு இருத்தலைக் கண்டு, விருப்பத்தோடுந் தொழுது, அதனை எடுத்து, "நாடோறும் சிவனடியார்களெல்லாரும் வந்து அமுது செய்யக்கடவர்கள்" என்று இரண்டு காலங்களிலும் பறைசாற்றித் தெரிவித்து, தம்முடைய திருமடத்தில் வரும் அடியார்களுக்குக் கறி, நெய், பால், தயிரோடு அன்னம் இட்டுக்கொண்டு இருந்தார். அப்பமூர்த்தியும் மேற்குப்பீடத்தில் வைக்கப்படும் காசை எடுத்து, அப்படியே அடியார்களைத் திருவமுது செய்வித்தார். இப்படி நிகழுநாளிலே, பிள்ளையார், அப்பமூர்த்தியுடைய திருமடத்திலே அடியார்கள் காலம்பெறத் திருவமுதுசெய்தலைக் கண்டு தம்முடைய திருமடத்திற் பாகுகர்களை நோக்கி, "நீங்கள், காலம்பெற அமுது பாகம்பண்ணி இங்கே வரும் அடியார்களுக்குக் கொடாமைக்குக் காரணம் யாது" என்று வினாவியருளினார். பாகுவர்கள் பாலறாவாயரை வணங்கி நின்று, "சுவாமி! தேவரீர் கடவுளிடத்திற் பெறும் படிக்காசைத் தினந்தோறும் பண்டம் வாங்குவதற்குக் கொண்டுபோனால் அதற்கு வாசி கேட்கின்றார்கள். அப்பமூர்த்தி பெற்றகாசையோ வாசியின்றி ஏற்றுக் கொள்கின்றார்கள். இதினாலே காலந்தாழ்க்கின்றது" என்றார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு, அப்பமூர்த்தி கைத்தொண்டு செய்தலால் அவர் பெறுங்காசு வட்டமின்றி ஏற்கப்படுகின்றது என்று சிந்தித்து, "இனி வரும் நாட்களிலே தருங்காசு வாசி தீரும்பொருட்டுப் பாடுவேன்" எனத் திருவுளங்கொண்டார். மற்றநாள் திருக்கோயிலிலே புகுந்து, சிவபிரானை வணங்கி,

"வாசிதீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீ ரேச லில்லையே"

என்னுந் திருப்பதிகம் பாடி, நற்காசு பெற்றார். அந்த காசைப் பாகுகர்கள் கொண்டுபோய்க் கடையிலே காட்ட; அங்குள்ளோர் "இக்காசு மிக நன்று; வேண்டுவனவற்றை நாந்தருவோம்" என்று கொடுத்தார்கள். அன்று தொடங்கிப் பாகுகர்கள் அடியவர்களைக் காலம்பெறத் திருவமுதுசெய்தார்கள். இருவருடைய திருமடங்களிலும் நாடோறும் எண்ணிறந்த சிவனடியார்கள் வந்து திருவமுது செய்தார்கள். இவருடைய திருமடங்களிலும் நாடோறும் எண்ணிறந்த சிவனடியார்கள் வந்து திருவமுதுசெய்து மகிழ்ந்திருக்குங்காலத்திலே; எங்கும் மழை பெய்து தானிய முதலியவைகள் மிக விளைந்தமையால், உயிர்களெல்லாம் துன்பம் நீங்கி இன்பமுற்றன.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# களுவாஞ்சிகுடி ஸ்ரீ வீரபத்திரர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம்



களுவாஞ்சிகுடி வரலாற்று புகழ்மிகு ஆலயமாக ஸ்ரீவீரபத்திரர் ஆலயம் திகழ்கின்றது. இவ்வாலயத்தின் உற்சவமானது எதிர்வரும் 24 ஆம் திகதிஆரம்பித்து 29 ஆம் திகதி சமுத்திர தீர்த்தத்துடன் நிறைவுபெற இருக்கின்றது.

1107ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்டகாலப்பகுதியில் இந்தியாவில் இருந்து வந்த மகோன் மன்னனின் வருகையின் பின் தமிழ் பகுதிகளில் காணப்பட்ட ஆண்டவனின் அருள் தங்கிய இடங்கள் எனக் கூறப்படும் சிறப்புமிகு ஆலயங்களை அதாவது பண்டைய திருப்படைக் கோவில்களை பரிபாலனம் செய்வதற்காக வேளாளர் குலத்தினரை நியமித்தான். அதன் பிரகாரம் களுவாஞ்சிகுடிபகுதியில் மகோன் மன்னனால் கவுத்தன்குடி மக்களை கோவில் போரதீவு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயிலைபரிபாலனம் செய்வதற்காக குடியமர்த்தினான் என பழைய சரித்திரம் கூறுகின்றன.

கவுத்தன்குடி மக்களின் ஆதிமூல குல தெய்வமாகிய வீரபத்திரர் சுவாமியினையும் காலம் தவறாது வழிபட்டு வந்தனர். கவுத்தன்குடிவம்சத்தில் மூதாட்டியாகிய 'வவுணி' என்ற பெண் வீரபத்திர சுவாமியின் வழிபாட்டிற்கான பத்தாசிகளையும் பேழைகளையும் கொங்குநாட்டிலே இருந்து இலங்கைக்கு கொண்டு வந்ததாகவும் அதுவும் முதன் முதலில் பருத்தித்துறைக்கு கொண்டு வந்தார். பின்னர் திருகோணமலையூடாக மண்முனைத்துறைக்கு கொண்டுவந்தார். பின்னர் பட்டிருப்புதுறையினூடாக வந்து களுவாஞ்சிகுடியை வந்தடைந்தார. கவுத்தன்குடி மக்களின் ஆதிமூல குலதெய்வமாகிய வீரபத்திரர் சுவாமியின் சடங்குமுறைகள் தொடர்பாக வவுணி கொண்டு வந்து கொடுத்த பத்தாசியைப் படித்து பட்டன்மார்கள் சடங்குமுறைகளை செய்து வந்தனர்.

'வவுணி'சாமிப் பெட்டியை பட்டன்மார்களிடம் ஒப்படைத்த வரலாற்றுக் கதையினை சடங்கு காலங்களில் அல்லது உற்சவ காலங்களில் தமது பாடல்களிலேயே பாடினார்கள். அந்தவகையில்

கொங்குநாட்டிலே இருந்து ஓ அவர்
கொங்குநாட்டிலே ஓரார்க் கடந்தாராம்; ஓ அவர்
பருத்துத்துறையிலே வந்தமர்ந்தாராம்; ஓ அவர்
பருத்தித் துறையிலே ஓரார்க்;கடந்தாராம்; ஓ அவர்
திருகோணமலையிலே வந்தமர்ந்தாராம்; ஓ அவர்
திருகோணமலையிலே ஓரார்க் கடந்தாராம் ஓ அவர்
மண்முனைத்துறையிலே வந்தமர்ந்தாராம் ஓ அவர்
மண்முனைத்துறையிலே ஓரார்க் கடந்தாராம்; ஓ அவர்
பட்டிருப்புத்துறையிலே வந்தமர்ந்தாராம்; ஓ அவர்
பட்டிருப்புத்துறையிலே ஓரார்க்;கடந்தாராம் ஓ அவர்
களுவாஞ்சிகுடி நகரிலே வந்தமர்ந்தாராம்; ஓ

என்று களுவாஞ்சிகுடியில் பதிகொண்டருளிய வீ ரபத்திரர் சுவாமியை கவுத்தன்மார்கள் தாலாட்டினால் பாடி சிறப்பூட்டிள்ளார்கள்.

1107 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் கவுத்தன்; குடி மக்களின்பட்டன்மார்களால் கொத்துப்பந்தலிட்டுவழிபட்டுசடங்குகளைகவுத்தன்மார்கள் நடாத்திவந்துள்ளதுடன் ஆண்டுகளுக்குஒருமுறை இடம்பெறும் சடங்குகளில் கவுத்தன்மார்கள் ஆலயத்திலே தங்கியிருக்கும் வழமையும் காணப்பட்டவை சிறப்புமிக்கவையாகும். பட்டன்மார்களினைத் தொடர்ந்து சடங்கு செய்பவர்களினை பெரிய கவுத்தன்,சின்னக்கவுத்தன் என அழைக்கும் வழமை காணப்பட்டமையை அண்ணன்பெரியகவுத்தனும், தம்பி சின்னகவுத்தனும் எனஅழைக்கப்பட்டு இருவரும் ஒற்றுமையாக சடங்கு சம்பிரதாயங்களை செய்து வந்துள்ளனர். இருப்பினும் பலஆண்டுகளுக்குமுன்னர் சின்னப்பட்டன் தனது சாமிப்பெட்டியை எடுத்து வந்து சின்னப்பட்டன் கடற்கரைவீதியில் வைத்து வழிபட்டு வருகின்றனர். இதனால்களுவாஞ்சிகுடிஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் பெரியகவுத்தன் குடிமக்களால் வழிநடத்தப்பட்டு வருகின்றன.

கவுத்தன்மார்கள் பத்தாசிகளைஆர்வத்துடன் படித்து தீயசக்திகள், நோய், பிணிகளை நீக்கும் முறைகளை சடங்கு முறைகளை வைத்து கற்றுக் கொண்டதுடன் மரத்தினை குடைந்து தோலினால் நூலுடன் சேர்த்து உருவாக்கப்பட்ட சவணிக் கை உடுக்கு ஆகியனஅடித்து வீரபத்ர சுவாமி தாலாட்டும் பாடிமகிழவைத்ததோடுகிராமத்தில் உள்ள மக்களும் கட்டுரைத்து பேய்; பிணி சூனியங்களை அகற்றி வந்தமை சிறப்பான ஒன்றாகும். தக்கனை அளித்தன் வரலாற்று பிரகாரம் வீரபத்திர பெருமானுக்கு பலி கொடுப்பது வழமையாக காணப்பட்டது. இந்தநடைமுறை ஆரம்ப காலத்தில் எமது கவுத்தன்; மக்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அந்த அடிப்படையில் வீரபத்திரர், வீரம்மா காளி; ஆகியோருக்காகவும் வீரபத்திரனின் தளபதியான இருளன், மருளன் ஆகியோருக்கும் வெள்ளைசேவல் ஆட்டின் செவிபாணிச் சேவல் ஆகியன பலியாக கொடுக்கும் வழமை நிலவி வந்துள்ளது. இதன்போது ஆலயத்தில் கடமையாற்றி காலம் சென்ற கவுத்தமர்களின் பெயர்களைச் சொல்லி என் குருநாதன்.... (ஓகோ) கன்னி கவுத்தனுக்கு காக் கொண்டு வாரேன்....(அன்னிக்கே) என்றவாறாக சின்னப்பு கவுத்தன்; முதல் கந்தசாமி கவுத்தன் வரை இருபத்தொரு கவுத்தமர்களின் பெயர்களைச் சொல்லி அன்னைக்கே கூறும் வழமை காணப்பட்டதனை அறியகிடைக்கின்றன. இவ்வாறான ஆரம்ப காலப் பகுதியில் இருபத்தொரு கவுத்தன்மார்களால் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதுடன் பின்னர் இந்து கலாச்சாரஅமைச்சினால் இலங்கை பூராகவும் பலி கொடுக்கும் முறை தடைசெய்யப்பட்டதனை தொடரந்து சடங்கு முறை நீக்கப்பட்டு ஆகம முறைப்படி திருவிழாவாக மாற்றம் செய்யப்பட்டு தொடர்ச்சியாக நடைபெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கவையாகும்.

எனவே பழமையும் பெருமையும் மிக்க ஸ்ரீவீரபத்திர ஆலய உற்சவத்தில் அடியார்கள் கலந்து கொண்டு நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி அவன் அருள் பெறுக.

கலைச்சுடர், இலக்கிய வித்தகர்
**நாராயணபிள்ளை நாகேந்திரன்**
ஓய்வு நிலைஅதிபர்–களுவாஞ்சிகுடி.




## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**20162) வாஸ்து சாஸ்திரம் என்பது என்ன?**

வீடு, மனை ஆகியவற்றின் அமைப்பு பற்றிய தகவல்களை சொல்வது என்பதாக அறியப்பட்டுள்ளது.

**20163) வாஸ்துவின் அடிப்படை நிலைகள் எத்தனை பிரிவுகளாக அமைந்துள்ளன?** நான்கு

**20164) அந்த நான்னு நிலைகளும் எவை?**

பூமி வாஸ்து , கட்டிட வாஸ்து, இருக்கை வாஸ்து, வாகன வாஸ்து

**20165) வீடுகள், அடுக்குமாடிகள், பொது கட்டமைப்புகள் ஆகியவற்றின் வகைக்கேற்ப அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய உள் கட்டமைப்புகள் பற்றிய அனைத்து தகவல்களையும் விளக்குவது எது?**

பூமி வாஸ்து

**20166) பூமி வாஸ்துவில் வேறு என்ன குறிப்பிடப்படும்?**

கட்டுமானம் அமையும் இடத்தின் நான்கு பிரதான திசைகள் மற்றும் அவை இணையும் நான்கு கோண திசைகள் பற்றியும், அவற்றின் அமைப்புகள் பற்றியும் இப்பகுதி குறிப்பிடும்

**20167) வீடுகள், அடுக்குமாடிகள், பொது கட்டமைப்புகள் ஆகியவற்றின் வகைக்கேற்ப அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய உள் கட்டமைப்புகள் பற்றிய அனைத்து தகவல்களையும் எப்பகுதி தரும்?**

கட்டிட வாஸ்து

**20168) வீடுகள் மற்றும் வியாபார, தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட இதர கட்டமைப்புகளில் அமரும் இருக்கைகள், ஊஞ்சல்கள், படுக்கைகள் அமைக்கும் விதம் ஆகியவை பற்றி கூறுவது எப்பகுதி?**


இருக்கை வாஸ்து

**20169) அவற்றின் மூலம் கிடைக்கும் நன்மை என்ன?**

வாழ்க்கை பாதையை இனிமையாக மாற்றிக்கொள்ள தக்க வழிகளை காட்டுவதாகவும்.

**20170) இருசக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள் உள்ளிட்ட மற்ற போக்குவரத்துச் சாதனங்கள் பற்றி எப்பகுதி குறிப்பிடுகிறது?** வாகன வாஸ்து

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 95



சுகபோக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தால், முக்திக்கான வாழ்க்கை எட்டாக் கனியாகி விடும். பசிக்கு உணவு, உடம்பை மறைப்பதற்குத் துணி, என்று வாழ்ந்து சுகபோகங்களை துறந்தால், முக்திக்கான வாழ்க்கை நம் எதிரில் நிற்கும். ஆண்டவன் உலகை படைத்த நாள் முதல், இன்றளவும் ஒவ்வொரு மேன்மையானவரின் சரித்திரம் இதுவே. சுகபோகங்களை துறந்து, தியாக வாழ்க்கையை மேற்கொள்வது மேன்மையை அடைவதற்கான வழியாகும். ஆத்ம முன்னேற்றத்திற்கு இது ஒன்றே சிறந்த வழியாகும்.

தீர்த்தயாத்திரை மூலமோ, விரதம் இருப்பதாலோ, யோகப் பயிற்சி, மூச்சு பயிற்சி செய்வதாலோ, மனம், உடல் ஆகியவை வலுப் பெறுமே தவிர, கடவுளை அடைய முடியாது. கடவுளை வயப்படுத்த, மன உறுதி, மனக்கட்டுப்பாடுடன் கூடிய, செயலில் வெற்றி கொள்ளத் தக்க, சாதனாவின் மூலம் மட்டுமே இயலும். தனிமனித வாழ்வில் பிறருக்கு முன் உதாரணமாக வாழ்ந்தவர்கள் போற்றத் தகுந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் மூலமே உலகத்தில் மக்கள் நலம் உண்டாகியுள்ளது. எனவே நாம் மன பலம் படைத்தவர்களாகவும் ஆத்ம பலம் படைத்தவர்களாகவும் மாறுவோமாக.

இன்றைய உலகம் மூடத்தனம் மற்றும் மூட நம்பிக்கை என்னும் சங்கிலிகளால் இறுக்கப்பட்டுள்ளது. இச்சங்கிலியில் கட்டுப்பட்டு கிடக்கும் மாந்தரை நினைத்தால் என் மனம் துடிக்கிறது. ஒவ்வொரு மனிதனின் துன்பத்திற்கும், சமுதாயத்தின் இந்த அவல நிலைக்கும் மக்களின் மூட நம்பிக்கை தான் காரணமென, கிழக்கில் உதிக்கும் சூரியன் போல் தெள்ளத் தெளிவாக எனக்குத் தெரிகிறது.

உலகில் எங்கிருந்து ஒளி பிறக்கும்? தியாகத்தினால் மட்டுமே இது நிறைவேறும். தியாக உள்ளம் கொண்ட வீரன் மற்றவர்க்கு முன்னுதாரணமாய்த் திகழ்கிறான். பின்னர் பலரும் அவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகின்றனர். வெளிச்சத்தை உருவாக்கும் இந்த தியாக வீரர்களின் செயல், ஆதிகாலத்திலிருந்தே நடந்து வருகிறது. இப்பூவுலகில் பற்பல வீரர்கள், உத்தமர்கள், புனிதர்கள், மஹாத்மாக்கள் தோன்றியுள்ளனர்.

அவர்கள் யாவரும் தியாக வாழ்க்கை மேற்கொண்டு வாழ்ந்து காட்டினர். நாம் நம் சுகபோகங்ளை துறந்தால் தான், மற்றவர்களுக்கு சுகங்களை நாம் வழங்க முடியும். அதற்கான வழியைக் காட்ட முடியும். உண்மையான அன்பு எல்லையில்லா கருணை கொண்ட இதயங்கள் துணிச்சலுடன் செயலாற்றுபவர்கள், எந்தளவிற்கு இன்றைய நாளில் தேவைப் படுகிறதோ, அந்தளவிற்கு வேறு எந்த காலத்திலும் தேவைப்பட்டதில்லை.

# மட்டக்களப்பு ஆரையம்பதி ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய உற்சவம்



மீன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு என்னும் மண் புகழ் நாட்டின் தெற்கே நான்கு மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள பொங்கும் நிலம்நிறை ஆரை நகர் என்னும் அழகிய நகரிலே அமைந்துள்ளது அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம். இவ்வாலயத்தின் குரோதி வருட சடங்குப் பெருவிழா கடந்த 20ஆம் திகதி பிரம்மமுகூர்த்தத்தில் திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமானது. இவ்வாலய திருவிழா, எதிர்வரும் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் இன்று 22ஆம் திகதி திங்கட்கிழமை விசேட பூசையும் ஆராதனையும் நாளை 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கும்ப ஊர்வலச் சடங்கும் எதிர்வரும் 24ஆம் திகதி விசேட பூசையும் ஆராதனையும் 25ஆம் திகதி வீரகம்பம் வெட்டுதலும் பலிச்சடங்கும் 26ஆம் திகதி பக்திமிகு தீமிதிப்பு வைபவமும் 27ஆம் திகதி பள்ளையச்சடங்கும் சமுத்திர தீர்த்தமும் இடம்பெறும்.

ஆலய பிரதம பூசகர் சக்திஸ்ரீ யூ மகேந்திரராஜா (வைத்தியர்), தலைமையில் உதவிப் பூசகர்களான சக்தி ஸ்ரீ ம. முரளிதரன், சக்திஸ்ரீ பா அருணன் ஆகியோர் இந்த விஷேட பூஜை கிரியைகளை நடத்தி வருகிறார்கள்.

இவ்வாலயத்தின் தீமிதிப்பு உற்சவம் எதிர்வரும் 2024.07. 26ஆம் திகதி ஆடி வெள்ளியன்று இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 2024.07. 28ஆம் திகதி மாலை வைரவர் பூசை நடைபெறவுள்ளது.



கலாபூஷணம்
**இராசையா கிருஷ்ணப்பிள்ளை**



அச்சுவேலி உலவிக்குளம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் ஆனிமாதம் பௌர்ணமியை நிறைவாக கைக்கொண்டு 11 நாட்கள் மஹோற்சவம் நடைபெறும். ஆயினும் இவ்வருடம் பாலஸ்தாபனம் நிகழப்பெற்றிருப்பதன் காரணமாக விசேட அபிஷேகம் பூஜை நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்தில் வியாழக்கிழமைதோறும் நடைபெறும் அகிலமெங்கும் ஒலித்திடும் சிவநெறிய திருமுறை விண்ணப்ப தெய்வீக அரங்கின் தெய்வக் குழந்தை செல்வி. மதுவந்தி மயூரனின் திருமுறை விண்ணப்பம் சிறப்புடன் நடைபெற்றது.



கொழும்பு–15 அளுத்மாவத்தை அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானத்தின் வருடாந்த தீர்த்தவாரி உற்சவத்தில் சுவாமிகள் அலங்கார சித்திரத்தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி வழங்குவதை படங்களில் காணலாம். (வட கொழும்பு தினகரன் நிருபர்)

# மக்களின் நலன்களுக்காக அரச ஊழியர்களின் அர்ப்பணிப்பு அவசியம்

## ஊடகத்துறை அமைச்சர்

நாட்டின் ஒவ்வொரு பதின்மூன்று குடிமக்களுக்கும் ஒரு அரச ஊழியர் உள்ளதாக போக்குவரத்து, நெடுஞ் சாலைகள் மற்றும் வெகுஜன ஊட கத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வெகுஜன ஊடகத்துறை அமைச் சர் நேற்று (21) ஹோமாகம புதிய நான்கு மாடிகளைக் கொண்ட பிரதேச செயலகக் கட்டடடத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனை தெரி வித்தார்.

அமைச்சர் கலாநிதி பந்துல குண வர்தன அவர்களின் அழைப்பின் பேரில் பிரதமர் தினேஷ் குணவர் தன இந்த புதிய பிரதேச செயலாளர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்.

இங்கு பேசிய அமைச்சர்: இந் நாட்டு மக்களின் நலன்களை நிறை வேற்ற பிரதேச செயலகங்களின் உத் தியோகத்தர்கள் பல கடமைகளைச் செய்ய வேண்டியுள்ளது. மாவட்டச் செயலாளர் போன்று இப்பிரதேசத் தில் உள்ள தலைமை அரசு அதிகா ரியான, பிரதேச செயலாளருடன் இணைந்த பெரும் அரச அதிகாரி கள் குழு உள்ளது. இலங்கையில் சுமார் பதினாறு லட்சம் அரச ஊழி யர்கள் உள்ளனர். அதிபர்கள் ஆசிரி யர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், பொலிஸார், ஆயுதப்படை பாது காப்புப் படை, கிராம சேவகர்கள், விவசாய அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள் என சுமார் பதினாறு லட்சம் அரச அதிகாரிகள் உள்ளனர். மாத இறுதியில் இவர்களுக்கு சம்ப ளம் வழங்குவது எந்த அரசாங்கத்தின தும் முக்கிய பொறுப்பாகும். கடந்த காலத்தில் எந்த அரசுக்கும் போதிய வருமானம் கிடைக்கவில்லை. அரசு நினைப்பது போல் செலவு செய்ய வழியில்லை. அனைத்து செலவுக ளும் நாட்டின் வரிகளால் செலுத்தப்ப டுகின்றன. அதை மக்களிடமிருந்தும் பிற வழிகளிலும் பெற வேண்டும்.

எவ்வித தயக்கமுமின்றி எமது பிரதேச செயலாளரின் அங்கீகாரம் இன்றி, மாவட்ட செயலாளரின் அனு மதியின்றி மகா சங்கரத்ன எதிர்ப் புக்கு மத்தியில் ஹோமாகம தேர்தல் பிரிவில் மதுபான உரிமம் வழங்கப் பட்டு வருகிறது.

பிரதேச பொசன் வலயம் நிறை வடைந்ததையடுத்து மீண்டும் வீதியின் இருபுறமும் ஏராளமான பார்கள் திறக்கப்படுகின்றன. இது நிறுத்தப்பட வேண்டும். இந்த நாட்டின் பிரஜையான அநகாரிக தர் மபாலவின் பேரனாக இந்தப் பகு தியைப் பிரதிநிதித்துவப்படுத்திய கபினட் அமைச்சர் காமினி ஜயசூரிய ஹோமாகம தொகுதியில் கொள்கை ரீதியாக மதுக்கடைகள் திறக்க அனும திப்பத்திரம் வழங்கவில்லை. . என் னுடைய கொள்கையும் அதுவே.



கொழும்பு, ஜெயந்திநகர் ஜிந்துபிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் ஆடிவேல் விழாவை முன்னிட்டு கடந்த (20.07.2024) சனிக்கிழமை மாலை தமிழகத்தின் பிரபல ஆன்மீக சொற்பொழிவாளர் திருமுருகவள்ளல் கிருபானந்தவாரியார் சுவாமிகளின் மாணவி 'கலைமாமணி' 'வாகீசகலாநிதி 'திருமதி. தேசமங்கையர்க்கரசி உரையாற்றுவதையும் அவருக்கான கௌரவத்தை ஆலய நிர்வாகிகள் வழங்குவதையும் கலந்துகொண்ட மண்டபம் நிறைந்த கூட்டத்தையும் காணலாம்.

## கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி







தினகரன் THINAKARAN

தினகரன் வாரமஞ்சரி



தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகை களின் ஊடக அனுசர ணையுடன் கொழும் பில் இயங்கிவரும் நம்பிக்கை நற்பணி மன்றம் நடத்தும் கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணத்திற்கான அணிக்கு அறுவர் கொண்ட மாபெரும் மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வ ரும் 27, 28 ஆம் திகதிகளில் பொரளை, பேஸ்லைன் வீதியிலுள்ள ரயில்வே கிரிக் கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முதலாம் இடத்துக்குத் தெரிவாகி வெற்றி பெறும் அணிக்கு ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும் கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணமும் பரிசாக வழங்கப்ப டும்.

இரண்டாம் இடத்துக்கு (Runner up) தெரிவாகும் அணிக்கு 50,000 ரூபா பணப் பரிசும் கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணமும் பரிசாக வழங்கப்படும்.

அது தவிர ஆட்ட நாயகனுக்கு 7000 ரூபா பணப்பரிசும் சிறந்த தொடர் நாய கனுக்கு 5000 ரூபா பணப்பரிசும் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர் ஆகியோருக்கு 3000 ரூபா பணப்பரிசும் வழங்கப்படும். இதில் 32 அணிகளுக்கு மட்டும் தான் பங் குபற்ற வாய்ப்பு வழங்கப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 0760095799 என்ற தொலைபேசி இலக்கத் தில் ஜி. சேகரிடம் அல்லது 0773867585 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம். பரமுவிடம் அல்லது 0771784923 என்ற தொலைபேசி இலக்கத்தில் கனகராஜிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள லாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## IMF பிரதிநிதிகள் குழு...

இலங்கை வரவுள்ளதாக அவர் தெரிவித் துள்ளார்.

அது தொடர்பில் ஊடகவியலாளர்க ளுக்கு கருத்து தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர்: பொருளாதார முன்னேற்றத்தை பாதிக்காத வகையில் எதிர்வரும் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர் பார்த்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத் தின் மூன்றாவது மீளாய்வுக்கு தயாராக வேண்டியுள்ளது. எனினும் இம்முறை இடம் பெறுவது மூன்றாவது மீளாய்வுக்கான தூதுக் குழுவின் பேச்சு வார்த்தையல்ல.

நாட்டின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர் பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே இந்த பிரதிநிதிகள் குழு இலங்கை வரவுள் ளது. நாடு பொருளாதாரத்தில் முன்னேறி வருவதுடன் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 5.1 வீத பொருளாதார வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது. இந்த பொருளா தார முன்னேற்ற நிலையை வருடம் முழு வதற்கும் தக்க வைத்துக் கொள்வதே எமது எதிர்பார்ப்பு. எவ்வாறெனினும் தேர்தல் காலங்கள் பொருளாதார முன்னேற்ற வேகத்திற்கு தடையாக அமையாது என்பதே எமது நம்பிக்கை. இவ்வாறு தடையாக அமையாவிட்டால் இந்த வருடத்தில் 3.5 வீத பொருளாதார வளர்ச்சி வேகத்தை எட்ட முடியும். இது சிறந்த பெறுபேறாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## க்ளப் வசந்த...

உத்தரவு பிறப்பித்துள்ளது. கைது செய் யப்பட்டிருந்த மேற்படி யுவதி நேற்றைய தினம் கடுவலை பதில் மாஜிஸ்திரேட் நீதவான் முன்னிலையில், ஆஜர் செய்யப் பட்டதையடுத்தே நீதவான் மேற்படி உத்தர வைப் பிறப்பித்துள்ளார்.

மேற்படி யுவதியை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கான அனுமதியை பொலிசார் நீதிமன்றத்திடம் கோரியிருந்த னர். அதற்கிணங்கவே அந்த உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

இந்த யுவதி அத்துறுகிரிய பிரதேசத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். க்ளப் வசந்த படுகொலை சம்பவத்திற்கு உதவி, ஒத்துழைப்புக்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைதானதாகவும் பொலிஸார் தெரிவித்த னர்.

## பங்களாதேஷ்...

உயிர்களையும் அரசாங்க உடமைகளை யும் பாதுகாக்கும் நோக்கில் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்ற னர்.இந்நிலையில் இலங்கையை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் தலைநகர் டாக்காவில் சிக்குண்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. எனினும், இணைய மற்றும் தொலைபேசி சேவைகள் பாதிக்கப்பட்டுள் ளதால் மாணவர்களைத் தொடர்புகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை யில் தலைநகர் டாக்கா மற்றும் சிட்டகொங் கில் பல்கலைகழகங்களில் சிக்கியுள்ள இலங்கை மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யுமாறு கோரி, பங்களாதேஷிற் கான இலங்கைதூதுவர் தர்மபால வீரக் கொடி கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார். மாணவர்களின் பெற்றோர்களுடன் தூதுவர் தொடர்ந்தும் தொடர்புகளை பேணி வருவ தாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## முட்டையை...

திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. முட்டை விலை உயர்வைத் தக்க வைத்துக் கொள்ள, உற்பத்தியாளர்கள் சந்தைக்கு விநியோகிக்கும் முட்டையின் அளவைக் கட் டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## 25 விரல்களுடன் ...

குழந்தையின் வலது கையில் 6 விரல் களும், இடது கையில் 7 விரல்களும், இரு கால்களிலும் தலா 6 விரல்களும் என மொத்தம் 25 விரல்களுடன் இக்குழந்தை பிறந்துள்ளது.

## தேசிய மக்கள்...

முடியும் எனவும் தேசிய மக்கள் சக்தி யின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். இதுவ ரையில் பொருளாதார செயற்பாட்டில் சேர்க் கப்படாத மற்றும் தேசிய பொருளாதாரத்தின் பங்களிப்புக்கு உட்படுத்தப்படாத பணத்தை மக்கள் வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட் டார். இந்தப் பணம் கறுப்புப் பணமாகக் கூட இருக்கலாம்என்றும் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்தார்.

## காணி உரிமை...

கொத்மலை தொகுதி அமைப்பாளர் சண்முகம் திருச்செல்வம் தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந் திப்பிலே, அவர் இவ்வாறு கூறியுள் ளார்.

## அபிவிருத்தியின்...

பிரதமர், அதன் மூலமான வெற்றி அனைவருக்குமானதே என்றும் தெரி வித்துள்ளார். நாட்டின் எதிர்கால பரம்ப ரைக்காக நம்பிக்கை மிகுந்த நாட்டை உருவாக்குவதற்கு, உற்பத்தித்திறனை அதிகரிப்பது அவசியம் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். ஹோமாகம பிரதேச செயலாளர் அலுவலக கட்டிடத்தை நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## மாணிக்க கங்கை...

நுழைவாயில் 50 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மாணிக்க கங்கையின் முதலாவது பாலத் திற்கு அருகாமையில் இந்த பாதம் கழுவும் நுழைவாயில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வரலாற்று ரீதியாக கதிர்காம திருத்தலத் திற்கு யாத்திரிகர்களாக வருகை தரும் பக்தர் கள், மாணிக்க கங்கையில் நீராடி அல்லது பாதம் கழுவியே மிக தூய்மையாக புனித பூமியில் பாதம் பதிப்பர்.

இந்தியாவின் கங்கை நதி போன்று இலங்கையில் கதிர்காமத்தில் மாணிக்க கங்கை மிகவும் பிரசித்தி பெற்றது.

## இன்றைய பலன்கள் (22.07.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தாலும் அனுகூலம் குறைவாகவே இருக்கும். நண்பர்கள் உறவினர்கள் தேவையான நேரத்தில் கண்ணில் பட மாட்டார்கள்.

**ரிஷபம் :**
எதிலும் கவனம் தேவை. இருப்பினும் எதிர்பார்த்த வெற்றிகள் தேடி வரக்கூடும். உங்கள் முயற்சிக்கு நண்பர்கள் உறவினர்களும் உதவியாக இருப்பர்.

**மிதுனம்:**
குழப்பமும் கவனக்குறைவும் ஏற்படும். முக்கிய பணிகளை தள்ளி வைப்பது நல்லது. நட்பு ரீதியான உதவியால் நல்ல முன் னேற்றங்களை சந்திப்பீர்கள்.

**கடகம்:**
கையெழுத்திடுவதில் கவனம் தேவை. முக்கிய பயணங்களை தள்ளி வைப்பது நல்லது. செய்யும் காரியங்களில் தடை ஏற்பட்டா லும் வழக்கமான திறமையால் சமாளிப்பீர்கள்.

**சிம்மம்:**
முக்கிய பேச்சுவார்த்தையில் கவனமும் கையெழுத்திடுவதில் பொறுமையும் அவசியம். பயணங்களால் திருப்தி ஏற்படுவீர்கள்.

**கன்னி:**
நினைத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். சில காரியங்களில் தேக்கம் காணப்பட்டாலும் தக்க நண்பர்களின் உதவியுடன் அவற் றில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்:**
நல்ல திருப்பங்களை சந்திக்கப் போகிறீர்கள். எதிர்பார்க்கும் செயல்கள் சிறு தடைக்கு பின்னர் வெற்றி அளிக்கும்.

**விருச்சிகம்:**
ஆன்மீக பயணங்களுக்கேற்ற சூழ்நிலை வரும். மகான்களின் சந்திப்பு மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

**தனுசு:**
சந்தர்ப்பங்கள் சாதகமாக அமைந்தாலும் காரியங்களில் சிறு இடையூறுகளை சந்திக்க நேரிடும். எதிர்பார்த்த தொகை கைக்கு கிடைப்பதில் தாமதங்கள் ஏற்படும்.

**மகரம்:**
கடினமாக உழைத்தாலும் வெற்றி பெற சிறிது பொறுமையாக இருப்பது நல்லது. எதிர்பார்க்கும் பண வரவு தாமதமாகலாம்.

**கும்பம்:**
நீங்கள் திட்டமிட்டு செய்யும் காரியங்கள் பலவற்றில் வெற்றியை அடைவீர்கள். நண்பர்களும் உறவினர்களும் உங்களுக்கு ஆதர வாக இருப்பார்கள்.

**மீனம்:**
தன்னம்பிக்கை அதிகரிக்கும். வரவேண்டிய பணம் கைக்கு கிடைப்பதில் தாமதம் ஏற்படும். கடன்காரர்களை சமாளிக்க சில நண்பர்களின் உதவியை நாட வேண்டியது இருக்கும்.

## ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவது...

பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக் னேஸ்வரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பா ணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித் தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில், ஜனாதிபதித் தேர்தலை பிற்போ டுவது முழு நாட்டுக்கும் நன்மை பயக்கும். அதிலும் குறிப்பாக தமிழர்களுக்கு நிச்சயம் நன்மையளிக்கும்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்த லில் எந்த வேட்பாளர் ஐம்பது வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற முடியாத நிலைமை காணப்படுகிறது.

## ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு...

நடத்தப்பட்டதை கருத்திற்கொண்டே இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரு மான சஜித் பிரேமதாசவுக்கு உயிர் அச் சுறுத்தல் உள்ளதாக வெளிநாட்டு புல னாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளமை பற்றியும் சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எதிர்க்கட் சியின் பிரதான அமைப்பாளர் சட்டத் தரணி லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் எதிர்க்கட்சி தலைவரின் செயலாளர் சட்டத்தரணி திசத் விஜயகுணவர்தன ஆகியோர் இது குறித்து சமீபத்தில் சபாநாயகரிடம் கோரிக்கையும் விடுத்தி ருந்தனர்.

## அசங்க அபேகுணசேகர...

தந்த அவர், கட்டுநாயக்க விமான நிலை யத்தை வந்தடைந்த போது குடிவரவு குடி யகல்வு அதிகாரிகளால் இவர் கைது செய் யப்பட்டுள்ளார். அசங்க அபேகுணசேகர முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒசி அபேகுணசேகரவின் மகனாவார்.

## அஸ்வெசும;...

ஆராயப்பட்டு அதற்காக நியமிக்கப் பட்டுள்ள விசேட குழுவினால், தகை மையுள்ள விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அச்சபை தெரி வித்துள்ளது. இவ்வாறு தெரிவு செய் யப்படும் நலன்புரி கொடுப்பனவுக்கான பயனாளிகளுக்கு ஏற்கனவே உள்ள ஆட்சேபனைகளை கவனத்திற் கொண்டு பொருத்தமற்றவர்கள் அந்த பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு நிவாரணம் பெறும் பயனாளிகள் தெரிவு செய்யப்படுவர் என்றும் அச்சபை தெரிவித்துள்ளது.

## நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு...

சார்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்வைத்தார். அப்போது மேடையில் அமர்ந்திருந்த பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர் கள் 28 பேர் உட்பட 380 முன்னாள் உள் ளூராட்சி சபை உறுப்பினர்களும் கூட்டத் தில் பங்கேற்ற 15,000 க்கும் மேற்பட்ட மக்களும் கைகளை உயர்த்தி ஏகமனதாக அந்த முன்மொழிவை ஆமோதித்தனர்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க: தம்மி டம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை சரியாக நிறைவேற்றியதாக குறிப்பிட்டதுடன், எப் போதும் தமக்காக அன்றி நாட்டுக்காகவே தாம், செயற்பட்டதாகவும் அவர் தெரிவித் தார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, மக்கள் எனக்கு வழங் கிய அடிப்படையான பொறுப்பை நான் நிறைவேற்றியுள்ளேன். பொருளாதார மும் அரசாங்கமும் இல்லாத நாட்டையே பொறுப்பேற்றேன். பதில் ஜனாதிபதியாக பதவியேற்கக்கூட அரசாங்க அலுவலகம் ஒன்று இருக்கவில்லை. எனக்கு கட்சியும் இருக்கவில்லை. எனது கட்சியில் நான் மட்டுமே பாராளுமன்றத்தில் இருந்தேன். அதன் படி ஐக்கிய தேசிய கட்சியினர் என்று நம்பி, ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஒத்து ழைப்பு கேட்டேன் ஒத்துழைக்கவில்லை. டலஸ்அழகப்பெருமவுக்கு ஆதரவளித்த னர்.

மக்கள் விடுதலை முன்னணி பொறுப் புக்களை ஏற்றுக்கொள்ள விரும்பமில்லாத காரணத்தினால், அவர்களும் எனக்கு ஆதர வளிக்க முன்வரவில்லை. பின்னர் பொதுஜ னபெரமுனவின் தலைவர் ஜீ.எல்பீரிஸிடம் ஒத்துழைப்பு கேட்டேன். அவர் என்னை சந் திக்க கூடதயாராக இருக்கவில்லை. நான் பேசினேன் அவர் என்னோடு பேசக்கூட தயாராக இருக்கவில்லை. பின்னர் மஹிந் தராஜகக்ஷவைச் சந்தித்து பேசினேன்.

அவர் ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்தார். அவ்வாறு ஆரம்பித்த அர சாங்கத்தில் நான் ஜனாதிபதியாக இருக்க எனக்கு ஒரு இடமிருக்கவில்லை. ஜனா திபதி மாளிகையில் ஒன்று கூடியிருந்த மக்கள் நீச்சல் தடாகத்தில் நீராடிக் கொண் டிருந்தனர். எனது வீடு எரிக்கப்பட்டிருந்தது. அலுவலகமும் முற்றுகையிடப்பட்டிருந்தது.

பிரதமர் அலுவலகம் மட்டும் எஞ்சியி ருந்ததால் அதன் மேல்மாடியில் நானும், கீழ்மாடியில் பிரதமர் தினேஸ் குணவர்த னவும் பணிகளைஆரம்பித்தோம். அதன் பின்னர்தான் ஐ.எம்.எப். உடன் கலந்துரை யாடி அடுத்தகட்ட பணிகளை ஆரம்பித் தோம்.அனைவரும்ஒன்றுபட்டேபணிகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

அரசியல் செய்து இந்த நாடுசீரழிக்கப் பட்டிருந்தது. இலங்கை பெருமைக்குரிய நாடு. இந்தநாடு இந்த நிலைக்குச் செல்ல வேண்டியது அவசியமா? மகாவம்சத்தில் கூட இந்தநாடு வங்குரோத்து நிலையை அடைந்திருந்தாக குறிப்பிடப்படவில்லை. கஷ்டமான தீர்மானங்களை நாம் எடுக்க வேண்டியிருந்தது.

# கைவிடப்பட்ட சொத்துக்கள் பற்றிய சட்டபூர்வ அறிக்கை
# HSBC வங்கி வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்

- 1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் திருத்தச் சட்டத்தின் 72 ஆம் பிரிவிற்கு அமைய வங்கியுடன் வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் கீழ்காணும் கணக்குகள் கைவிடப்பட்ட சொத்துக்கள் பிரிவில் உள்ளடங்கும்.
  - பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு எவ்வித செயற்பாடும் அற்ற வங்கிக் கணக்குகளில் வைக்கப்பட்டிருக்கும் வைப்புக்கள் அல்லது வேறு பணம்.
  - வாடகைக் காலம் முடிவடைந்ததும் வங்கியினால் அறிவித்தல் வழங்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த பின்பும் பதிலளிக்க தவறிய வாடிக்கையாளர்களினால் வங்கியின் பாதுகாப்புப் பெட்டகங்களில் வைக்கப்பட்டிருக்கும் பொருள்கள்.
- வங்கியியல் சட்டத்தின் 73 (i) ஆம் பிரிவிற்கு அமைய, கைவிடப்பட்ட சொத்தாக வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட பொருள்கள் தொடர்பான தகவல்களைக் கீழே தருகிறோம். இத்தகவல்கள் இலங்கை மத்திய வங்கிக்கும் அறிக்கையிடப்பட்டுள்ளன.
- எந்தவொரு வாடிக்கையாளரும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள கிளையொன்றில் தனக்கு கைவிடப்பட்ட சொத்து இருப்பதாகக் கருதினால், சம்பந்தப்பட்ட கிளையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.
- கைவிடப்பட்ட சொத்தாக வகைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்களின் பொருட்கள் பற்றிய தகவல்களைப் பயன்படுத்தி அத்தகைய சொத்துகளுக்கு உரிமை கோர உரிமையற்றவர்கள் முற்படக்கூடும் என்பதால், கைவிடப்பட்ட சொத்துக்களின் பாதுகாப்பை முன்னிட்டு அவற்றின் விரிவான விபரங்கள் வங்கியினால் வெளியிடப்பட மாட்டாது.
- கைவிடப்பட்ட சொத்தென அறிக்கையிடப்பட்ட சொத்தைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு, வங்கியானது ஏற்கனவே வாடிக்கையாளர்களின் கடைசியாகத் தெரிந்த முகவரிகளுக்கு, அறிவித்தல்களை அனுப்பியுள்ளது. அத்தகைய அறிவித்தல்களில் கைவிடப்பட்ட சொத்து பற்றிய முழு விபரங்களும் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| கிளைகளின் பெயர்கள் | கிளை தொலைபேசி இலக்கம் | நாணயம் | எண்ணிக்கைகளும் மொத்த மீதி நிலுவை முறிவுகளும் | | | வதைவுகள் மற்றும் முறையாவணங்களின் எண்ணிக்கை | | | பாதுகாப்பு பெட்டகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கணக்குகளின் எண்ணிக்கை | மொத்த கணக்குகளின் எண்ணிக்கை | முழு மொத்த மதிப்பு | மொத்த முறையாவணங்களின் எண்ணிக்கை | மொத்த கணக்குகளின் எண்ணிக்கை | முழு மொத்த மதிப்பு | |
| தலைமை அலுவலகம் | 0115451025 | அவுஸ்திரேலிய டொலர் | 1,118 | 2 | 34.95 | 295 | 4 | 1,269.73 | இல்லை |
| | | கனேடிய டொலர் | | 1 | 39.12 | | 1 | 75.00 | |
| | | யூரோ | | 4 | 339.21 | | 0 | 0.00 | |
| | | ஸ்ரேலிங் பவுண் | | 8 | 792.95 | | 8 | 503.80 | |
| | | ஹொங்கொங் பவுண் | | 0 | 0.00 | | 3 | 2,250.00 | |
| | | ஜப்பான் யென் | | 3 | 1,057,044.00 | | 0 | 0.00 | |
| | | இலங்கை ரூபா | | 1,041 | 9,135,950.84 | | 248 | 3,993,757.22 | |
| | | நியூசீலன்ட் டொலர் | | 0 | 0.00 | | 1 | 220.00 | |
| | | சிங்கப்பூர் டொலர் | | 2 | 26.95 | | 1 | 33.00 | |
| | | அமெரிக்க டொலர் | | 57 | 15,274.15 | | 29 | 23,990.43 | |
| கண்டி | 0814458100 | அவுஸ்திரேலிய டொலர் | 145 | 1 | 29.61 | 2 | 0 | 0.00 | இல்லை |
| | | யூரோ | | 3 | 10.63 | | 0 | 0.00 | |
| | | ஸ்ரேலிங் பவுண் | | 2 | 325.88 | | 0 | 0.00 | |
| | | இலங்கை ரூபா | | 135 | 146,143.57 | | 2 | 2,332.50 | |
| | | அமெரிக்க டொலர் | | 4 | 662.80 | | 0 | 0.00 | |
| வெள்ளவத்தை | 0114453655 | கனேடிய டொலர் | 192 | 1 | 0.00 | 5 | 0 | 0.00 | இல்லை |
| | | யூரோ | | 1 | 42.78 | | 0 | 0.00 | |
| | | ஸ்ரேலிங் பவுண் | | 8 | 1,103.36 | | 0 | 0.00 | |
| | | இலங்கை ரூபா | | 170 | 7,365,507.51 | | 5 | 409,193.50 | |
| | | அமெரிக்க டொலர் | | 12 | 3,969.98 | | 0 | 0.00 | |
| நுகேகொடை | 0114453565 | அவுஸ்திரேலிய டொலர் | 156 | 2 | 12.92 | 7 | 0 | 0.00 | இல்லை |
| | | கனேடிய டொலர் | | 1 | 48.76 | | 0 | 0.00 | |
| | | யூரோ | | 1 | 1,430.71 | | 0 | 0.00 | |
| | | ஸ்ரேலிங் பவுண் | | 4 | 88.59 | | 0 | 0.00 | |
| | | இலங்கை ரூபா | | 139 | 1,633,539.39 | | 7 | 18,347.02 | |
| | | அமெரிக்க டொலர் | | 9 | 33.90 | | 0 | 0.00 | |
| பம்பலப்பிட்டி | 0114453500 | அவுஸ்திரேலிய டொலர் | 354 | 3 | 2.93 | 10 | 0 | 0.00 | இல்லை |
| | | யூரோ | | 4 | 278.10 | | 0 | 0.00 | |
| | | ஸ்ரேலிங் பவுண் | | 9 | 382.23 | | 0 | 0.00 | |
| | | இலங்கை ரூபா | | 272 | 2,595,415.15 | | 10 | 281,138.74 | |
| | | அமெரிக்க டொலர் | | 66 | 12,987.31 | | 0 | 0.00 | |
| பெலவத்தை | 0115453700 | அவுஸ்திரேலிய டொலர் | 106 | 1 | 19.09 | 6 | 0 | 0.00 | இல்லை |
| | | ஸ்ரேலிங் பவுண் | | 6 | 1,233.96 | | 0 | 0.00 | |
| | | ஜப்பான் யென் | | 1 | 67,853.00 | | 0 | 0.00 | |
| | | இலங்கை ரூபா | | 91 | 302,923.49 | | 6 | 159,496.00 | |
| | | அமெரிக்க டொலர் | | 7 | 1,014.70 | | 0 | 0.00 | |
| யூனியன் பிளேஸ் | 0114453600 | யூரோ | 201 | 1 | 11.99 | 7 | 0 | 0.00 | இல்லை |
| | | ஸ்ரேலிங் பவுண் | | 5 | 58.22 | | 0 | 0.00 | |
| | | ஜப்பான் யென் | | 1 | 11.00 | | 0 | 0.00 | |
| | | இலங்கை ரூபா | | 176 | 1,096,523.11 | | 7 | 70,664.54 | |
| | | அமெரிக்க டொலர் | | 18 | 5,452.52 | | 0 | 0.00 | |
| வத்தளை | 0115453699 | அவுஸ்திரேலிய டொலர் | 85 | 1 | 0.01 | இல்லை | | | இல்லை |
| | | யூரோ | | 1 | 685.74 | | | | |
| | | ஸ்ரேலிங் பவுண் | | 1 | 46.71 | | | | |
| | | இலங்கை ரூபா | | 76 | 135,777.02 | | | | |
| | | அமெரிக்க டொலர் | | 6 | 642.11 | | | | |
| பிறீமியர் நிலையம் | 0114453445 | அவுஸ்திரேலிய டொலர் | 100 | 2 | 390.61 | 2 | 0 | 0.00 | இல்லை |
| | | கனேடிய டொலர் | | 1 | 102.94 | | 0 | 0.00 | |
| | | ஸ்ரேலிங் பவுண் | | 17 | 1,208.03 | | 0 | 0.00 | |
| | | ஹொங்கொங் பவுண் | | 1 | 206.41 | | 0 | 0.00 | |
| | | இலங்கை ரூபா | | 54 | 2,323,537.46 | | 2 | 345.43 | |
| | | சிங்கப்பூர் டொலர் | | 1 | 1.17 | | 0 | 0.00 | |
| | | அமெரிக்க டொலர் | | 24 | 1,564.55 | | 0 | 0.00 | |
| நீர்கொழும்பு | 0314453100 | யூரோ | 83 | 2 | 494.82 | 1 | 0 | 0.00 | இல்லை |
| | | ஸ்ரேலிங் பவுண் | | 6 | 1,111.41 | | 0 | 0.00 | |
| | | இலங்கை ரூபா | | 69 | 1,354,366.08 | | 1 | 288.04 | |
| | | அமெரிக்க டொலர் | | 6 | 672.76 | | 0 | 0.00 | |
| மொரட்டுவ | 0114453530 | ஸ்ரேலிங் பவுண் | 100 | 1 | 0.00 | 4 | 0 | 0.00 | இல்லை |
| | | இலங்கை ரூபா | | 93 | 556,130.12 | | 4 | 16,948.01 | |
| | | அமெரிக்க டொலர் | | 6 | 29.22 | | 0 | 0.00 | |
| யாழ்ப்பாணம் | 0214452110 | கனேடிய டொலர் | 37 | 1 | 0.00 | இல்லை | | | இல்லை |
| | | இலங்கை ரூபா | | 35 | 680,493.27 | | | | |
| | | அமெரிக்க டொலர் | | 1 | 1.07 | | | | |
| காலி | 0914459100 | இலங்கை ரூபா | 17 | 17 | 79,794.04 | இல்லை | | | இல்லை |

எனவே, "கைவிடப்பட்ட சொத்தை வைத்திருப்போர்" என்ற பிரிவினுள் அடங்கக்கூடிய சகல வாடிக்கையாளர்களும் திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பின்வரும் கிளை ஒன்றிற்கு வருகைதந்து தமது அடையாளத்திற்கான சான்றைச் சமர்ப்பித்து, தமது கணக்குகளை மீண்டும் செயற்படுத்துவதன் மூலம் அவை கைவிடப்பட்ட சொத்துக்களாகக் கருதப்படுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென நாம் கேட்டுக்கொள்கிறோம்.

கிளைகளின் பட்டியல்
• தலைமை அலுவலகம்: 24, சேர் பாரொன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01 • பம்பலப்பிட்டி: 123, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 04
• காலி: 120/2, மாத்தறை வீதி, பெட்டிகலவத்தை, காலி • யாழ்ப்பாணம்: 145, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் • கண்டி: 27, குறுக்கு வீதி, கண்டி • மொரட்டுவ: 198, காலி வீதி, இடம், மொரட்டுவ
• நீர்கொழும்பு: 186, கொழும்பு வீதி, நீர்கொழும்பு • நுகேகொடை: 171, நாவலை வீதி, நுகேகொடை • பெலவத்தை: 418, பன்னிப்பிட்டி வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை
• பிறீமியர் நிலையம்: 31, சேர் ஏர்னஸ்ட் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 07 • யூனியன் பிளேஸ்: 163, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 • வத்தளை: 149, நீர்கொழும்பு வீதி, வத்தளை
• வெள்ளவத்தை: 587, காலி வீதி, கொழும்பு 06

இந்த அறிவித்தல் பற்றிய ஏதேனும் மேலதிக விபரங்களுக்கு, தயவுசெய்து 0114 472 200 என்ற எமது வாடிக்கையாளர் சேவை உடனடித் தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்பு கொள்ளவும்.

HSBC

ஹொங்கொங் அண்ட் ஷங்காய் பாங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட் ஆனது இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும்.
ஹொங்கொங் அண்ட் ஷங்காய் பாங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்- ஸ்ரீ லங்கா வெளியீடு.

# நகர்வலம்



ஐ.ம.ச மற்றும் தே.ம.ச ஆகிய கட்சிகளினால்

# ஜனாதிபதி ரணிலின் வெற்றிக்கு எந்த அச்சுறுத்தலும் கிடையாது

## ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்டு அமோக வெற்றி பெறுவார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளினால் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு எந்த அச்சுறுத்தலும் கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



தேர்தலை குறுகிய காலத்திற்குள் நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவை கோரியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க அதிக வாக்குகளை பெற்று அமோக வெற்றி ஈட்டுவார் என்றும் தெரிவித்துள்ளார். தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்குமிடையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அண்மையில் விசேட பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றுள்ளது.

அதனையடுத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளினால் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு எந்த அச்சுறுத்தலும் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருமளவு வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி ஈட்டுவார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தேசிய ஒற்றுமை மற்றும் இன நல்லிணக்க சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் லங்கா லேடன்ட் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மேற்பார்வை குழு உறுப்பினராகவும் பதவி வகித்து வந்த அமரர் கந்தசாமி கருணாகரனின் மறைவை நினைவு கூரும் முகமாக கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் (20) இடம்பெற்ற நினைவஞ்சலி நிகழ்வின் போது.....

# எகிப்து தூதரக ஏற்பாட்டில் கொழும்பில் iBelong Bazaar



**ருஸைக் பாரூக்**

எகிப்து தூதரகம் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் 5ஆவது *iBelong Bazaar* மனித சகோதரத்துவ விற்பனை பசார் நிகழ்வொன்றை கடந்த 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் *One Galle Face Mall* இல் நடாத்தியது. இலங்கை கைவினைஞர்கள், சிறு தொழில் முனைவோர், சிறப்புத் திறன் கொண்டவர்கள் மற்றும் முதியோர்களுக்கு ஆதரவளிப்பதாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இலங்கைக்கான எகிப்து தூதுவர் மகேத் மொஸ்லே, கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ. அரவிந்த குமார், பாராளுமன்ற செயலாளர் நாயகம் திருமதி குஷானி ரோஹணதீர, இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் பட்லி ஹிஷாம் ஆதம், இந்தோனேசியா தூதுவர் *Dewi Gustina Tobing*, ஒத்துழைப்பு மற்றும் கலாசார ஆலோசகர், பிரான்ஸ் தூதரகம் திருமதி *Olivia Bellemere*, ஓமன் தூதரகத்தின் முதல் செயலாளர் திருமதி *Samira Al Mamari* மற்றும் தூதரக அதிகாரிகள் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

# கல்பிட்டி பிரதேச தெங்கு செய்கையாளர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்வு

**புத்தளம் தினகரன் நிருபர்**

தென்னை பயிர்ச்செய்கை சபையினால் கல்பிட்டி பிரதேச தென்னை செய்கையாளர்களின் உற்பத்தி செலவினை குறைக்கும் நோக்குடனும், தேங்காய் உட்பட தெங்கு உற்பத்திகளுக்கு சிறந்த விலையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடனும் தென்னை செய்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் நோக்கிலும் ஓர் தெளிவுப்படுத்தல் நிகழ்வு எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் கல்பிட்டி செயாப் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் தென்னை பயிர்ச் செய்கை சபையுடன் தொடர்புடைய அதிகாரிகள் பலரும், உர கம்பனிகளின் பிரதிநிதிகள், வங்கிகளின் பிரதிநிதிகள் உட்பட பல நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தென்னை செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மற்றும் கடன் வசதிகள் தொடர்பிலான விளக்கமும் வழங்கப்படும்.

எனவே, இந் நிகழ்வில் கல்பிட்டி பிரதேச தென்னை செய்கையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கற்பிட்டி தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என்.எம். ஹிஜாஸ் மரைக்கார் கேட்டுள்ளார்.

# எரிபொருள் பவுசர் – ஆட்டோ மோதி விபத்து

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் இக்கிரிகொல்லாவ ஏ9 வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு பேர் காயமடைந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர். குறித்த விபத்து சனிக்கிழமை (20) இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் ஏற்றிக்கொண்டு மதவாச்சி பகுதிக்கு சென்று கொண்டிருந்த பவுசர் ஒன்று முச்சக்கர வண்டியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தின் போது எரிபொருள் ஏற்றிச்சென்ற பவுசர் வீதியை விட்டு விலகிச் சென்று அருகிலிருந்த வயலிற்குள் கவிழ்ந்து வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்திற்குள்ளான பவுசரில் எரிந்த எரிபொருள் மற்றுமொரு பவுசருக்கு மாற்றப்பட்டுள்ளதாவும் காயத்திற்குள்ளானோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாவும் பொலிஸார் தெரிவித்தனர்.







ஹோமாகம கல்வி வலயத்திற்குட்பட்ட தக்சிலா குளுபன ஆரம்ப பாடசாலை மாணவர்கள் சமீபத்தில் மேற்கொண்ட கல்வி சுற்றுலாவின் போது லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்திற்கும் விஜயம் செய்தனர். இதன் போது லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசத்துடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். **(படப்பிடிப்பு: நிஷங்க விஜேரட்ன)**

# லைப்பொண்ட் சமூக சேவை அமைப்பினால் திருமண வாழ்வு தொடர்பான கற்கை நெறி



**கிண்ணியா தினகரன் நிருபர்**

லைப்பொண்ட் சமூக சேவை நிறுவனம் நடாத்திய திருமண வாழ்வை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கான இலவச கற்கைநெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் சனிக்கிழமை (21) மாவனல்லை உயன்வத்தை மஸ்ஜிதுன் நூர் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை அஹதிய்யா சம்மேளனத்தின் தலைவரும் லைப்பொண்ட் நிறுவனத்தின் பணிப்பாளருமாகிய எம்.ஆர்.எம். ஸரூக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் லக்சிறி நிறுவனத்தின் பணிப்பாளர் ஷஹீமுல்லாஹ் இக்பால் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

லைப்பொண்ட் நிறுவனத்தின் வளவாளர் அஷ்ஷெய்க் அக்ரம் அப்துஸ் ஸமத் இக்கற்கை நெறியை பூர்த்தி செய்து வெற்றிகரமாக சித்தியடைந்த மாணவிகள் குறித்து மதிப்பீட்டுரை நிகழ்த்தினார். அதேவேளை, லைப்பொண்ட் நிறுவனத்தின் இயக்குனர் அஷ்ஷெய்க் முஹம்மத் பகீஹுத்தீன் லைப்பொண்ட் நிறுவனம் பற்றிய அறிமுக உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் உயன்வத்த பள்ளிவாசல்கள் பரிபாலன சபைத்தலைவர்கள், பேஷ் இமாம்கள் மற்றும் கல்வியியலாளர்கள், பிரமுகர்கள் உட்பட சித்தியடைந்த மாணவிகள், பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# 2023ஆம் ஆண்டில் எச்.ஐ.வி தொற்றினால் 40 சிறுவர்கள் பாதிப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

எச்.ஐ.வி தொற்றினால் கடந்த 2023ம் ஆண்டில் 40 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத்திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் வினோ தர்மகுலசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எச் .ஐ .வி தொற்றினால் 2022 ஆம் ஆண்டில் 607 ஆகவும் 2023ம் ஆண்டில் 694 ஆகவும் அதிகரித்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட 694 பேரில் 613 பேர் ஆண்களாவர்.

இந்நிலையில் 15 24 வயதுக் குட்பட்டவர்கள் மத்தியில் எச்.ஐ.வி தொற்று அதிகரித்து வருவதாகவும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 226 கி.கி. சட்டவிரோத பீடி இலைகள் மீட்பு

## கற்பிட்டி குடாவ பகுதியில் கடற்படையினர் அதிரடி

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கற்பிட்டி குடாவ கடற் பிரதேசத்தில் காட்டுப்பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒருதொகை பீடி இலைகள் அண்மையில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி கடற்படையினர் குறித்த கடற்பிரதேசத்தில் விஷேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது அங்கு கைவிடப்பட்டிருந்த நிலையில் 7 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 226 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கடற்படையினரால், கைப்பற்றப்பட்ட 226 கிலோ கிராம் பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தமது பொறுப்பில் வைத்துள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களில் கற்பிட்டி பிரதேசத்தில் பத்தலங்குண்டு, இப்பந்தீவு, கீரிமுந்தல், மாம்புரி, தேத்தாப்பொல மற்றும் தளுவ உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



இலங்கைக்கு சொந்தமான கடல் மற்றும் கரையோர பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகம் தொடர்பாக

# மக்களால் முன்வைத்த 16 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில்சென்று ஆராய்வு




(சாவகச்சேரி விசேட நிருபர்)

அண்மைய நாட்களில் பாரிய சர்ச்சைகளில் சிக்கிக்கொண்ட சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நேற்று (21/07) ஞாயிற்றுக்கிழமை காலை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம் ஒன்றை மேற்கொண்டதுடன் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இதன்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகம் தொடர்பாக கடந்த காலங்களில் மக்களால் முன்வைத்த 16 குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அமைச்சர் ஆராய்ந்தார்.

குறிப்பாக வைத்தியர்கள் கடமை நேரத்தில் இல்லாமை, சட்ட வைத்திய அதிகாரி மீதான குற்றச்சாட்டுக்கள், விபத்து அவசர சிகிச்சைப் பிரிவை இயக்காமைக்கான காரணங்கள் தொடர்பாக கேட்டறிந்திருந்தார். இதன்போது பெரும்பாலான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

குறிப்பாக பொதுமக்கள் பலரும் வைத்தியர் அர்ச்சுனா மீளவும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு பணிப்பாளராக வர சந்தர்ப்பம் உள்ளதா என அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தனர். இது தொடர்பாக சுகாதார அமைச்சர் மற்றும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் முடிவுகளை தெரியப்படுத்துவதாக அமைச்சர் பதிலளித்திருந்தார்.

மேற்படி கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பத்திரன, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ரஜீவ், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேற்படி விஜயத்தின் போது அமைச்சர் வைத்தியசாலையின் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு, மகப்பேற்று விடுதி, தற்காலிக மின்பிறப்பாக்கி ஆகியவற்றையும் பார்வையிட்டு அவை தொடர்பாக குறைநிறைகளை கேட்டறிந்ததோடு, வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் மாதாந்தம் ஒரு கலந்துரையாடலை வைத்தியசாலை நிர்வாகத்துடன் மேற்கொள்வதற்காக 15 பேர் கொண்ட அபிவிருத்திக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

## ஒப்படை சமர்ப்பிக்காத மாணவனை தாக்கிய ஆசிரியர்

(யாழ்.விசேட நிருபர்

ஒப்படை சமர்ப்பிக்க தவறியதால் தனக்கு ஆசிரியர் மூர்க்க தனமாக தாக்கினார் என மாணவன் ஒருவன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளான்

கோப்பாய் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்கும் மாணவனே முறைப்பாடு செய்துள்ளான். பாடம் ஒன்றிக்கான ஒப்படையை சமர்ப்பிக்க தவறியமையால் ஆசிரியர் தன்னை தாக்கியதாக முறைப்பாட்டில் தெரிவித்துள்ளான். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிசார் முன்னெடுத்து வருகின்றார்.

## யாழில் மூன்றரை மாத குழந்தை உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் நிமோனியாவால் மூன்றரை மாத குழந்தை உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பகுதியைச் சேர்ந்த சிவதாசன் றக்ஸ்மி எனும் குழந்தையே உயிரிழந்துள்ளது.

குழந்தை கடந்த சனிக்கிழமை பால் குடித்த சில மணி நேரத்தில் அசைவின்றி காணப்பட்டுள்ளது. அதனையடுத்து குழந்தையை போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற போது, குழந்தை உயிரிழந்துவிட்டது என வைத்தியர்கள் அறிக்கையிட்டுள்ளனர். குழந்தையின் இறப்பிற்கு நிமோனியாவே காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கின் உதயம்

## யாழில் அகழ்வாய்வு பணிகளை மேற்கொள்ளும் ஜேர்மன் பெண்



(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் அகழ்வாய்வு பணிகளில் ஜேர்மன் நாட்டினைச் சேர்ந்த கலாநிதி அரியானா ஈடுபட்டு வருகின்றார்.

யாழ்ப்பாணம் கந்தரோடை பகுதியில் 2023ஆம் ஆண்டு அகழ்வாய்வுகளை மேற்கொண்டு அவற்றின் ஆய்வுகளை வெளிப்படுத்தியவர். மீண்டும், கந்தரோடை அகழ்வாய்வு பணிகளுக்காக ஜேர்மன் நாட்டில் இருந்து வருகை தந்துள்ளார்.

கடந்த ஒரு மாத காலமாக ஆனைக்கோட்டை பகுதியில் இடம்பெற்ற தொல்லியல் அகழ்வாய்வு பணிகளிலும் பங்காற்றி, ஆனைக்கோட்டை அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட 06 மண் படை மாதிரிகளை பரிசோதனைக்குட்படுத்தி அவற்றின் காலத்தினை காணிப்பு செய்வதற்காக ஜெர்மன் நாட்டிற்கு எடுத்து செல்லவுள்ளார்.

ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற போது, தனது பிள்ளைகளுடன் தமிழர் கலாசார உடைகளுடன் பங்கேற்றிருந்தமையுடன், அவரது பிள்ளைகளால் நினைவு பரிசொன்றும் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மாற்று திறனாளிகளுக்கான இசைப்போட்டி யாழ்ப்பாணத்தில்

(யாழ்.விசேட நிருபர்)

வடக்கின் மாற்று திறனாளிகளுக்கான. இசைப்போட்டி யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் மங்கயற்கரசி வித்தியாலயத்தில் முற்பகல் 09 மணிக்கு நடைபெறவுள்ளதாக புதிய வாழ்வு இல்லத்தின் இணைப்பாளர் விஜயகுமார் விஜயலாதன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

சமூகத்தின் மத்தியிலே ஒரு மாற்றுத்திறனாளி தன்னுடைய அன்றாட தேவைகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட அணுகுமுறைகளை பெற்றுக்கொள்ளும் வசதிகள் இல்லாமலேயே பல்வேறு சிரமங்களுடன் வாழ்த்து வருகின்றனர்.

எங்கள் நாடு வளர்ச்சி அடைந்து வரும் ஒரு நாடாக இருந்தாலும் சேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோளாக இருக்கின்றது.

சில அரச நிறுவனங்கள் அதனை நிவர்த்தி செய்து வந்தாலும் முழுமையாக எல்லாரையும் இந்த சேவைகள் சென்றடைவதில்லை.

அதனால் பல மாற்றுத்திறனாளிகள் அச்சத்தோடும், பல வசதி வாய்ப்புகள் இல்லாத சூழ்நிலையில் தான் வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்நிலையில் மாற்றுத்திறனாளிகளை மகிழ்வானர்களாக வைத்திருக்கும் களமாக புதிய வாழ்வு நிறுவனமும் சாவிகா சங்கீத அறிவாலயம் அமைப்பும் இணைந்து வடக்கின் மாற்று திறனாளிகளுக்கான இசைப் போட்டியை நடத்தவுள்ளது.

குறித்த போட்டியானது எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் மங்கயற்கரசி வித்தியாலயத்தில் முற்பகல் 09 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அதில் மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டு திறமைகளை வெளிப்படுத்த வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பகுதியில் அகழ்வாராய்ச்சிகள் தற்காலிகமாக நிறுத்தம்

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக இடம்பெற்ற அகழ்வு பணிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமையுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரமபுஷ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய சமூக முன்னேற்ற மையத்தின் மரபுரிமை அலகின் நிதி பங்களிப்புடனும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடனும் ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இந்த அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்டவற்றை ஆய்வு செய்யும் நடைமுறைகளை இனித்தான் முன்னெடுக்க வேண்டும்.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொல்லியல் பொருட்களை யாழ். பல்கலையில் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் விரைவில் அதற்கான ஏற்பாடுகளை செய்யவுள்ளோம்.

ஆனைக்கோட்டையில் 1980 ஆம் ஆண்டு கால பகுதியிலேயே ஆய்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டது. அந்த ஆய்வு பணிகளின் போது, யாழ்ப்பாணத்தில் 2300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இருவரின் எலும்புக்கூடுகளும் அதன் கீழ் நிவேதிய பொருட்கள், முத்திரை மோதிரங்களும் மீட்கப்பட்டன. அவை சிந்துவெளி காலத்திற்கு உரியது. அவற்றில் பிரமி எழுத்துக்களும் காணப்பட்டன.

அதில் இன குழுமம் ஒன்றின் தலைவனின் பெயர் குறிப்பிடப்பட்டு இருந்தது அந்த தொல்லியல் பொருட்களை 1998 ஆம் ஆண்டு இழந்துள்ளோம்.

இந்த நிலையிலேயே மீண்டும் கடந்த ஜூன் மாதம் முதல் அகழ்வாய்வு பணிகள் மீள மேற்கொள்ளப்பட்டது.

1980களில் நவீன தொழினுட்பங்கள் இருக்கவில்லை. ஆனால் தற்போது நவீன தொழினுட்பங்கள் இன்றி மேற்கொள்ளப்படும் அகழ்வாய்வுகள், விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்த முடியாது.

அதனால் இலங்கையில் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களின் உதவியுடன், மிக பிரமண்டமாக ஆனைக்கோட்டை பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக அகழ்வாய்வுகளை மேற்கொண்டோம்.

எமது ஆய்வு நடவடிக்கையில் கற்காலத்திற்கு முற்பட்ட ஆய்வுகளை மேற்கொண்ட அனுபவம் வாய்ந்தவர்கள், என்புகளை ஆய்வு செய்து காலத்தை கண்டறிய கூடியவர்கள் என பலதரப்பட்டவர்களை ஒன்றிணைத்தே முன்னெடுத்தோம்.

இந்த அகழ்வு ஆய்வின் போது புலமையானவர்களின் பங்களிப்புடன், தொல்லியல் மாணவர்களின் பங்கும் மிக முக்கியமாக இருந்தது.

அவர்கள் வகுப்பறையில் கற்பதை விட செயல்முறை ஊடாக கற்பதே சிறந்தது. அதனால் பல மாணவர்கள் ஆர்வத்துடன் பணியாற்றினார்கள் என மேலும் தெரிவித்தார்,

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை

# சத்திரசிகிச்சை அலகு திறப்பதற்காக பொதுமக்களிடம் வாங்கிய பணம் எங்கே?

தென்மராட்சி அபிவிருத்திக்கழக முன்னாள் சர்வதேச தலைவர் கேள்வி

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை அலகு திறக்கவென தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தால் பொதுமக்களிடம் வாங்கிய பணத்திற்கு என்ன நடந்தது? என தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் முன்னாள் சர்வதேச தலைவரும் சமூக சேவகருமான கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

சாவகச்சேரியில் 18/07 வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்படி கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை தொடர்பாக வைத்தியர் அர்ச்சுனாவால் சில குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வைத்தியத்துறையை தூய்மைப்படுத்தக்கோரி பெருந்திரளான பொதுமக்கள் போராடியிருந்தனர்.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்க உலக மக்களிடம் வாங்கிய பணத்திற்கு என்ன நடந்தது?

ஏன் அவர்களால் சத்திரசிகிட்சை அலகை இயக்க முடியவில்லை?

அமைப்பின் முன்னாள் தலைவர் என்ற ரீதியில் இது தொடர்பாக என்னிடம் பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

2023ஆம் ஆண்டுத் தரவின் அடிப்படையில் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தால் சேர்க்கப்பட்ட நிதி 34.5 மில்லியன் ரூபாயில் 14.5 மில்லியன் ரூபாய்க்கு மாத்திரமே வைத்திய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தற்போது வைத்தியசாலையின் புதிய கட்டடத்திற்கு மின் பிறப்பாக்கி போதாது என பதில் அளிக்கப்படுகிறது. சத்திரசிகிச்சைப் பிரிவை இயக்குவதற்கு 100kb வலுவுடைய மின்பிறப்பாக்கி போதும். அதனை கடந்த காலங்களில் 10 மில்லியன் ரூபாய்க்கு கொள்வனவு செய்து சத்திரசிகிச்சைப் பிரிவை இயக்கியிருக்க முடியும். ஆனால் தென்மராட்சி அபிவிருத்திக்கழகம் 23 மில்லியன் நிதியை வைத்துக் கொண்டு ஏன் அதனைச் செய்யவில்லை? என மேலும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# ஜனநாயக வழியில் அணிதிரண்டால் மக்களுக்கு தீர்வு பெற்றுத்தர தயார்

அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கரவெட்டி தினகரன் நிருபர்)

பிரச்சினைகளுக்கு வன்முறையற்ற ஜனநாயக முறைப்படி தீர்வினை காண மக்கள் அணிதிரளும் பட்சத்தில் தீர்வினை பெற்றுத்தர எப்போதும் தயாராகவே இருக்கின்றேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஈவினை கிராமத்தின் வளர்ச்சி அந்த மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக அவர்களின் குரலாக தன்னுடைய பங்களிப்பு எப்போதும் இருக்கும் எனவும் அமைச்சர் கூறினார்.

இளம் விவசாய தொழில் முனைவோர் கிராமமாக ஈவினை கிராமம் தெரிவாகியுள்ள நிலையில் அதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும், இந்த நிகழ்வில் விவசாய முயற்சியாளர்களுக்கான விவசாய உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.



முன்பதாக இளம் விவசாய முயற்சியாண்மை கிராமமாக யாழ். மாவட்டத்தில் ஈவினைக் கிராமம் அமைச்சரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலில் இளைஞர்களை தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் திட்டத்தில் இளம் விவசாய முயற்சியாண்மை கிராமம்' என்ற திட்டம் நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் அமைச்சரின் பரிந்துரையில் யாழ். மாவட்டத்தில் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஈவினை கிராமம் தெரிவு செய்யப்பட்டிருந்தது

## வவுனியாவில் யுக்திய நடவடிக்கை: 19 பேர் கைது

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட விசேட யுக்திய சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா தலைமை பொலிஸ்நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அவர்களின் அறிவுறுத்தலுக்கமைய தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயக்கொடி தலைமையிலான பெண் பொலிசார் உள்ளடங்கலாக 106 பொலிசார் இவ் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். பொலிசாருக்கு உதவியாக 21 இராணுவ வீரார்கள், 4 விசேட அதிரடிப்படையினரும் இவ்விசேட நடவடிக்கையில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, வவுனியா தேக்கவத்தைப் பகுதியை சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவர் 2005 மில்லிகிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டிருந்ததுடன், மேலும் அதே பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபர் ஒருவர் 3580 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

மகாறம்பைக்குளம் பகுதி சோதனையின்போது இருவர் 100 கிராம் கஞ்சா கலந்த மாவாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில்

## பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கை இன்று கைச்சாத்து

(பருத்தித்துறை விசேட நிருபர்)

ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையொன்று இன்று திங்கட்கிழமை கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் சிவில் சமூகத்திற்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்குமிடையிலும் இந்த உடன்படிக்கை யாழில் வைத்து கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்தகாலங்களில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் தமிழ் மக்கள் எவருக்கு வாக்களித்தும் எந்தவித பயனும் இல்லை என தமிழ்க் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

இதனால் தமிழ் மக்களின் நிலைமையையும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தேவைகளை வெளிப்படுத்தும் வகையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கும் ஆதரவை வழங்காது தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் அண்மைக் காலமாக சிவில் சமூகத்தினராலும் அரசியல் கட்சிகளாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. இந் நிலையில் இதற்கு பல்வேறு அமைப்புகளும் பல்வேறு கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ள நிலையில் இதன் அடுத்த கட்டமாக அரசியல் கட்சிகளுக்கும் சிவில் சமூகத்திற்கும் இடையில் முதலாவதாக ஒப்பந்தமொன்று கைச்சாத்திடபடவுள்ளது.

## கொழும்பில் யாழ் இளைஞனை காணவில்லை

(யாழ்.விசேட நிருபர்)

கொழும்பில் வேலை செய்துகொண்டிருந்த இளைஞனை காணவில்லையென மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. கொழும்பில் பணியாற்றும் மானிப்பாயைச் சேர்ந்த இளைஞன். விடுமுறைகளின்போது யாழ். வந்து செல்பவர். கடந்த ஒரு வார காலமாக அவர் தொடர்பின்றி போயுள்ளார். அதனையடுத்து வீட்டார் அவர் பணியாற்றிய இடத்தில் விசாரித்த போதும் எந்தத் தகவலும் கிடைக்காததால் பொலிசில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பு – ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் புதிய கட்டட முதற்கட்ட பகுதி திறந்து வைப்பு

(ஏறாவூர் நிருபர் )

சீன நாட்டு அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மட்டக்களப்பு ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கென பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுவரும் கட்டடத் தொகுதியின் முதற்கட்டப் பகுதியினை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் (20) சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானாவின் வேண்டுகோளின்பேரில் இக்கட்டடத்தினை நிருமாணிப்பதற்கென கடந்த நல்லாட்சிக் காலத்தில் 450 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நவீன வசதிகள் கொண்ட சத்திர சிகிச்சைக் கூடம், இரத்த வங்கி, அவசர சிகிச்சைப்பிரிவு மற்றும் மருத்துவ விடுதி போன்ற வசதிகள் இக்கட்டடத்தில் உள்ளடக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல தசாப்தகாலமாக இயங்கிவரும் ஏறாவூர் வைத்தியசாலையை பல்லாயிரக்கணக்கான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் சிகிச்சைக்காக நாடிவருகின்றபோதிலும் போதுமான வசதிகள் காணப்படாததனால் வெகுதொலைவிலுள்ள வைத்தியசாலைக்குச் செல்லவேண்டிய அவலநிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இக்கட்டட நிருமாணிப்பின் பெரும்பகுதி தற்போது பூர்த்திசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இங்கு பாராளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா உரையாற்றுகையில் செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாணத்திற்கு ஆளுநராகக்கிடைத்துள்ளமை ஒரு வரப்பிரசாதமாவே கருதுகின்றேன்.

இங்கிருந்த ஆளுநர்களில் அவரே மிகவும் இளமையான வயதுடையவர். முழுநேரமும் இயங்கக்கூடியவர். சாதி, மத பேதமற்ற முறையில் செயற்பட்டு வருகிறார்.

அவரது பணி தொடர வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன் என்றார். ஆளுநர் செந்தில் தொண்டமான் பேசுகையில்;

அலி ஸாஹிர் மௌலானா பாராளுமன்ற உறுப்பினராகயிருந்து இவ்வளவு பணி செய்யமுடியுமானால் அவர் ஓர் அமைச்சராக பொறுப்பெற்றால் மக்களது தேவைகளை சீராகச் செய்யக்கூடிய வாய்ப்பு கிடைக்கும்.

எனவே எதிர்காலத்தில் அவர் ஓர் அமைச்சராக பதவியேற்று முழுநாட்டிற்கும் சேவையாற்ற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் அவரது கோரிக்கையினை ஏற்று ஏறாவூர் வைத்தியசாலைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராகவுள்ளேன் என்றார்.

## கதிர்காம தங்க நுழைவாயிலில் இன்று தீர்த்தோற்சவம்



( காரைதீவு குறூப் நிருபர் )

கதிர்காமத்தில் மாணிக்க கங்கை நதி தீரத்திலே அழகாக நிர்மாணிக்கப்பட்ட தங்க நுழைவாயில் திறக்கப்பட்டுள்ளது.

வரலாற்றில் முதல் தடவையாக பல லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட தங்கநுழைவாயில் ஊடாகச் சென்று இன்று (22) திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவம் இடம்பெற உள்ளது.

இதற்காக லட்சோப லட்சம் மக்கள் அங்கு ஒன்றுகூடியுள்ளனர். மக்கள் வெள்ளம் அங்கு அலைமோதுகிறது. கதிர்காம தேவாலய நிலமே திஷான் குணசேகர தலைமையில் இம் முதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மிகவும் அழகாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த நுழைவாயிலூடாக யானைகள் சகிதம் பேழை எடுத்து செல்லப்பட்டு நீர் வெட்டு ( தீர்த்தோற்சவம்) இடம் பெறும்.

## எரிந்த நிலையில் சடலம் மீட்பு

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணாமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூட்டாம்புளி வயல் நிலப் பகுதியில் எரிந்த நிலையில் சடலமொன்று (20) மாலை மீட்கப்பட்டுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் திருகோணமலை அன்பு வழிபுரத்தைச் சேர்ந்த சிவலிங்கம் ஜெயசீலன் (வயது 53) என தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர். விவசாயி ஒருவர் தனது வயலுக்குச் சென்றவேளை எரிந்த நிலையில் சடலம் ஒன்று காணப்பட்டதையடுத்து தம்பலகாமம் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து அவ்விடத்துக்கு வந்த தம்பலகாம பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர். குறித்த சம்பவ இடத்துக்கு கந்தளாய் நீதிமன்ற பதில் நீதவான் விஜயம் செய்து சடலத்தை பார்வையிட்டதுடன் சட்ட வைத்திய அதிகாரியும் பார்வையிட்டனர்.

தோப்பூர் பிரதேசத்தில்...

## இம்முறை சிறுபோக நெற்செய்கை சிறந்த விளைச்சலை தரும்

### விவசாயிகள் நம்பிக்கை

தோப்பூர் குறூப் நிருபர்



இம்முறை தோப்பூர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கையின் அறுவடை சில நாட்களில் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் நெற்செய்கையில் களைத்தாக்கம் மற்றும் பீடைத்தாக்கம் குறைந்து நெற்செய்கை வெற்றியளித்து சிறந்த விளைச்சல் கிடைக்குமென எதிர்பார்ப்பதாக விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

இச்சிறுபோகத்தில் 95 வீதமான விவசாயிகள் கீரிசம்பா நெல்லினத்தினை விதைத்துள்ள நிலையில் அறுவடை ஆரம்பிக்கும் காலத்தில் கீரிசம்பா நெல்லின் விலை மூட்டை ஒன்றுக்கு 6000 ரூபாய் வரை குறையும் என்ற அச்சத்தில் இருக்கின்றனர். எனவே, நாட்டில் தற்போது தேர்தல் நடக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் நெல்லின் விலையை அரசாங்கம் குறைக்காமல் நெல்லின் நிர்ணய விலையை தீர்மானித்து அரசாங்கம் விவசாயிகளிடம் கொள்வனவு செய்து விவசாயிகள் நஷ்டமடைவதை தடுக்குமாறு தோப்பூர் பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சுவாமி விபுலானந்த அடிகளாரின் 77ஆவது சிரார்த்த தினம் அனுஷ்டிப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

சுவாமி விபுலானந்த அடிகளாரின் 77 ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் (19) மட்டக்களப்பில் பல்வேறு இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டது.

அதனடிப்படையில் கல்லடி உப்போடை மணிமண்டப வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் சமாதியில் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையின் ஏற்பாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவி மேலாளர் சுவாமி சுரஷ்சிதானந்தா ஜீ மஹராஜ், சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை தலைவர் க.பாஸ்கரன், செயலாளர் ச.ஜெயராஜா மற்றும் சிவானந்தா வித்தியாலய ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.



அடிகளாரது சமாதிக்கு மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டதனைத் தொடர்ந்து "வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ" பாடல் இசைக்கப்பட்டு சிரார்த்த தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு திருநீற்றுப் பூங்காவில் அமைந்துள்ள சுவாமியின் திருவுருவச் சிலைக்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## பஸ் விபத்தில் காயமடைந்தவர்களை ஆளுநர் செந்தில் நேரில் சென்று பார்வை

கிண்ணியா மத்திய நிருபர்



மூதூர் கங்கைப் பாலத்தருகில் வெள்ளிக்கிழமை (19) மாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் காயமடைந்தவர்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சனிக்கிழமை (20) நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் மானிப்பாயிலிருந்து கதிர்காமம் நோக்கி பயணித்த பஸ் வண்டி மூதூர் கங்கை பாலத்தருகில் கடந்த வெள்ளிக்கிழமை(19) பாதையை விட்டும் விலகி, விபத்துக்குள்ளானதில் 52 பேர் படுகாயமடைந்து மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்றுபார்வையிட்டு, தேக சுகம் குறித்து விசாரித்ததோடு, வைத்தியசாலை நிர்வாகத்தோடு பிரச்சினைகள் தொடர்பாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் கலந்துரையாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் இஸ்லாமிய புதுவருட நிகழ்வு



(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ள கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட இஸ்லாமிய புதுவருட நிகழ்வும், கௌரவிப்பு விழாவும் நேற்று (21) கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றன.

அதிபர் அஷ்ஷேய்க் ஏ.எல்.எம்.அஷ்ரஃப் சர்க்கி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் மௌலவி எம்.எஸ்.எம்.ஜலால்தீன் கபூரி உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் பலர் இந்நிகழ்வின்போது அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது இஸ்லாமிய புதுவருடத்தினையொட்டி பல்வேறு சொற்பொழிவுகள் இடம்பெற்றதுடன், கலாசார நிகழ்வுகள் பலவும் மேடையேற்றப்பட்டன.

## உபகரணங்கள் பகிர்ந்தளிப்பு

கந்தளாய், மூதூர் தினகரன் நிருபர்கள்

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பொது அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (19) மாலை மூதூர் பதில் பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி தலைமையில் பிரதேச செயலக முன்றலில் நடைபெற்றது.

தேசிய காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் வை. எஸ். எம். ஸியாவின் பரிந்துரைக்கமைய, தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எல். எம். அதாவுல்லாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

## கொழும்பு 'Grandway' சிங்க கழக ஏற்பாட்டில் உலருணவு, மூக்குக்கண்ணாடிகள் விநியோகம்

கொழும்பு Grandway சிங்க கழகமானது கடந்த 14 ஆம் திகதி , வெலிமடையில் உள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் மற்றும் மூக்குக்கண்ணாடிகளை விநியோகிக்கும் திட்டத்தை ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.



குறித்த திட்டமானது வெலிமடை சமூக நீர் அமைப்பினால் முன்வைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது 132 குடும்பங்களுக்கு 60 மூக்குக் கண்ணாடிகளும், 660 கிலோ அரிசி மூடைகளும் வழங்கப்பட்டன.

சங்கத் தலைவர் லயன் மகிஷா ஜெயபிரகாஷ், மாவட்ட GST ஒருங்கிணைப்பாளர் லயன் ரவி சிவக்குமார், மாவட்ட துணைப் பொருளாளர் மற்றும் கழக GMT ஒருங்கிணைப்பாளர் லயன் தமிழ்ச்செல்வன்,பிராந்திய தலைவர் லயன் சுகந்த்,வலைய தலைவர் லயன் புஷ்பராஜ், மாவட்ட தலைமை ஒருங்கிணைப்பாளர் (சுற்றுச்சூழல்) லயன் ஜெயபிரகாஷ், கழகப் பொருளாளர் லயன் கிருஷ்ணகுமார், இரண்டாவது துணைத் தலைவர் லயன் பிரகாஷ், கழக GST ஒருங்கிணைப்பாளர் லயன் அரவிந்தன் , சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் தலைவர் லயன் வாமதேவன் மற்றும் கழக இயக்குநர்கள் லயன் சந்திரசேகர், தலைமை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (மனிதநேயம்) லயன் பாஸ்கரன் , லயன் சனாஸ் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.



கம்மல்துறை கவிஞர்களின் 100 கவிதைகள் தொகுக்கப்பட்ட "தூண்டில்கள் துடிக்கின்றன" கவிதை நூல் வெளியீட்டு விழா கம்மல்துறை அல்பலாஹ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் கலா பூஷணம் எம். ஜே. எம். தாஜுதீன் தலைமையில் கவிஞர் போருத்தொட்ட ரிஸ்மி அரங்கத்தில் நடைபெற்றது. நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளரும் 'ஈழத்து நூன்' கலாபூஷணம் எம். ஏ. எம். நிலாம், கம்மல்துறை அல்பலாஹ் கல்லூரியின் அதிபர் எம். யு. பாயிஸ் (நளீமி) ஆகியோருக்கு தலைவர் தாஜுதீன் நூலின் பிரதிகளை வழங்கி வைத்த போது எடுக்கப்பட்ட படம்.

# கொழும்பு ஆடி வேல் விழாவின் வெள்ளிரத பவனி









150வது வருட ஆடி வேல் விழா வெள்ளிரதபவனி 2024, கொழும்பு, செட்டியார் தெரு, ஸ்ரீபுதிய கதிரேசன் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு பம்பலப்பிட்டி நாட்டுக்கோட்டை நகரத்தார் ஸ்ரீபுதிய கதிரேசன் கோயிலுக்குச் செல்லுகையில் பிடிக்கப்பட்ட படங்களை காணலாம்.

## டன்சினன் – நுவரெலியா பிரதான பாதை மக்கள் பாவனைக்கு திறந்து வைப்பு



2024 ஆம் ஆண்டின் 1000 கி.மீ வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் டன்சினனிலிருந்து பூண்டுலோயா வழியாக நுவரெலியா செல்லும் பிரதான பாதையானது கார்பட் இடப்பட்டு கடந்த சனிக்கிழமை(20) மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிதள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மற்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரால் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

பல வருட காலமாக குன்றும் குழியுமாக காணப்பட்டு வந்த 9 கி.மீ வரையிலான குறித்த பாதையானது அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அமைச்சின் 1.3 பில்லியன் ரூபாய் நேரடி நிதி ஒதுக்கீட்டின் மூலம், வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கார்பட் இடப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மற்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், இ.தொ.கா பிரதி பொதுச் செயலாளர் செல்லமுத்து,வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மத்திய மாகாண பணிப்பாளர் மகேந்திர விஜயபால, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நுவரெலியா மாவட்ட பிரதான பொறியியலாளர் சம்பத் சமரநாயக்க, நுவரெலியா பிரிவுக்கான நிறைவேற்று பொறியியலாளர் மனோஜ் ஹேரத், நோர்வூட் பிரிவுக்கான பொறியியலாளர் தரிந்து ஸ்ரீவர்த்தன தோட்ட பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி நிதியத்தின்கீழ் பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

### கண்டியில் மாபெரும் வைபவம்





<u>நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்</u>

ஜனாதிபதி நிதியத்தின் பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய கண்டி மாவட்ட நிகழ்ச்சி மத்திய மாகாண ஆளுநர் லலித்.யு.கமகே தலைமையில் வியாழக்கிழமை (17) குண்டசாலை மஹாமெவ்னா வளாகத்தில் நடைபெற்றது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ், முதலாம் ஆண்டு முதல் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்கும் ஒரு பிள்ளைக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபாவும் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு மாதாந்தம் ஆறாயிரம் ரூபாவும் புலமைப்பரிசில் கிடைக்கும்.

கண்டி மாவட்டத்தின் 06 கல்வி வலயங்களிலுள்ள 360 உயர்தர மாணவர்களுக்கும் முதலாம் தரம் முதல் பதினொன்றாம் தரம் வரையிலான 6472 மாணவர்களுக்கும் இந்த புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் நிகழ்வை அடையாளப்படுத்தும் வகையில் 4031 சிறுவர், சிறுமியர்களுக்கு நிதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதியுதவியின் கீழ், இந்த கல்விப் புலமைப்பரிசில் ஜனாதிபதி புலமைப்பரிசில் நிதியத்தினால் தொடர்ச்சியாக இரண்டு வருட காலத்திற்கு வழங்கப்படும்.

இந்நிகழ்வில் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி உதயன கிரிந்திகொட, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, மத்திய மாகாண பிரதம செயலாளர் அஜித் பிரேமசிங்க, கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேனகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள்


## திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்ற அறநெறிப் பாடசாலைகளுக்கு விஜயம்

திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீகந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீகார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அருளாணையின் வண்ணம் பிரணவம் அறக்கட்டளையின் அனுசரணையில் திருஞானசம்பந்தர் சைவப் பணி மன்ற அறநெறிப் பாடசாலைகளுக்கு சுவாமிகள் விஜயம் செய்து அருளாசி வழங்கவுள்ளார்.

அத்துடன் தமிழ்நாடு திருஞானசம்பந்தர் திருமடத்தைச் சேர்ந்த திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகள் ஆன்மீக சொற்பொழிவுகளையும் ஆற்றவுள்ளார்.

இந்த அருளாசி வழங்கும் நிகழ்வுகள் எதிர்வரும் 2024.08.24ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணி முதல் நடைபெறவுள்ளது. அன்று காலை 10.30 மணிக்கு என்பீல்ட் தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் என்பீல்ட் அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் அன்று பிற்பகல் 1.00 மணிக்கு போடைஸ் தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் போடைஸ் அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் அன்று பிற்பகல் 3 மணிக்கு நோர்வுட் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் அருளாசி வழங்கவுள்ளார்.

பிரணவம் அறக்கட்டளையின் நிர்வாகக் குழுவினரும் திருஞானசம்பந்தர் சைவப் பணி மன்ற அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களும் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். இந்த அருளாசி வழங்கும் நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணை வழங்குகிறது.




## பிரணவம் அறக்கட்டளை திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்ற ஓராண்டு நிறைவு விழா

திருக்கயிலாய பரம்பரை !கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீகார்யம் அருட்குருநாதர் தவத்திரு !மத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அருளாணையின் வண்ணம் பிரணவம் அறக்கட்டளையினதும் திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்றத்தினதும் ஓராண்டு நிறைவு விழாவையொட்டி பிரணவம் அறக்கட்டளைக்கும் திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்றத்துக்கும் திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீகந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் !கார்யம் அருட்குருநாதர் தவத்திரு !மத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அருளாசி வழங்கி சொற்பொழிவாற்றவுள்ளார். இந்த அருளாசி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 2024.08.25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஹட்டன் ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தானத்தின் !கஜலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த அருளாசி வழங்கலைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.



தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மதவாச்சி கல் அரைக்கும் ஆலைக்கு கருங்கல் துண்டுகளை வழங்குதல்

**CONTRACT NO. RDA/DPR/PRO/WK/NCB/ASPL/MEAG/2024/95**

| விபரம் | ஆலை | மொத்த அளவு |
|---|---|---|
| கருங்கல் துண்டுகளை வழங்கல் | மதவாச்சி | 5,000 MT |

தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் கருங்கல் துண்டுகளை வழங்குவதற்கான விலைமனுக்கோரல். ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.07.22 ஆம் திகதி முதல் 2024.08.09 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## கேள்விக் கோரல் அழைப்பு

விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
**தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை**

### தொலைக்காட்சி குறும் விளம்பரம் தயாரித்தல் – 2024

**பெறுகை இல: E/7G/P/U/TV/AD/2024**

01. தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் 2024ம் ஆண்டின் கீழ்க்காணுமாறு 05 தொனிப் பொருட்கள் ஊடாக 30 விநாடிகளைக் கொண்ட குறும் வீடியோ விளம்பரங்கள் 05ஐ தயாரித்தல் சார்பாக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| # | விடயம் | விபரம் |
|---|---|---|
| 01 | விளம்பரங்களின் எண்ணிக்கை | 5 |
| 02 | ஒரு விளம்பரத்திற்கான காலம் | 30 விநாடிகள் |
| 03 | வீடியோ தயாரிப்பு நிலைமை | FULL HD |
| 04 | வீடியோ விளம்பரம் தயாரிக்கப்படும் மொழிமூலம் | சிங்களம் |
| 05 | மொழிபெயர்த்தல் | சிங்கள மொழியில் உற்பத்தி செய்யப்படும் 05 விளம்பரங்களுக்கு தமிழ் மொழியில் குரல் பதிவு செய்தல் வேண்டும். |
| 06 | துறையின் அனுபவம் | 15 வருடம் அல்லது அதற்கு மேற்பட்டு இருத்தல் வேண்டும். |
| 07 | 5 விளம்பரங்களை தயாரிப்பதுடன் சம்பந்தப்பட்ட சகல தகவல்கள் | கேள்வி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| 08 | தேவைப்படும் மனித மற்றும் பௌதீக வளங்களை பெற்றுக் கொள்ளல் | ஊழியர் குழாம், உபகரணம் மற்றும் ஏனைய சகலதும் தயாரிப்பு நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளல் வேண்டும். |

02. கேள்விப் பத்திரங்கள் கோரல் தேசிய போட்டி கேள்வி முறையை (NCB) மூலம் இடம்பெறும்.

03. இது பற்றிய ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடைய கேள்விதாரர்களுக்கு தென்னைப் பயிரச் செய்கைச் சபையின் வழங்கல் அதிகாரி மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், கீழ்க்காணும் முகவரியில் வாரத்தின் வேலை நாட்களில் 2024.07.22 முதல் 2024.08.05 வரை மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரை கேள்விகோரல் படிவங்கள் உட்பட விவரப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள தயாரிப்பாளர்களுக்கு மட்டும் கேள்விகளை சமர்ப்பிக்கலாம். கிட்டிய கடந்த 08 வருட காலத்திற்குள் ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேல் பெறுமதியுடைய இதற்குச் சமமான செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளதுடன் அது பற்றி எழுத்துமூல ஆவணங்கள் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

05. இதுபற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களால் தமது நிறுவனம்/ வியாபாரத்துடன் சம்பந்தப்பட்ட பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதியுடன் எழுத்து மூல வேண்டுதலைச் சமர்ப்பித்த பின்னர் மீளளிக்கப்படாத ரூ. 3500/- தொகையை தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் தலைமையகத்தின் காசாளரிடம் செலுத்திய பின்பு குறித்த கேள்வி ஆவணத் தொகுதியை 2024.08.05 வரை பெற்றுக் கொள்ளலாம்.

06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ("மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என குறிப்பிட்டு வேறுவேறு இரு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் மீண்டும் ஒரே உறையில் இட்டு) 2024.08.06 பி.ப. 2.30 இற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். 2024.08.06 மு.ப. 2.30 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறத்தல் இடம்பெறுவதுடன், கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம். சகல கேள்விப் பத்திரங்களுடனும் கேள்விப் பெறுமதியில் 1% பெறுமதிக்கு குறையாத பொது முகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை பெயருக்கு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட எந்த வர்த்தக வங்கியிலிருந்தும் பெற்றுக் கொண்ட நிபந்தனையற்ற கேள்விப் பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். (காப்புறுதி காப்பீடு ஏற்கப்படமாட்டாது)

07. உங்களது கேள்வி ஆவணங்களை பொறியிடப்பட்ட உறையில் இட்டு, உறையின் இடது மேல் மூலையில் "தொலைக்காட்சி குறும் விளம்பரம் தயாரித்தல் - 2024" என்று குறிப்பிட்டு, கீழ்க்காணும் முகவரிக்கு 2024.08.06 பி.ப. 2.30 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது 2024.08.06 பி.ப.2.30 இற்கு முன்பு கீழ்க்காணும் தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**தலைவர்,**
**திணைக்கள சிறிய அளவான பெறுகைக் குழு,**
**தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை,**
**9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல**
**தொ.பே.: 011 - 2193457 தொ.பே. 011 - 2861332**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## பெறுகை அறிவித்தல்

### 2024/2025 ஆம் ஆண்டுக்காக வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் விலங்கு உணவு உற்பத்தி பிரிவுக்கு புற்களை வழங்குவதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன

2024.09.01 ஆம் திகதி தொடக்கம் 2024.08.31 ஆம் திகதி வரை ஓர் ஆண்டு காலத்திற்கு வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் விலங்கு உணவு உற்பத்தி பிரிவுக்கு தினசரி 200 கி. கிராம் புற்களையும் மாதத்திற்கு 500 கி. கிராம் கினிபி வகை புற்களையும் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனத்தின் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களை 2024.08.13 ஆம் திகதி மு.ப. 10.00 வரை ஏற்கப்படும்.

2024.08.12 ஆம் திகதி மு.ப. 10.00 வரை 1000.00 ரூபா மீளளிக்கப்படாத விலைமனு வைப்புத் தொகை ஒன்றை நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு செலுத்தி விலைமனு படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனு ஆவணங்களை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் புற்களை வழங்குவதற்கான விலைமனுக் கோரல் 2024/2025 என்று குறிப்பிட்டு கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கணக்குப் பிரிவின் விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும்.

2024.08.13 ஆம் திகதி மு.ப. 10.00க்கு விலைமனு ஆவணங்கள் திறக்கப்படும். இந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும். மேலதிக விபரங்களுக்கு 011-2693532 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்கவும்.

விடேச மருத்துவர் சுரங்க தொலமுல்ல அவர்கள்

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனம்,**
**கொழும்பு 08.**

## வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள்

**BID No.: 063/T/2024**

**BID INVITATION FOR MAINTENANCE OF ELECTRIC ELEPHANT FENCE AT MATTALA RAJAPAKSE INTERNATIONAL AIRPORT, MATTALA**

இலங்கை, மத்தளவிலுள்ள மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தில் மின்சார யானை வேலியை பராமரிப்பதற்காக வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணமான மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை (3,500ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ கோரிக்கை கடிதத்துடன் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானசேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய ஆவணங்களில் அல்லது மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் பணக்கொடுப்பாகிய 12.00 அஐடொலருக்கு விலைமனுதாரரினால் ஒன்லைனில் செலுத்தப்பட்டு www.airport.lk என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணத்திலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2024.07.23 ஆம் திகதியிலிருந்து 2024.08.12 ஆம் திகதிவரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வழங்கப்படும்.

விலைமனுக்கள் வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானசேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் மிக ஆர்வமாகவிருப்பின் அவர்கள் முத்திரைகுறி இடப்பட்ட விலைமனுக்களைமேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே ஒப்படைத்து ஒப்புகைசீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2024 ஒகஸ்ட் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே இலங்கை, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானசேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும்.

வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானசேவைகள் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் மத்தியவங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் வங்கி உத்தரவாதப் பாங்கில் அமையப்பட்டதும் இரண்டு இலட்சம் இலங்கை ரூபாவிற்கு சமமான (200,000 இ.ரூபா) கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதமொன்றுடன் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.08.01ஆம் திகதியன்று மு.ப. 10மணிக்கு இலங்கை, மத்தள, மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் செயற்றிட்ட கட்டிட மாநாட்டு மண்டபத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

011-2264102 அல்லது 011-2264103 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் head.scm@airport.lk என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது www.airport.lk என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேசவிமானநிலையவரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானசேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து எந்தவொரு மேலதிக தகவலையும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கை) (தனியார்) விமான நிலையம் மற்றும் விமான சேவைகள்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

**For classified advertisements and for replies**
received in response to advertisements published under Lake House box numbers
+94 112429342
+94 112429343

## கேள்விப் பத்திரம்

### கந்தளாய் தள வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை சேவை நடத்துதல் - 2024/2025

இல 385. சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10 சுகாதார அமைச்சின் அமைச்சு செயலாளர் மூலம் இவ் வைத்தியசாலைக்கு வழங்கப்படும் அதிகாரத்தின் படி 2024/2025 ஆம் ஆண்டிற்கான இந்த வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை சேவை நடாத்துவதற்கான தகைமையுடையவர்களிடமிருந்து கேள்விப் பத்திரத்திற்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

1. 2024-07-22முதல் 2024-08-05ம் திகதி வரை உள்ள வழமையான வேலை நாட்களில் மு.ப 01.00 மணி முதல் பி.ப 15.00 மணி வரை பின்வருவனவற்றை சமர்ப்பித்து இந்நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
   i. பொது 170 படிவத்தில் குறிப்பிட்டுள்ளபடி ரூபா 300,000/- பெறுமதியான அத்தாட்சியை சமர்ப்பித்தல் வேண்டும்.
   ii. அரச வைத்தியசாலைகளில் அல்லது வேறு அரச திணைக்களங்களில் சிற்றுண்டிச்சாலை செய்து வந்ததற்கான சேவை அனுபவச்சான்றிதழ் அல்லது வியாபாரம் செய்வதற்கான பதிவின் பெயருடனான சான்றிதழ். வியாபாரத்தின் தன்மை, உணவுப்பண்டங்கள் வழங்குவது பற்றிய விபரம் குறிப்பிடுதல் வேண்டும்.
   iii. விலைமனுத்தொகையாக ரூபா. 1,000/- ஐ செலுத்தி பற்றுச்சீட்டை பெறல் வேண்டும்.
   iv. விலைமனு பிணை ரூபா.20,000/- ஐ செலுத்திய பற்றுச்சீட்டை பெறல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவத்தின் மூலப்பிரதி மற்றும் போட்டோ பிரதிகள் 02 இனை வேறு வேறாக கடித உறையினுள் இட்டு. அந்த உறைகளிரண்டையும் தனியான உறையினுள் இட்டு வழங்கப்படல் வேண்டும்.
3. கேள்விப்பத்திர கடித மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் "2024/2025ம் ஆண்டுக்கான சிற்றூண்டிச்சாலை சேவை வழங்குதல்" என குறிப்பிட்டு 2024.08.05ம் திகதியோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக தலைவர், பெறுகைக்குழு. தள வைத்தியசாலை, கந்தளாய் எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும். அல்லது நேரில் வந்து விலைமனு பெட்டிக்குள் இடமுடியும். குறிப்பிட்ட திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. 2024-08-05ம் திகதி பி.ப 2.00க்கு வைத்திய அத்தியட்சகர் காரியாலத்தில் கேள்விப் பத்திர கடிதங்கள் திறக்கப்படும்.
5. கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்வி விண்ணப்பதாரி அல்லது அச்சந்தர்ப்பத்தில் அவரால் அங்கீகரிக்கப்பட்ட முகவருக்கு பங்குபற்ற அனுமதி வழங்கப்படும்.
6. உரிய கேள்விப்பத்திரத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பெறுகைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.
7. மேலதிக தகவல்கள் குறித்து கந்தளாய் தள வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தரை அணுகவும் தொலைபேசி இலக்கம் - 026-2234948.

**தலைவர்.**
**வைத்திய அத்தியட்சகர்,**
**பிரதேச பெறுகைக்குழு.**
**தள வைத்தியசாலை.**
**கந்தளாய்.**

## லேடி றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை கொழும்பு 08

### பெறுகை அறிவித்தல்

லேடி றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணியை மேற்கொள்வதற்கு ICTAD நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்ற. லேடி றிட்ஜவே சிறுவர் வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவுக்கு மீளளிக்கப்படாத 4,000.00 ரூபா கட்டணத்தை செலுத்திய பின் தலைமை அலுவலகத்தில் இருந்து 2024.07.22 ஆம் திகதி முற்பகல் 9.00 தொடக்கம் 2024.08.08 ஆம் திகதி பிற்பகல் 3.00 வரை விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

முறையான வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை முத்திரை பொறிக்கப்பட்ட உறைகளில் இட்டு இடது பக்க மேல் மூலையில் குறித்த பணியின் பெயரை குறிப்பிட்டு கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது தலைமை கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட்டு 2024.08.09 ஆம் திகதி முற்பகல் 10.00க்கு முன்னர் கிடைப்பதற்கு வகை செய்தல் வேண்டும். குறித்த ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவுற்ற உடன் வருகை தர விரும்பும் ஒப்பந்ததாரர் அல்லது அவர்தம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

| இலக்கம் | பணி | மதிப்பிடப்பட்ட செலவு ரூபா சதம் | தரம் | மீளளிக்கப்படும் விலைமனு பிணை ரூபா | மீளளிக்கப்படாத கேள்வி கட்டணம் ரூபா | காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 09 மாடிகளைக் கொண்ட புதிய கட்டிடத்தின் முன் பக்கத்தில் வர்ணம் பூசுதல் | 21,768,600.0 | C7 அல்லது அதற்கு மேல் | 327,000.00 | 4,000.00 | |

**டொக்டர் பீ. விஜேசூரிய**
**தலைவர், பெறுகைக் குழு,**
**லேடி றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை**
**கொழும்பு 08**

The Housewives' companion
Classifieds on
Daily News

## விலைமனுக்களுக்கான அழைப்பு

# பரீட்சைத் திணைக்களம்

## சான்றிதழ் காகித வழங்கலின் பெறுகை - 2024

**ஒப்பந்த இல. 04/04/10/2024**

1. கீழ் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச அனுபவத்தை பெற்றுள்ள பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட 2024 சான்றிதழ் காகித வழங்கலின் பெறுகைக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| # | உருப்படியின் விலைமனு விபரம் | அளவு |
|---|---|---|
| 01 | Vellum Laid (Conqueror or equivalent) - GSM100 ± 2, 17" x 24" | 05 Reams (ஒவ்வொன்றும் 500 தாள்கள்) |
| 02 | Brilliant White (Conqueror or equivalent) - GSM100 ± 2, 17" x 24" | 05 Reams (ஒவ்வொன்றும் 500 தாள்கள்) |
| 03 | White Gold (Curious Metallics or equivalent) - GSM120 ± 2, 70cm x 100cm | 325 Reams (ஒவ்வொன்றும் 250 தாள்கள்) |
| 04 | File Cover (GSM300 ± 5, 17" x 12") | 300,000 |

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் சான்றிதழ் அச்சு காகிதங்களை வழங்குவதில் மூன்று ஆண்டுகள் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
4. 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 6ஆவது பிரிவுக்கு அமைய விலைமனுதாரர் பொது ஒப்பந்த பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.
5. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் பரீட்சைத் திணைக்களம், 3ஆவது மாடி, வழங்கல் பிரிவில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொலைபேசி: 011-2786200 அல்லது 011-2785219) என்பதோடு 2024.08.09 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
6. ஒவ்வொரு ஆவணத்திற்காகவும் 5000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2024.08.09 ஆம் திகதி பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் வர்த்தகப் பதிவு கடிதத்தின் பிரதியுடன் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து வழங்கல் பிரிவில் இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம் (கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்).
7. விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்கள் வரை (2024.11.10 வரை) விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனு ஆவணங்களுக்கு இணைக்கப்பட்ட வடிவத்தில், விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 120 நாட்கள் வரை செல்லுபடியான (2024.12.10 வரை) இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாக நூற்று அறுபத்து ஆறு ஆயிரத்து அறுநூறு இலங்கை ரூபாவின் (இ.ரூபா 166,600.00) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களை 2024.08.12 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் வழங்கல் பிரிவு, 03ஆவது மாடி, பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது திருப்பித் தரப்படும். விலைமனுக்கள் மூடப்பட்ட பின் மேலே தரப்பட்ட முகவரியில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
10. முறையாக பூர்த்தி செய்யப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சான்றிதழ் காகித வழங்கலின் பெறுகை – 2024'', ஒப்பந்த இல. 4/4/10/2024 என்று குறிப்பிடுதல் வேண்டும்.
11. எந்தக் காரணமும் இன்றி எந்தவொரு விலைமனுவையும் அல்லது அனைத்தையும் நிராகரிப்பதற்கும் அல்லது விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழிப்பதற்கும் அதேபோன்று எந்த விலைமனுவையும் அல்லது எந்த விலைமனுவின் பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை பரீட்சைத் திணைக்களத்தின் பெறுகைக் குழு கொண்டுள்ளது.

**தலைவர்,**
**சிரேஷ்ட பெறுகைக் குழு,**
**இலங்கை, பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்த,**
**பத்தரமுல்லை.**
**2024/07/22**

## பெறுகை அறிவித்தல்

### ஆதார வைத்தியசாலை (போதனா) - கம்பளை
(சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியசேவைகள் அமைச்சு)

## நிர்மாணம் மற்றும் திருத்துவேலைகளுக்காக விலைமனுக்கோரல்

1. கம்பளை ஆதார வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் ஒப்பந்த வேலைகளுக்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் CIDA (ICTAD) பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வேலை | மதிப்பீட்டுச் செலவு ரூபா மில்லியன் | பதிவு செய்து கொள்ள வேண்டிய தரம் | மீளளிக்கப் படாத விலைக்கோரல் ஆவணக் கட்டணம் ரூபா | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி ரூபா | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 01ஆம் இலக்க வார்ட்டின் கூரை மற்றும் கட்டிட திருத்தவேலைகள் | 11 | C6/C5 | 4,000.00 | 110,000.00 | 119 |
| 02 | 03ஆம் இலக்க வார்ட்டின் கூரை மற்றும் கட்டிட திருத்தவேலைகள் | 13.3 | C6/C5 | 4,000.00 | 133,000.00 | 119 |
| 03 | 05ஆம் இலக்க வார்ட்டின் கூரை மற்றும் கட்டிட திருத்தவேலைகள் | 9.8 | C7/C6 | 4,000.00 | 99,000.00 | 119 |
| 04 | அவசர சிகிச்சைப் பிரிவின் 01ஆம் இலக்கக் கட்டிடத்தின் கூரை மற்றும் கட்டிட திருத்தவேலைகள் | 12.2 | C6/C5 | 4,000.00 | 122,000.00 | 119 |
| 05 | அவசர சிகிச்சைப் பிரிவின் 02ஆம் இலக்கக் கட்டிடத்தின் கூரை மற்றும் கட்டிட திருத்தவேலைகள் | 11.8 | C6/C5 | 4,000.00 | 119,000.00 | 119 |
| 06 | தீவிர சிகிச்சைப் பிரிவின் கூரை மற்றும் கட்டிட திருத்தவேலைகள் | 12.8 | C6/C5 | 4,000.00 | 128,500.00 | 119 |

2. 2024-07-23ஆம் திகதி முதல் 2024-08-12ஆம் திகதி வரையான பொதுவான வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் கம்பளை ஆதார (போதனா) வைத்தியசாலையின் பணிப்பாளர் பெயருக்கு மீளளிக்கப்படாத கட்டணத்தை வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்குச் செலுத்தி அலுவலகத்திலிருந்து இயைபுடைய விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 081-2352261 நீடிப்பு 109)
3. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-08-13ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் கம்பளை ஆதார (போதனா) வைத்தியசாலை பணிப்பாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும்.
4. பொது ஒப்பந்தங்கள் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட PCA 3 சான்றிதழை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. உங்களால் சமாப்பிக்கப்படும் விலைகளை வெட்டிவிடல், ஒன்றிற்கு மேல் ஒன்றாக எழுதுதல் என்பவை இல்லாமல் தெளிவான எழுத்துக்கள் மற்றும் இலக்கங்களில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு பிரள்வுகளுடன் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் அவ்வேளையிலேயே நிராகரிக்கப்படும்.
6. விலைமனுக்கள் திறக்கப்படும்போது விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-08-06ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
8. விலைக்கோரலைக் கையளித்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை (போதனா) கம்பளை.**

### இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

| உருப்படி இல | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் கட்டுகம்பளை அஸ்போல்ட் ஆலைகளுக்கு பாதுகாப்பு சேவையை வழங்கல் **ஒப்பந்த இலக்கம்:** RDA/DPR/PRO/SE/NCB/MECH/2024/51 |

தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய மேற்குறிப்பிடப்பட்டுள்ள சேவையினை வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.07.22** ஆம் திகதி முதல் **2024.08.12** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனம்

**(தொழில்நுட்பவியல் அமைச்சின் கீழானது)**

## Invitation for bids for design, Development, Implementation and Maintenance of a web based software application for the Organic Product Certification Scheme operated by Sri Lanka Standards Institution (SLSI)

Design, development, implementation and maintenance of a web based software application for the Organic Product Certification Scheme operated by Sri Lanka Standards Institution என்பதற்காக கேள்விக் கோரல்கள் அழைக்கப்படுகின்றன. **2024.07.22 ஆம் திகதியிலிருந்து மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வேலை நாட்களில் 3,500 இ.ரூபா** + SSCL + VAT ஆகியவற்றை செலுத்திய பின்னர், விலைமனுக்கோரல் ஆவணங்களை **கொழும்பு -08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா இடம், 17ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவன** (SLSI) நிருவாகப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**2024.08.07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு** SLSI இல் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**2024.08.15 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி** வரையும் கேள்விக் கோரல்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனம்,**
**இல. 17, விக்டோரியா இடம்,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி: 0112 671567-72**

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசு
### நீர்ப்பாசன அமைச்சு
### நீர்ப்பாசனத் திணைக்களம், பொலன்னறுவை மாவட்டம்
### தேசிய போட்டி ரீதியில் விலைமனுக்கோரல் (NCB)

01. பொலன்னறுவை நீர்ப்பாசனப் பணிப்பாளரினால் பொலன்னறுவை வலயத்திற்கான பின்வரும் நிர்மாணங்களின் பொருட்டு முத்திரை குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | வேலையின் பெயர் | ஒப்பந்தக் காலம் (வாரங்கள்) | நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவு | விலைக்கோரல் பிணை | | | ஆகக் குறைந்த CIDA தரம் | விலை மனுவின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரொக்கப் பணம் (இல. ரூபா) | வங்கி (இல. ரூபா) | காலம் (நாட்கள்) | | |
| DI/PLN/PIDP/NCB/ 2024/005 | Construction of D.U.C at 1+300km & 1+500km in Malaoya flood bund in Galamuna scheme | 30 | மின்னேரிய | 69,000.00 | 130,000.00 | 105 (2024.11.25) | C-07 | 77 |
| DI/PLN/PIDP/NCB/ 2024/006 | Construction of D.U.C at 1+900km & 2+000 km in Malaoya flood bund in Galamuna scheme | 30 | மின்னேரிய | 101,000.00 | 189,000.00 | 105 (2024.11.25) | C-06 மற்றும் C-05 | 77 |
| DI/PLN/ERMMIS/ NCB/ 2024/001 | Construction of canal spill at 0+065 in D6 Canal in Girithale scheme under "ERMMIS" of Minneriya Division in Polonnaruwa Range | 15 | மின்னேரிய | 36,000.00 | 67,000.00 | 91 (2024.11.11) | C-08 | 63 |
| DI/PLN/ PIDP/ NCB/ 2024/007 | Sand blasting and submerged marine painting of 08 Radial Gates (15'x8') along with all components in Mathalawewa & Rotawewa in Minneriya Division | 30 | மின்னேரிய | 80,000.00 | 150,000.00 | 105 (2024.11.25) | C-07 | 77 |

02. சித்திகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்புத் துறையில் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் குறித்த தரத்திற்கான பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-07-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பொலன்னறுவை, புதிய நகரம், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும். வளமுள்ள விலைமனுதாரர்கள் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றி மற்றும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளரின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்குமாறு (பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்தில்) கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

| வேலையின் பெயர் | ஆரம்பமாகும் இடம் | திகதி மற்றும் நேரம் |
|---|---|---|
| Construction of D.U.C at 1+300km & 1+500km in Malaoya flood bund in Galamuna scheme | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், மின்னேரிய. தொலைபேசி 027 2246270 அல்லது 074 2218201 | திகதி: 2024-07-30 நேரம்: மு.ப. 08.30 |
| Construction of D.U.C at 1+900km & 2+000 km in Malaoya flood bund in Galamuna scheme | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், மின்னேரிய. தொலைபேசி 027 2246270 அல்லது 074 2218201 | திகதி: 2024-07-30 நேரம்: மு.ப. 08.30 |
| Construction of canal spill at 0+065 in D6 Canal in Girithale scheme under "ERMMIS" of Minneriya Division in Polonnaruwa Range | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், மின்னேரிய. தொலைபேசி 027 2246270 அல்லது 074 2218201 | திகதி: 2024-07-30 நேரம்: மு.ப. 09.30 |
| Sand blasting and submerged marine painting of 08 Radial Gates (15'x8') along with all components in Mathalawewa&Rotawewa in Minneriya Division | இயந்திரவியல் பொறியியலாளர் அலுவலகம், மின்னேரிய. தொலைபேசி 027 2055277 அல்லது 076 7055168 | திகதி: 2024-07-30 நேரம்: மு.ப. 09.30 |

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பொலன்னறுவை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து, இயைபுடைய பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகங்களில் வேலை நேரங்களில் 09.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை 2024-07-23ஆம் திகதி முதல் 2024-08-12ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத 4000.00 ரூபாவைச் செலுத்தி பொலன்னறுவை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
06. பூரணப்படுத்திய நகல் பிரதிகளுடனான விலைமனு ஆவணங்களை 2024-08-13ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், புதிய நகரம், பொலன்னறுவை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பொலன்னறுவை, புதிய நகரம், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ சமர்ப்பித்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் விலைமனுக்கள் திறக்கப்படும்.
07. விலைமனுக்களுடன் மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
08. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
09. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலை விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை தயவு செய்து எழுதவும்.

**பொறி. என். கிருஷ்ணரூபன்,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**பொலன்னறுவை.**

திகதி: 2024-07-22

The Housewives' companion
Classifieds on
Daily News

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER
adz it's what you want
Classified
Green Light for
Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Lake House Branch
Acc. No. 000000377

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம்

## ஊவா மாகாணம்

1. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பணிகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து குறித்த உள்ளூராட்சி நிர்வாகத்தின் (ஊவா மாகாணம்) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
2. "1987 இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின்" ஏற்பாடுகள் மூலம் விலைமனு நிர்வகிக்கப்படும். அதனால், விலைமனு மொத்தப் பெறுமதி ஐந்து மில்லியன் இலங்கை ரூபாவுக்கு (இ.ரூபா 5,000,000.00) மேற்பட்டிருந்தால் மாத்திரம் விலைமனுவுடன் சேர்த்து குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 11ஆவது பிரிவின்படி இலங்கையின் பொது ஒப்பந்த பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. தேசிய போட்டி ரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காக தொடர்புடைய துறையில் பதிவு செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தம் வழங்குதற்கான தகுதிக்கு தேவையான தகைமை விலைமனு ஆவணத்தில் பிரிவு 05 இல் உள்ள அட்டவணை (விலைமனு தரவு/ ஒப்பந்தத் தரவு) மற்றும் பிரிவு 4 இல் உள்ள தகைமை விபரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வார நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை அட்டவணையில் பட்டியலிடப்பட்ட குறித்த உள்ளூர் நிர்வாகத்தின் ஆணையாளர்/ செயலாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.
7. மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 ரூபாவை செலுத்தி 2024.07.22 ஆம் திகதி தொடக்கம் 2024.08.12 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஊவா – உள்ளூராட்சித் திணைகளத்திடம் இருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் செலுத்தப்படுதல் வேண்டும்.
8. விலைமனுக்களை 2024.08.13 ஆம் திகதி 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் பதுளை, மார்டின் சில்வா மாவத்தை, ஊவா – உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரங்களின்படி விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.08.01 ஆம் திகதி 10.00 மணிக்கு பதுளை, மார்டின் சில்வா மாவத்தை, ஊவா – உள்ளூராட்சித் திணைக்களத்தில் இடம்பெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க முடியும்.

| உள்ளூர் நிர்வாகத்தின் பெயர் | ஒப்பந்த இல. | பணி விபரம் | மதிப்பிடப்பட்ட செலவு (மில். இ.ரூபா) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலைமனு பிணை தொகை (ரூபா) | விலைமனு பிணை செல்லுபடி | விலைமனு ஆவணம் வழங்கப்படும் இடம் மற்றும் தொ.பே. இல. |
|---|---|---|---|---|---|---|---|---|
| தனமல்வில பிரதேச சபை | CLG/UP/MO/ TPS/W/2024/1 | உடவலவ பூங்காவில் துப்புரவேற்பாடு மற்றும் வாகன தரிப்பு வசதிகளை மேம்படுத்தல் | 7.94 | 45 நாட்கள் | C8, C7 மற்றும் C6 – கட்டிடம் | 80,000.00 | 2024.11.18 | உள்ளூராட்சி திணைக்களம் - ஊவா, மார்டின் சில்வா மாவத்தை, பதுளை 0552222407 |
| சொரனதொட்ட பிரதேச சபை | CLG/UP/BD/S OPS/W/2024/1 | துன்ஹிந்த நீர்வீழ்ச்சியை அடையும் வீதி மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 7.39 | 45 நாட்கள் | C8, C7 மற்றும் C6 – கட்டிடம | 74,000.00 | 2024.11.18 | |

**ஆணையாளர்**
**உள்ளூராட்சித் திணைக்களம்**
**ஊவா மாகாணம்**
**0552222407**
**2024.07.22**

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை, நுவரெலியா

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கீழ்க்காணும் வேலை விடயங்கள் சார்பாக தேசிய விலை குறியீடு கேள்வி முறையின் கீழ் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | வேலை விடயம் | தகைமை | மீளளிக் கடாத கேள்விக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி மீளளிக்கப்படும் | ஒதுக்கப்பட்ட மானியம் |
|---|---|---|---|---|---|
| DGH/NE/AL/03/23/ 2024 | Repairing Bio Medical Family Quarters | C9 and C8 | ரூ. 3000.00 | ரூ. 15,000.00 | ரூ.மி. 1.5 |
| DGH/NE/AL/03/24/ 2024 | Repairing Roof In Rheumatology Ward | C8, C7 and C6 | ரூ. 3000.00 | ரூ. 99,000.00 | ரூ.மி. 9.9 |
| DGH/NE/AL/03/21/ 2024 | Renovation Old Kitchen Rehabilitaion Unit (Manohari Unit) | C9, C8 and C7 | ரூ. 3000.00 | ரூ. 23,000.00 | ரூ.மி. 2.3 |
| DGH/NE/AL/03/26/ 2024 | Repairing Roof In front Of A&E Unit | C9 and C8 | ரூ. 3000.00 | ரூ. 13,000.00 | ரூ.மி. 1.3 |
| DGH/NE/AL/03/25/ 2024 | Extension Of Retainning Wall Backside In 18 Quartters | C9, C8 and C7 | ரூ. 3000.00 | ரூ. 28,000.00 | ரூ.மி. 2.8 |
| DGH/NE/AL/03/27/ 2024 | Extension Of Nurses Mess Building | C7, C6 and C5 | ரூ. 3000.00 | ரூ. 186,000.00 | ரூ.மி. 18.5 |

01. கேள்விப் பத்திரங்கள் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் தலைமையகத்தில் 2024.07.22 முதல் 2024.08.09 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.
02. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் மூலம் பிரதி மற்றும் நகல்பிரதி என வேறு வேறாக பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கேள்வி இலக்கம் மற்றும் குறித்த வேலையை குறிப்பிட்டு கேள்வி விலைமனுக்கள் என்று குறிப்பிட்டு, 2024.08.12 முற்பகல் 11.30 இற்கு முன்பு தலைவர், பிரதேச பெறுகைக் குழு மாவட்ட பொது வைத்தியசாலை, நுவரெலியா என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
03. 2024.08.12 பிற்பகல் 11.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.
04. கேள்வி விலைமனுக்கள் பற்றிய இறுதித் தீர்மானம் எடுத்தல் பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**வைத்திய நிபுணர் டபிள்யூ. ஆர்.எம்.எம். செனவிரத்ன.**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**நுவரெலியா.**

**தொ.பே. இலக்கம்: 052-2224307 (Ext 1408 or 1345)**

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

# கேள்விக்கோரல்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| அல்லை கந்தளாய் வீதி, புத்தளம் திருகோணமலை வீதி மற்றும் திருகோணமலை புல்மோட்டை வீதியின் இருமருங்கிலும் மேம்படுத்தல் வேலை. |
| திருகோணமலை மாவட்டத்தில் casting cover slab. |
| லவ் லேன் கட்டிட வீதியில் இணைக்கப்பட்ட வடிகாலின் நிர்மாணம். |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள்அமைச்சின் **www.rda.gov.lk** என்ற இணைய பக்கத்தை 2024.07.19 ஆம் திகதியிலிருந்து 2024.08.01 ஆம் திகதியன்று வரையும் பார்வையிடுமாறு ஆர்வமுள்ள விலைமனுதாரர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீஅஅ, திருகோணமலை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

## 2024ஆம் வருடத்திற்கான Envelops மற்றும் Brown Papers வழங்குவதற்கான பெறுகை

### ஒப்பந்த இல. 4/10/1/2024

1. பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள Envelops அல்லது Brown Papers வழங்கும் பெறுகைக்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் முழுமையான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| லொட் இல. | வகை | ஒரு லொட்டிலுள்ள பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 9" x 4" Sackcraft Envelopes Printed 85 ≥ GSM ≥ 78<br>Machine Direction — 75 ≥ MD Nm/g ≥ 65<br>Cross Direction - 35 ≥ CD Nm/g ≥ 28 | 100 பெக்கட்டுகள் (100000 கடித உறைகள்) |
| 2. | 9.5" x 4.5" Sackcraft Envelopes Printed 85 ≥ GSM ≥ 78<br>Machine Direction — 75 ≥ MD Nm/g ≥ 65<br>Cross Direction - 35 ≥ CD Nm/g ≥ 28 | 50 பெக்கட்டுகள் (50000 கடித உறைகள்) |
| 3. | 10.5" x 7.5" Sackcraft Envelopes Printed 85 ≥ GSM ≥ 78<br>Machine Direction — 75 ≥ MD Nrn/g ≥ 65<br>Cross Direction - 35 ≥ CD Nm/g ≥ 28 | 100 பெக்கட்டுகள் (100000 கடித உறைகள்) |
| 4. | 15" x 10" Sackcraft Envelopes Printed 85 ≥ GSM ≥ 78<br>Machine Direction — 75 ≥ MD Nm/g ≥ 65<br>Cross Direction - 35 ≥ CD Nm/g ≥ 28 | 250 பெக்கட்டுகள் (250000 கடித உறைகள்) |
| 5. | 16" x 13" Sackcraft Envelopes Printed 105 ≥ GSM ≥ 98<br>Machine Direction — 75 ≥ MD Nm/g ≥ 65<br>Cross Direction - 35 ≥ CD Nm/g ≥ 28 | 370 பெக்கட்டுகள் (370000 கடித உறைகள்) |
| 6 | 18.5" x 14.5" Sackcraft Envelopes Printed 85 ≥ GSM ≥ 78<br>Machine Direction — 75 ≥ MD Nm/g ≥ 65<br>Cross Direction - 35 ≥ CD Nm/g ≥ 28 | 75 பெக்கட்டுகள் (75000 கடித உறைகள்) |
| 7. | 19" x 14" Sackcraft Envelopes Printed 85 ≥ GSM ≥ 78<br>Machine Direction — 75 ≥ MD Nrn/g ≥ 65<br>Cross Direction - 35 ≥ CD Nrn/g ≥ 28 | 50 பெக்கட்டுகள் (50000 கடித உறைகள்) |
| 8. | 19.5" x 16.5" Sackcraft Double envelopes 85 ≥ GSM ≥ 78<br>Machine Direction — 75 ≥ MD Nm/g ≥ 65<br>Cross Direction - 35 ≥ CD Nm/g ≥ 28 | 100 பெக்கட்டுகள் (100000 கடித உறைகள்) |
| 9. | 30" x 40" Sackcraft Brown Papers<br>85 ≥ GSM ≥ 78<br>Machine Direction — 75 ≥ MD Nm/g ≥ 65<br>Cross Direction - 35 ≥ CD Nrn/g ≥ 28 | 400 பெக்கட்டுகள் (100000 கடித உறைகள்) |
| 10. | 15" x 10" White Bond Envelopes Printed<br>(85 ≥ GSM ≥ 78) | 228 பெக்கட்டுகள் (228000 கடித உறைகள்) |
| 11. | 15" x 10" White Bond Envelopes Non Printed<br>(85 ≥ GSM ≥ 78) | 65 பெக்கட்டுகள் (50000 கடித உறைகள்) |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இயைபுடைய பொருட்களை வழங்குவதில்/விற்பனை செய்வதில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2786200-238 அல்லது 011-2785219) மற்றும் 2024-08-09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2024-08-09ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படும் கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 11,500.00 (பதினோராயித்த ஐந்நூறு ரூபா) ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2024-11-09ஆம் திகதி வரை) செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட வடிவத்தின் பிரகாரம் 449,500.00 (நான்கு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து ஐந்நூறு ரூபா மட்டும்) இலங்கை ரூபாவிற்கான விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2024-12-09ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.
9 விலைமனுக்களை 2024-08-12ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03 ஆம் மாடி, வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "2024ஆம் வருடத்திற்கான **Envelops** அல்லது **Brown Papers** வழங்குவதற்கான பெறுகை - ஒப்பந்த இல.: 4/10/1/2024" என குறிப்பிடப்படல் வேண்டும்.
11. பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு பொறுப்பையும் ஏற்படுத்துதல் அல்லது பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்ற எவ்விதக் கடப்பாடும் இன்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்நேரத்திலும் எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது அனைத்து விலைமனுக்கோரல் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கும் எவ்விதக் காரணமும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
2024-07-22

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch
Acc. No. 000000377

# விலைமனுக்கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் முனையக் கட்டிடத்தின் கொங்கிறீட் கூரையின் பெனல் இடையே மூட்டிணைப்புகளுக்காக சீலண்ட் தடவுதல்

## விலைக்கேள்வி இலக்கம் : 107/T/2024

(APPLY SEALANT FOR JOINTS BETWEEN CONCRETE PANELS - TOP ROOF SLAB TERMINAL BUILDING AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் முனையக் கட்டிடத்தின் கொங்கிறீட் கூரையின் பெனல் இடையே மூட்டிணைப்புகளுக்காக சீலண்ட் வழங்குதல் மற்றும் தடவுதலுக்காக விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் C6 தரத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்த, ஒப்பந்ததாரர்களுக்கு மாத்திரமே இவ் ஒப்பந்தத்திற்காக விண்ணப்பிக்க முடியும். விலைக்கேள்வியாளர் இந்த தாபனத்தில் இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட விலைக்கேள்வி பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக இருத்தல் வேண்டும்.

விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்புகள் திருப்பிச் செலுத்தப்படாத ரூபா மூவாயிரம் (ரூபா 3,000.00) காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்இ கட்டுநாயக்கவில் அமைந்துள்ள, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன் அதற்காக விலைக்கேள்வியாளரினால் எழுத்து மூலமான கோரிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் மூலம் 2024.07.23 ஆந் திகதி முதல் 2024.08.12 ஆந் திகதி வரை வேலைசெய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவையேற்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல்தொடர் முகாமைத்துவ கிளை அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2024.08.13ஆந் திகதி புதன் பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர் அதிகாரம் வழங்கிய பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரச மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா ஐம்பதாயிரம் (ரூபா. 50,000.00) பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2024.08.02 ஆந் திகதி மு.ப. 10.00 இற்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் சிவில் பொறியியலாளர் (பராமரிப்பு) பிரிவின் கருத்தரங்கு அறையில் நடைபெறும் ஆரம்ப விலைக்கேள்வியுடன் தொடர்புடைய கூட்டத்தில் பங்கேற்குமாறு, அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கு மற்றும் அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகளுக்கு இத்துடன் அழைப்பு விடுக்கின்றேன்.

எந்தவொரு காரணத்தையும் சேர்க்காமல் நிறுவனத்தின் நலனுக்காக விலைக்கேள்வியின் அனைத்து அல்லது எந்தப் பகுதியையும் நிராகரிப்பதற்கான உரிமை தவிசாளர், பெறுகைக் குழுவிடம் உள்ளது.

மேலதிக தகவல்கள் பெற வேண்டுமாயின், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் தொலைபேசி இலக்கம் 011-2264103/ 011-2264102 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

# விலைக்கோரல் அறிவித்தல்

**வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

## விலைக்கோரல் இல. 038/T/2024

பலாலி, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு 250 KVA மின்பிறப்பாக்கியை வழங்குதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படவைத்தல்

(SUPPLY, TESTING AND COMMISSIONING OF 250 KVA GENERATOR AT JAFFNA INTERNATIONAL AIRPORT, PALALY)

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் பலாலி, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு 250 KVA மின்பிறப்பாக்கியை வழங்குதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படவைத்தலுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத நான்காயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 4,500.00) தொகையை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்தேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவு அலுவலகத்திற்கு 2024-07-23ஆம் திகதி முதல் 2024-07-23ஆம் திகதி வரையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் 3.00 மணி வரை விலைக்கோரல் ஆவணத் தொகுதியை கொள்வனவு செய்யலாம். விலைக்கோரல் ஆவணங்களை மேற்கூறப்பட்ட முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தொடர் வழங்கல் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலும் விலைமனுதாரரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.

விலைக்கோரல்கள் 2024 ஆகஸ்ட் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 இற்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் குறித்த விலைமனுக்கள் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவில் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல் பிணை முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதமொன்றை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவருக்கு செலுத்தும் வகையில் கோரும் போது செலுத்தப்படும் நான்கு இலட்சம் ரூபா (400,000.00 ரூபா) பெறுமதியான வங்கிப் பிணை முறியொன்றாக விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கல் முகாமைத்துவப் பிரிவின் 011-2264103 / 011-2264102 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**கட்டுநாயக்க.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

1. 2024.08.12 ஆம் திகதி மு.ப. 10.00 வரை யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலை, பிராந்திய பெறுகைக் குழு, தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்ட உருப்படியின் வழங்கலுக்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

| வரிசை இல | உருப்படி குறியீடு | மீளளிக்கப்படாத கேள்வி கட்டணம் (ரூபா) | வழங்கல், நிறுவுதல், பராமரிப்பு மற்றும் செயற்படவைத்தல் | அளவு | விலைமனு பிணை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | JTH/FE/LS/24/P1 | 2000.00 | 12 Color flow cytometer | 01 | 300,000.00 |
| 2 | JTH/FE/LS/24/P2 | 1000.00 | Manual Microtome | 01 | 100,000.00 |
| 3 | JTH/FE/BME/24/P3 | 1000.00 | Lot 1 Warmer with Double surface phototherapy | 01 | 100,000.00 |
| | | | Lot 2 Neonatal Stethoscope | 05 | |
| | | | Lot 3 Vein Finder | 01 | |
| 6 | JTH/FE/BME/24/P4 | 1000.00 | Body warmer | 04 | 100,000.00 |
| 7 | JTH/FE/BME/24/P5 | 1000.00 | CRRT | 01 | 100,000.00 |
| 8 | JTH/FE/BME/24/P6 | 1000.00 | Composite Light | 01 | 100,000.00 |

(உபகரணங்களின் விபரக்குறிப்புகள் விலைமனு ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது)

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) முறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. இலங்கை சந்தைக்காக வழங்கும் உபகரணங்களின் பரிந்துரைக்கப்பட்ட ஏக பிரதிநிதி/ அங்கீகாரம் பெற்ற முகவர் மாத்திரம் இந்த விலைமனுவில் பங்கேற்பதற்கு தகுதியுடையவராவர்.
4. ஒவ்வொரு திட்டத்திற்கான விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதி ஒன்றின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அசல் மற்றும் நகல் என வெவ்வேறாக தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.
5. பின்வருவனவற்றை சமர்ப்பித்து வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடையே 2024.07.22 ஆம் திகதி தொடக்கம் 2024.08.12 ஆம் திகதி வரை மேலுள்ள முகவரியில் கணக்காளரிடம் இருந்து விலைமனு ஆவணங்களை பெறுதல் வேண்டும்.
   a) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, பிராந்திய பெறுகைக் குழு தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்று.
   b) வர்த்தகப் பதிவின் சான்றிதழ் (சான்றிதழின் நிழல்பிரதி)
   c) தமது உற்பத்திக்காக முதன்மையாளர்களால் உள்ளூர் முகவர்களான உங்களது நிறுவனத்தை நியமித்தது தொடர்பில் வழங்கப்பட்ட சான்றிதழ்/ கடிதம் ஒன்று.
   d) மேல் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலை, பணிப்பாளருக்கு ரொக்கப்பணத்தில் செலுத்தியது.
6. உங்களது விலைமனுக்களில் பின்வரும் சான்றிதழ்களை இணைத்தல் வேண்டும்.
   a) செல்லுபடியான CDDA/ NMRA சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி.
   b) இந்தப் பெறுகையின் தகுதிக்கு ஒவ்வொரு கூறுவிலைக்காகவும் பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆவது பந்தியின் கீழ் நிறுவன பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல். ஒவ்வொன்றினதும் மொத்தப் பெறுமதி 5.0 மில்லியனுக்கு மேற்பட்டிருப்பதாயின்.
   c) வாங்கு பொருள் விவரப்பட்டியல் மாதிரி
7. அனைத்து விலைமனுக்களும் விலைமனுவின் இறுதித் திகதியில் இருந்து 2024.12.08 ஆம் திகதி வரை (119 நாட்கள்) செல்லுபடியான ரொக்கப்பணத்தில் அல்லது வங்கி முறி மூலம் ஒவ்வொரு திட்டத்திற்காகவும் விலைமனு திட்ட அட்டவணை/ ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட இலங்கை ரூபா தொகைக்கு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
8. விருப்புக் கேள்விமனு ஏற்கப்படமாட்டாது. விலைமனுதாரர் ஒரு வடிவத்திற்கு மாத்திரமே கூறுவிலையிட வேண்டும். மற்றொரு வடிவத்திலோ அல்லது விலையிலோ ஆன தேர்வு ஏற்கப்படமாட்டாது என்பதோடு அந்தக் கேள்விமனுக்கள் நேரடியாக நிராகரிக்கப்படும். மாற்று விலைமனுக்களும் நிராகரிக்கப்படும்.
9. விலைமனுக்கள் மூடப்பட்ட பின் தலைவர்/ பணிப்பாளரின் அலுவலகத்தில் அவை உடன் திறக்கப்படும் என்பதோடு விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.
10. எமது மருத்துவமனையின் பெறுகைப் பிரிவில் விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.
11. மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம்/ போ.வை. கணக்காளரிடம் இருந்து பெறலாம் (தொ.: 021 222 3149/ 021 221 2482)
12. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் 2024.08.01 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு இடம்பெறும்.

**பணிப்பாளர்/ தலைவர்.**
**பி.பெ.கு./ போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

# விலைக்கேள்வி அறிவித்தல்

## தேர்தல்கள் ஆணைக்குழு

### தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குத் தேவையான காகிதாதிகள் மற்றும் துடைத்தழிக்க முடியாத மைப்பேனைகள் வழங்கலுக்கான பெறுகைகள்

தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் கீழே குறிப்பிட்டுள்ளவற்றைக் கொள்வனவு செய்வதற்கு தகைமை வாய்ந்த வழங்குநர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெறுகைக் கோவை இலக்கம் | பெறுகையின் பெயர் மற்றும் விபரங்கள் | கேள்விப்பிணையின் / மீளச் செலுத்தப்படும் வைப்புப் பணப் பெறுமதி (இ. ரூபா) | கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இறுதித் தினம் | கேள்வி ஆவணங்கள் திறத்தல் |
|---|---|---|---|---|
| S/CC/02/Ink/Pen/PE/2024 | துடைத்தழிக்க முடியாத பேனைகள் கொள்வனவு செய்தல் | வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை ரூ. 250,000.00 அல்லது மீளச் செலுத்தப்படும் வைப்புப் பணம் ரூ. 110,000.00 | 2024 ஒகஸ்ட் 01 பி.ப. 3.00 | 2024 ஒகஸ்ட் 02 மு.ப. 10.00 |
| S/07/02/03-2024 (PRE) | புகைப்படப்பிரதி மற்றும் அச்சிடும் தாள்கள் கொள்வனவு செய்தல் | வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை ரூ 500,000.00 அல்லது மீளச் செலுத்தப்படும் வைப்புப் பணம் ரூ. 250,000.00 | 2024 ஒகஸ்ட் 01 பி.ப. 3.00 | 2024 ஒகஸ்ட் 02 பி.ப. 2.00 |
| S/07/02/02-2024 (PRE) | அச்சிட்ட மற்றும் தரவுகள் (DATA) அச்சிட்ட கடித உறைகள் கொள்வனவு செய்தல் (Crafr/Sack Craft/ White Paper) | வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட கேள்விப்பிணை ரூ 540,000.00 அல்லது மீளச் செலுத்தப்படும் வைப்புப் பணம் ரூ. 270,000.00 | 2024 ஒகஸ்ட் 01 பி.ப. 3.00 | 2024 ஒகஸ்ட் 02 மு.ப. 10.00 |
| S/07/02/06-2024(PRE) | காகிதாதிகள் கொள்வனவு செய்தல் (பேனை, பென்சில், காபன் தாள், கிளிப்புகள், ஸ்டெப்லர் மிஷின், கல்குலேட்டர் மற்றும் தேர்தல் செயற்பாட்டிற்கான ஏனைய காகிதாதிகள்) | வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட கேள்விப்பிணை ரூ. 400,000.00 அல்லது மீளச் செலுத்தப்படும் வைப்புப் பணம் ரூ. 200,000.00 | 2024 ஒகஸ்ட் 01 பி.ப. 3.00 | 2024 ஒகஸ்ட் 02 பி.ப. 2.00 |

2. விலைக் கேள்வி கோரல் தேசியபோட்டி முறைமையூடாக (NCB) மேற்கொள்ளப்படும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள பெறுகைகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவின் பெறுகைக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, அது சம்பந்தமாக ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஒவ்வொரு பெறுகைகளுக்கும் வெவ்வேறாக எழுத்துமூல விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் மற்றும் மீளச் செலுத்தப்படாத 1000.00 ரூபா பணத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவின் கணக்குக்கிளையில் காசாக மாத்திரம் கொடுப்பனவு செய்வதனூடாக ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள உரிய விலைக்கேள்வி கோரும் ஆவணங்களின் தொகுதியொன்றை 2024.07.22 தேதி முதல் அட்டவணையில் மேலே குறிப்பிட்டுள்ளவாறான திகதிகள் வரை வார நாட்களில் மு.ப. 9.00 இலிருந்து பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ள முடியும்.
4. நிரப்பப்பட்ட விலைக் கேள்வி ஆவணங்கள் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது வருகை தந்து மேலே அட்டவணையில் ஒவ்வொரு பெறுகைகளுக்காகவும் குறிப்பிட்டுள்ளவாறு அல்லது அதற்கு முன்னர் கையளிக்க முடியும். பதிவு தபாலில் அனுப்பப்படும் கேள்வி ஆவணங்கள் குறித்த நேரத்திற்கு முன்னர் அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறுகின்ற விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். விலைக் கேள்விகளை திறத்தல் மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படுவதுடன் அச்சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களின் முகவர் ஒருவர் கலந்து கொள்ள முடியும். மேற்படி அட்டவணைக்கேற்ப ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணை அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கணக்குக் கிளையில் பிணைப்பணத்தை வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.
5. தேர்தல் ஆணைக்குழுவின் முகவரி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**
**தேர்தல்கள் ஆணைக்குழு,**
**இல. 02, சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**
**தொலைபேசி இலக்கம் - 0112-868441-3**
**2024.07.22**



# இந்தியாவுக்கு எதிரான இலங்கை டி20 குழாமில் பெரேராவுடன் பினுர, சமிந்து, சந்திமாலுக்கு இடம்

## அசலங்கவின் கோரிக்கைக்கு அமைய இடத்தை தக்கவைத்தார் குசல் மெண்டிஸ்

இந்தியாவுக்கு எதிராக எதிர்வரும் சனிக்கிழமை பல்லேகலவில் ஆரம்பமாகும் மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடருக்கான இலங்கைக் குழாத்தில் பினுர பெர்னாண்டோ, சமிந்து விக்ரமசிங்க, தினேஷ் சந்திமால் மற்றும் குசல் ஜனித் பெரேரா இடம்பெற்றுள்ளனர்.

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் கடந்த மாதம் நடைபெற்ற டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியில் இடம்பெற்ற டில்ஷான் மதுஷங்க, அஞ்சலோ மத்தியூஸ், சதீர சமரவிக்ரம மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோருக்கு பதிலே இந்த வீரர்கள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக் தொடரில் சோபித்து கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணிக்காக எட்டுப் போட்டிகளில் 13 விக்கெட்டுகளை வீழ்த்திய நிலையிலேயே பெர்னாண்டோ அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் தம்புள்ள சிக்ஸர்ஸ் அணிக்காக ஆடிய டில்ஷான் மதுஷங்க திறமையை வெளிப்படுத்தத் தவறிய நிலையில் ஆறு போட்டிகளில் வெறும் இரண்டு விக்கெட்டுகளையே வீழ்த்தினார்.

இந்நிலையில் மதுஷங்கவுக்கு பதிலாகவே பெர்னாண்டோ டி20 குழாத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். ஏற்கனவே துஷ்மன்த சமீர, நுவன் துஷார மற்றும் மதீஷ பதிரண ஆகியோர் அணியில் இடம்பெற்றிருக்கும் நிலையில் நான்காவது வேகப்பந்து வீச்சாளராகவே பெர்னாண்டோ சேர்க்கப்பட்டுள்ளார்.



இளம் சகலதுறை வீரரான விக்ரமசிங்க லங்கா பிரீமியர் லீக்கில் சிறப்பாக செயற்பட்டிருந்ததோடு குறிப்பாக துடுப்பாட்டத்தில் சோபித்தார். இந்த ஆட்டம் அவர் மீது தேர்வாளர்களின் அவதானம் செல்ல காரணமாகியுள்ளது. அவர் எட்டுப் போட்டிகளில் 186 ஓட்டங்களை பெற்றதோடு வலது கை மிதவேகப் பந்து வீச்சாளராக ஏழு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

கடந்த டி20 உலகக் கிண்ணத்தில் இடம்பெறாத சிரேஷ்ட வீரர்களான பெரேரா மற்றும் சந்திமால் இருவரும் லங்கா பிரீமியர் லீக் தொடரில் சோபித்த நிலையிலேயே இலங்கை அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். சந்திமால் கடைசியாக 2022 பெப்ரவரியில் இந்தியாவுக்கு எதிரான டி20 போட்டியிலேயே ஆடிய இருந்தார் என்பதோடு பெரேரா இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் கடைசியாக இலங்கை டி20 அணிக்காக ஆடி இருந்தார்.

லங்கா பிரீமியர் லீக் தொடரில் தத்தமது அணிக்காக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய இவர்கள் முறையே 276 மற்றும் 296 ஓட்டங்களை பெற்றனர். இந்தத் தொடரில் அதிக ஓட்டங்கள் பெற்றவர்கள் வரிசையிலும் இவர்களால் முன்னிலை பெற முடிந்தது.

லங்கா பிரீமியர் லீக்கில் குறிப்பிடத்தக்க அளவில் சோபித்தபோதும் மத்தியூஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலே மற்ற மூத்த வீரர்களில் தேர்வாளர்கள் அவதானம் செலுத்தியுள்ளனர்.

வனிந்து ஹசரங்க டி20 அணித் தலைமை பதவியில் இருந்து விலகிய நிலையில் சரித் அசலங்கவிடம் தலைமை பதவி வழங்கப்பட்டிருப்பதோடு வனிந்து அணியில் முக்கிய வீரராக தொடர்ந்து இடம்பெற்றுள்ளார்.

டி20 உலகக் கிண்ணத்தில் போதுமான அளவு சோபிக்காத நிலையிலும் அசலங்கவின் கோரிக்கைக்கு அமைய குசல் மெண்டிஸ் அணியில் தமது இடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளார்.

கடந்த 12 மாதங்களில் 12 இன்னிங்ஸ்களில் ஆடியிருக்கும் மெண்டிஸின் ஓட்ட சராசரி 29.91 ஆகும். சுழற்பந்து முகாமில் வனிந்துவுட மஹீஷ் தீக்ஷன மற்றும் துனித் வெள்ளாலகே இடம்பெற்றுள்ளனர்.

மறுபுரம் ரோஹித் ஷர்மா ஓய்வு பெற்ற நிலையில் இந்திய டி20 அணி சூர்யகுமார் யாதவ் தலைமையிலேயே இலங்கை வரவுள்ளது.

கடைசியாக ஷிகர் தவான் தலைமையில் இந்திய அணி கடந்த 2021 ஆம் ஆண்டு இலங்கை வந்தபோது இலங்கை அணி 2–1 என தொடரை வென்றது. இந்நிலையில் மூன்று டி20 மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடுவதற்காக இந்திய அணி இன்று (22) இலங்கை வரவுள்ளது.

**இலங்கை உத்தேச அணி:** சரித் அசலங்க (தலைவர்), பத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ், குசல் ஜனித் பெரேரா, கமிந்து மெண்டிஸ், தசுன் ஷானக்க, தினேஷ் சந்திமால், வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன, மதீஷ பதிரண, துஷ்மன்த சமீர, அவிஷ்க பெர்னாண்டோ, சமிந்து விக்ரமசிங்க, துனித் வெள்ளாலகே. நுவன் துஷார, பினுர பெர்னாண்டோ.



## சர்வதேச செய்திகள்

# காசா, யெமன், லெபனானில் இஸ்ரேலின் தாக்குதல்களினால் பெரும் பதற்ற சூழல்

## பலஸ்தீனர்களின் பலி எண்ணிக்கை 39,000ஐ நெருங்கியது

இஸ்ரேலிய இராணுவம் காசா, யெமன் மற்றும் லெபனானில் கடும் தாக்குதல்களை நடத்திய நிலையில் மத்திய கிழக்கில் கடும் பதற்ற சூழல் ஏற்பட்டுள்ளது. ஈரான் ஆதரவு போராட்ட குழுக்களின் தாக்குதல்களுக்கு பதிலடியாகவே இஸ்ரேல் நேற்று (21) அடுத்தடுத்து தாக்குதல்களை நடத்தியுள்ளது.

காசாவில் ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையே ஒன்பது மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் இஸ்ரேலின் நெருங்கி நட்பு நாடான அமெரிக்காவும் ஈடுபட்டிருக்கும் நிலையில் யெமனில் இருந்து வீசப்பட்ட ஏவுணை ஒன்றை இடைமறித்தாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது. முற்றுகையில் உள்ள காசாவில் இஸ்ரேல் தனது உக்கிர தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வரும் நிலையிலேயே இந்த ஏவுகணை இஸ்ரேலை நோக்கி பாய்ந்துள்ளது.

காசாவெங்கும் நடத்தி வரும் இஸ்ரேலின் தாக்குதல்களில் மேலும் பலர் கொல்லப்பட்டுள்ளது. மத்திய காசாவின் நுஸைரத் மற்றும் புரைஜ் பகுதிகள் மற்றும் தெற்கின் கான் யூனிஸ் நகரில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் இடம்பெற்றிருப்பதாக காசா சிவில் பாதுகாப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தெற்கு காசாவின் ரபாவில் உள்ள சவூதி மாவட்டத்தில் தற்போது கடுமையான மோதல்கள் இடம்பெற்று வருவதாகவும் சரமாரி பீரங்கி குண்டுகள் வீசப்பட்டு வருவதாகவும் அங்குள்ள குடியிருப்பாளர்களை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேலிய நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தியதாக ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் அமைப்புகள் குறிப்பிட்டிருப்பதோடு பிரதான துறைமுகம் ஒன்றை போர் விமானங்கள் தாக்கியதற்கு பதிலடி கொடுப்பதாக ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டில் இருக்கும் ஹுதைதா துறைமுகம் மீதான தாக்குதலினால் எரியும் தீ மத்திய கிழக்கெங்கும் தெரிவதாகவும் அதன் முக்கியத்துவம் தெளிவாகிறது என்றும் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலன்ட் குறிப்பிட்டுள்ளார்.

யெமனில் இஸ்ரேலினால் நடத்தப்பட்ட முதல் தாக்குதல் பற்றி விபரித்த கலன்ட், ஹூத்திக்கள் எம்மை தாக்கத் துணிந்தால் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எச்சரித்தார். ஹூத்திக் கிளர்ச்சியாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேலின் பிரதான நகரான டெல் அவிவ் மீது நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே இஸ்ரேல் யெமனில் தாக்குதலை நடத்தியது.

ஹுதைதா மீதான தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டு மேலும் 87 பேர் காயமடைந்ததாக ஹூத்திக்கள் தெரிவித்துள்ளனர்.

**வொஷிங்டன் செல்லும் நெதன்யாகு**

பெரும் உயிரிழப்புகள் மற்றும் அழிவுகளை ஏற்படுத்தி இருக்கும் காசாவில், போர் நிறுத்தம் ஒன்று எட்டப்படும் வரை இஸ்ரேல் மீதான தாக்குதல்கள் தொடரும் என்று லெபனானின் ஹிஸ்புல்லா மற்றும் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் கூறி வருகின்றனர்.

இஸ்ரேலில் 1195 பேர் கொல்லப்பட்டு 250 பேர் வரை பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட பலஸ்தீன போராளிகளின் கடந்த ஒக்டோபர் 7 தாக்குதலை அடுத்தே காசாவில் போர் வெடித்தது.

தொடர்ந்தும் 116 பேர் வரை பயணக்கைதிகளாக காசாவில் இருப்பதாகவும் இவர்களில் உயிரிழந்த 42 பேரும் அடங்குவதாகவும் இஸ்ரேல் இராணுவம் கூறுகிறது.

ஹமாஸ் அமைப்பை ஒழிப்பதாகக் கூறி காசாவில் இஸ்ரேலியப் படை வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக ஒன்பது மாதங்களுக்கு மேலாக இடைவிடாமல் நடத்தி வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை தற்போது 39,000ஐ நெருங்கியுள்ளது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 64 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. இதன்மூலம் அங்க கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 38,983 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 89,727 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தப் போர் காசாவில் பட்டினி மற்றும் சுகாதார நெருக்கடி ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. காசாவுக்கு அத்தியாவசிய பொருட்கள் செல்வதை இஸ்ரேல் முடக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காசா கழிவு நீரில் போலியோ தொற்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதோடு இதுவரை எந்த சம்பவமும் பதிவாகவில்லை என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதனை கட்டுப்படுத்த சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டி உள்ள என்றும் அது வலியுறுத்தியுள்ளது.



காசாவுக்குள் கட்டுப்பாடு இன்றி மேலும் பல தொற்றுகள் பரவக்கூடும் என்று உலக சுகாதார அமைப்பின் பேச்சாளர் கிறிஸ்டியன் லின்ட்மியர் கடந்த வெள்ளிக்கிழமை எச்சரித்திருந்தார்.

பல மாதங்களாக காசாவில் போர் நீடிக்கும் நிலையில் அங்கு பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு இஸ்ரேலிய மக்களிடம் இருந்து அரசுக்கு கடும் அழுத்தம் இருந்து வருவதோடு இஸ்ரேலிய அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

'அவர்களை மீட்டு வா' என்ற கோசங்களுடனான ஆர்ப்பாட்டம் டெல் அவிவில் நேற்று முன்தினமும் இடம்பெற்றது. போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அழுத்தங்கள் அதிகரித்திருக்கும் சூழலில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எதிர்வரும் புதன்கிழமை (24) வொஷிங்டனில் அமெரிக்க பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார். 'அவர் அமெரிக்கா போகக் கூடாது. முதலில் உடன்டிக்கை ஒன்றில் கைச்சாத்திட்ட பின்னரே வொஷிங்டன் செல்ல வேண்டும்' என்று டெல் அவிவ் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற 64 வயது அபிரா அஸ்ரிலி என்பவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார். போர் நிறுத்தம் ஒன்று எட்டப்படும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

'போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது, பணயக்கைதிகளை மீட்பது மற்றும் நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்கான சிறந்த பாதையில் எங்களை அழைத்துச் செல்லக்கூடிய உடன்படிக்கை ஒன்றை பெறும் இலக்கை நோக்கி நாம் முன்னேறிச் செல்வதாக நான் நம்புகிறேன்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயிம் எகிப்து மற்றும் கட்டாரின் மத்தியஸ்தத்தில் இடம்பெறும் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை தற்போது எந்த முன்னேற்றமும் இன்றி ஸ்தம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாய்வான் வானில் சீன விமானங்கள்



தாய்வானின் தென் மேற்கு மற்றும் தென் கிழக்கு வான் பாதுகாப்பு அடையாள பிராந்தியத்திற்குள் சீனாவின் 14 இராணுவ விமானங்கள் பிரவேசித்ததாக தாய்வான் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் எக்ஸ் தளத்தில் அவ்வமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், கடந்த வாரம் சீனாவின் நான்கு கரையோர காவல் படைக் கப்பல்கள் தாய்வானின் கட்டுப்பாட்டிலுள்ள கின்மென் கவுண்டி பகுதியில் பிரவேசித்தது. இது ஜூலை மாதத்தில் இடம்பெற்ற முதலாவது அத்துமீறலாகும்.

தற்போது 16 சீன இராணுவ விமானங்கள் தாய்வானுக்கு அருகில் அவதானிக்கப்பட்ட போதிலும் அவற்றில் 14 விமானங்கள் எமது வான் பரப்புக்குள் பிரவேசித்தன. அத்தோடு 09 சீன கடற்படைக் கப்பல்களும் தாய்வான் எல்லைக்கு அருகில் காணப்பட்டன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பங்களாதேஷில் ஆர்ப்பாட்டத்திற்கு காரணமான 'வேலை ஒதுக்கீட்டை' நீக்க நீதிமன்றில் தீர்ப்பு

பங்களாதேஷில் குறைந்தது 151 பேர் கொல்லப்பட்ட மாணவர் ஆர்ப்பாட்டத்திற்கு காரணமான அரச வேலைவாய்ப்பில் பெரும்பாலான இட ஒதுக்கீட்டை அந்நாட்டு உச்ச நீதிமன்றம் நேற்று நீக்கியுள்ளது.

அரசு வழங்கிய இட ஒதுக்கீட்டை கீழ் நீதிமன்றம் ஒன்று உறுதி செய்த நிலையில் உச்ச நீதிமன்றத்தின் மேன்முறையீட்டுப் பிரிவு வழங்கிய தீர்ப்பில், 93 வீதமான அரச வேலை வாய்ப்புகள் தகுதி அடிப்படையிலான அபேட்சகர்களுக்கு வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மீதமுள்ள 7 வீதமான அரசாங்க வேலைகளை 1971ஆம் ஆண்டு பங்களாதேஷ் சுதந்திரத்துக்காகப் போரிட்டவர்களின் குடும்பத்தினருக்கும் மற்றவர்களுக்கும் வழங்க அது உத்தரவிட்டது. இதற்கு முன்னர் இந்தப் பிரிவில் உள்ளவர்களுக்கு 30 வீதம் ஒதுக்கப்பட்டிருந்தது. பங்களாதேஷில் ஒதுக்கீட்டு முறையை ஒழிக்கும்படி ஆயிரக்கணக்கான மாணவர்கள் போராடியதன் விளைவாக இந்தத் தீர்ப்பு வந்துள்ளது. ஆர்ப்பாட்டத்தின் உச்சக்கட்டமாகத் தலைநகர் டாக்காவில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



கடந்த வியாழக்கிழமை தொடக்கம் பங்களாதேஷில் இணையதளம் மற்றும் குறுஞ்செய்தி வசதிகள் முடக்கப்பட்டிருப்பதோடு நாடு முழுவதும் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

கலவரத்தை அடக்க இராணுவத்தினர் களமிறக்கப்பட்ட நிலையில், ஊரடங்கு உத்தரவுகளை மீறும் குழுக்கள் அல்லது நபர்கள் மீது கண்டதும் சுட உத்தரவு அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு தொடர்பில் அரசில் இருந்த உடன் எந்த பதிலும் அளிக்கப்படாத போதும் ஆர்ப்பட்டங்கள் தொடரும் என்று மாணவர் குழு ஒன்று ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ் உலகில் வேகமான வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இருந்தபோதும் அது தொழில் வாய்ப்புகளை உருவாக்கத் தவறியுள்ளது.

சுமார் 18 மில்லியன் இளைஞர்கள் அங்கு வேலை இன்றி தவிக்கும் நிலையின் பல்கலைக்கழக பட்டதாரிகள் தங்களை விட குறைவான கல்வியை பெற்றவர்களை விடவும் அதிக வேலையின்மையை எதிர்கொண்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 22ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Pradeshiya Sanwardhana Bank

## பெறுமதியான சொத்துக்களுக்கான விலைமனுக் கோரல்

| மாவட்டம் | அமைவிடம் | வகை | ஏ: | ரூ.: | பே.: |
|---|---|---|---|---|---|
| பொலன்னறுவை | பொலன்னறுவை, ஜயந்தி புர, யாய 06 | நெல் ஆலையுடனான கட்டிடத்தில் அமைந்துள்ள காணி மற்றும் சேற்று நிலம் | 1<br>1 | 1<br>2 | 14.4<br>13.6 |
| பொலன்னறுவை | சாமபுர கிராம அதிகாரி பிரிவு 80, ஹிங்குரக்கொட (ஹிங்குரக் தமன எனும் காணி) | குடியிருப்பு வீட்டுடன் காணி | 0 | 1 | 10 |
| குருநாகல் | பலாபிட்டிய கிராம அதிகாரி பிரிவு, கஹபிட்டிய, பஹல பிடியேவத்த, பண்டுவஸ்நுவர | வீட்டுடன் காணி | 0 | 1 | 0 |

மேலதிக தகவல்கள் மற்றும் சொத்து பரிசீலனைக்காக தயவு செய்து வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் 011-2035454 நீடிப்பு 418, 426 என்ற இலக்கத்தை அழையுங்கள் தயவு செய்து உங்களின் உத்தேச விலைமனுக்கள் பொறியிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடது மேல் மூலையில் 'சொத்துக்களுக்கான விலைமனுக்கள்' என்று குறிப்பிட்டு 2024.08.16 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எந்தப் பிரதேச அபிவிருத்தி வங்கிக் கிளையொன்றில் அல்லது www.rdb.lk இடம் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**உதவி பொது முகாமையாளர் அறவிடல்,**
**பிரதேச அபிவிருத்தி வங்கி,**
**தலைமையகம்,**
**இல. 933, கண்டி வீதி, வெதமுல்ல.**
**களனி.**

**இக் கேள்வி சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் இறுதித் தீர்மானம் வங்கிக்கு உரியது.**

## கேள்விக்கான அழைப்பு

### சுகாதார அமைச்சு

### மாவட்ட பொது வைத்தியசாலை – அம்பாறை

அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வழங்கல்களைப் பெற்றுக் கொள்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | வேலை விடயம் | அளவு | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ.) | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| | | Medical Equipment | | | |
| 01 | AM/GH/FB/F2/01-2024 | Supply Installation & Maintenance Dialysis Machine | 02 | 5,000.00 | 160,000.00 |
| 02 | AM/GH/FB/F2/02-2024 | Supply Installation & Maintenance EEG Machine | 01 | 5,000.00 | 240,000.00 |
| 03 | AM/GH/FB/F2/05-2024 | Supply Installation & Maintenance Electro Surgical Unit (Diathermy Machine) | 02 | 5,000.00 | 160,000.00 |
| 04 | AM/GH/FB/F2/06-2024 | Supply Installation & Maintenance Blood Gas Analyzer | 02 | 5,000.00 | 40,000.00 |
| 05 | AM/GH/FB/F2/07-2024 | Supply Installation & Maintenance OT Table | 01 | 5,000.00 | 300,000.00 |
| 06 | AM/GH/FB/F2/08-2024 | Supply Installation & Maintenance Shockwave Therapy Machine | 01 | 5,000.00 | 90,000.00 |
| 07 | AM/GH/FB/F2/09-2024 | Supply Installation & Maintenance Shortwave Diathermy Machine | 01 | 5,000.00 | 90,000.00 |
| 08 | AM/GH/FB/F2/10-2024 | Supply Installation & Maintenance Continuous Passive Motion-Upper Limb | 01 | 5,000.00 | 40,000.00 |
| 09 | AM/GH/FB/F2/11-2024 | Supply Installation & Maintenance Ultrasound Scanner GYN & OBS | 01 | 5,000.00 | 300,000.00 |
| 10 | AM/GH/FB/F2/12-2024 | Supply Installation & Maintenance Patient Warmer | 01 | 5,000.00 | 30,000.00 |
| 11 | AM/GH/FB/F2/13-2024 | Supply Installation & Maintenance OT Lamp Ceiling | 01 | 5,000.00 | 120,000.00 |
| 12 | AM/GH/FB/F2/14-2024 | Supply Installation & Maintenance Neonatal Ventilator | 02 | 5,000.00 | 160,000.00 |
| 13 | AM/GH/FB/F2/15-2024 | Supply Installation & Maintenance Neonatal Monitor ICU | 03 | 5,000.00 | 240,000.00 |
| 14 | AM/GH/FB/F2/16-2024 | Supply Installation & Maintenance Warmer With Resuscitator Infant | 01 | 5,000.00 | 80,000.00 |
| 15 | AM/GH/FB/F2/17-2024 | Supply Installation & Maintenance Multi parameter Monitor OT | 04 | 5,000.00 | 400,000.00 |
| 16 | AM/GH/FB/F2/18-2024 | Supply Installation & Maintenance Blood & Fluid Warmer | 01 | 5,000.00 | 20,000.00 |
| 17 | AM/GH/FB/F2/19-2024 | Supply Installation & Maintenance Tabletop centrifuge | 02 | 5,000.00 | 64,000.00 |
| 18 | AM/GH/FB/F2/20-2024 | Supply Installation & Maintenance Anesthetic Machine With Workstation | 02 | 5,000.00 | 260,000.00 |
| 19 | AM/GH/FB/F2/21-2024 | Supply Installation & Maintenance Digital X-Ray System | 01 | 5,000.00 | 800,000.00 |

02. தேசிய போட்டி கேள்வி முறைமை (NCB) இன் பிரகாரம் கேள்விகள் கோரப்படுகின்றன.
03. கேள்விதாரர்களுக்குத் தேவையாயின் கேள்வி ஆவணங்களை அலுவலக நேரங்களில் பெறுகைப் பிரிவில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம். இதுபற்றிய மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கணக்காளரை அழைத்து (நீடிப்பு 240) கீழ்க்காணும் வைத்தியசாலையின் இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
04. தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு ஒரு கேள்விக்காக மீளளிக்கப்படாத மேலே குறிப்பிடப்படும் கேள்வி ஆவணக் கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 3.00 வரையும் சனி நாட்களில் முற்பகல் 9.00 முதல் ந.ப. 12.00 வரையும் வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்னர் 2024.07.22 முதல் 2024.08.22 வரை தேவையான கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
05. தொடர் இல. 01 - 19 இல் குறிப்பிடப்படும் உபகரணங்களுக்காக கேள்விக்கு முன்னரான கலந்துரையாடல் (Pre Bid Meeting ) 2024.08.05 நடைபெறும் (நேரங்கள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது)
06. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வேண்டுதல் கடிதத்துடன் கம்பனிகள் பதிவுச் சான்றிதழின் அல்லது வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.
07. ரூபா ஐந்து மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விகளுக்கு 1987 இல. 03 பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தின் கீழ் பதிவு செய்து இருப்பதுடன் கேள்வியுடன் அப் பதிவு சான்றிதழ் அல்லது அதனை உறுதி செய்யக் கூடிய ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அது சமர்ப்பிக்காத கேள்விகள் நிராகரிக்கப்படும்.
08. 06 மாதத்திற்கு செல்லுபடியாகுமாறு மத்திய வங்கியின் அனுமதி பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணைமுறி சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
09. சகல கேள்வி ஆவணங்களும் இரு பிரதிகளைக் கொண்டிருப்பதுடன் அப் பிரதிகள் மூலப்பிரதி (Original) மற்றும் நகல்பிரதி (Duplicate) என உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
10. பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், 2024.08.13 மு.ப. 10.30 இற்கு முன்பு அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டுவந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடவும் முடியும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். அன்றே மு.ப. 10.30 இற்கு பணிப்பாளர் பணிமனையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
11. கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை - அம்பாறை,**
**தொ.பே. இல. 063-2222261**
**மின்னஞ்சல்: ghampara@gmail.com**
**பெக்ஸ்: 063-2223928**

The Housewives' companion
Classifieds on
Daily News

## விலைக்கோரல்களுக்கான அழைத்தல்

### பதுளை மாநகர சபை

1. பதுளை மாநகர சபையானது உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையின் பணக் கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை பதுளை மாநகர சபையின் ஆணையாளரின் சார்பாக பதுளை மாநகர சபை பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | வேலைகளின் விளக்கம் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (மில். இ.ரூபாவில்) | ஒப்பந்தக் காலம் | தேவைப்படும் தரம் | கேள்விப் பிணைத் தொகை (ரூ) செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| BMC/WORKS/ 2024/01 | Construction of Indoor Futsal and Cricket Court at Badulla | 33.0 | 120 நாட்கள் | சி-4, சி-5 மற்றும் சி-6 –கட்டிடம் | 330,000.00 மற்றும் 20.11.2024 |

3. விலைமனுக் கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள இயைபுள்ள துறையின் தரத்தில் பதிவுபெற்றிருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் 04 ஆம் பிரிவின் தகைமை தகவல் மற்றும் 5 ஆம் பிரிவின் அட்டவணைகள் (விலைமனுக்கோரல் தரவு/ஒப்பந்ததரவு) ஆகியவற்றை உள்ளடக்கும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும் பதுளை மாநகர சபை பொறியியலாளர் (0715160153) பதுளை மாநகர சபை ஆணையாளர் (055-2222275)ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
7. 2024.07.22 ஆம் திகதியிலிருந்து 2024.08.11 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 7,500 ரூபாவை செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்முதல் செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
8. 2024.08.12 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராகபதுளை, பண்டாரவளை வீதி, பதுளை மாநகர சபையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடியபின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளவாறான தகவலின் பிரகாரமான கேள்விப் பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. 2024.08.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பதுளை, பண்டாரவளை வீதி, பதுளை மாநகர சபையில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறுமென்பதுடன் ஆர்வமுள்ள விலைமனுதாரர் அவர்களின் சொந்த செலவிலேயே இக்கூட்டத்தில் பங்குபற்றலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பதுளை மாநகர சபை.**
**055-2222275**

22.07.2024.

## விலைமனுக்கள் கோரல்

### சுகாதார அமைச்சு

### 2024/2025ஆம் வருடங்களில் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு சமைக்கப்படாத உணவுப் பொருட்களை வழங்குதல்

01. கொழும்பு-10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தையின் இலக்கம் 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 1ஆம் மாடியில் அமைந்துள்ள சுகாதார அமைச்சின் வழங்கல் குழு தலைவரினால் பின்வரும் 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 14 வைத்தியசாலைகளுக்கு 2024/2025ஆம் வருடங்களில் நோயாளர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்களுக்கான சமைக்காத உணவு வகைகளை தொடர்ச்சியாக வழங்குவதனை உறுதிப்படுத்தக்கூடிய வழங்குநர்களிடமிந்து தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்கள் ஒரு வைத்தியசாலை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளுக்காக சுகாதார அமைச்சின் பிரதான கணக்காளருக்கு ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் மீளளிக்கப்படாத பின்வரும் அட்டவணையில் அந்தந்த வைத்தியசாலைக்குரிய தொகையினை ஆவணக் கட்டணமாக செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு சகிதம் வேண்டுகோள் கடிதமொன்றையும் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றையும் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-07-22ஆம் திகதி முதல் 2024-08-12ஆம் திகதி வரை பொதுவான கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் அமைச்சின் வழங்கல் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. அந்தந்த வைத்தியசாலைக்கு இயைபான உணவு மதிப்பீடுகள் பற்றிய விபரங்கள் விலைமனு மாதிரிப் படிவத்துடன் வழங்கப்படும்.

04. ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையான வைத்தியசாலைகளுக்கு கேள்விகளைச் சமர்ப்பிக்க உத்தேசிப்பதாயின் அதன்பொருட்டு வெவ்வேறான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| தொ. இல. | வைத்தியசாலைகளின் பெயர் | பெறுகை இலக்கம் | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) | கேள்வி வைப்பின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | பொது வைத்தியசாலை திருகோணமலை | MH/PB/10/001/RF/2024 | 12,500.00 | 682,900.00 |
| 02 | பொது வைத்தியசாலை, கேகாலை | MH/PB/10/002/RF/2024 | 12,500.00 | 537,300.00 |
| 03 | ஆதார வைத்தியசாலை கல்முனை (வடக்கு) | MH/PB/10/003/RF/2024 | 3,500.00 | 298,000.00 |
| 04 | ஆதார வைத்தியசாலை கந்தளாய் | MH/PB/10/004/RF/2024 | 3,500.00 | 209,100.00 |
| 05 | போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் | MH/PB/10/005/RF/2024 | 20,000.00 | 1,344,400.00 |
| 06 | பொது வைத்தியசாலை அம்பாறை | MH/PB/10/006/RF/2024 | 20,000.00 | 1,116,500.00 |
| 07 | பொது வைத்தியசாலை அக்கரைப்பற்று | MH/PB/10/007/RF/2024 | 3,500.00 | 406,800.00 |
| 08 | பொது வைத்தியசாலை கம்பளை | MH/PB/10/008/RF/2024 | 3,500.00 | 191,800.00 |
| 09 | அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை கல்முனை | MH/PB/10/009/RF/2024 | 12,500.00 | 775,500.00 |
| 10 | மாவட்ட வைத்தியசாலை சிலாபம் | MH/PB/10/010/RF/2024 | 12,500.00 | 504,800.00 |
| 11 | போதனா வைத்தியசாலை குளியாப்பிட்டி | MH/PB/10/011/RF/2024 | 12,500.00 | 333,700.00 |
| 12 | தேசிய வைத்தியசாலை, கண்டி | MH/PB/10/012/RF/2024 | 20,000.00 | 1,820,300.00 |
| 13 | பொது வைத்தியசாாலை பொலன்னறுவை | MH/PB/10/013/RF/2024 | 20,000.00 | 1,081,500.00 |
| 14 | தேசிய சிறுநீரக விசேடத்துவ வைத்தியசாலை பொலன்னறுவை | MH/PB/10/014/RF/2024 | 1000.00 | 123,200.00 |

05. மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றில் / காப்புறுதி நிறுவனமொன்றில் இல. 385, சுவசிறிபாய, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு-10 முகவரியிலுள்ள சுகாதார அமைச்சின் செயலாளரின் பெயருக்கு எழுதப்பட்ட பிணை முறியொன்றை கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் முதல் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.

06. விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் ……………………………. வைத்தியசாலைக்கு சமைக்கப்படாத உணவுப் பொருட்களை வழங்குதல் 2024/2025" எனத் தெளிவாகக் குறிப்பிட்டு 2024-08-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், அமைச்சு பெறுகைக் குழு (C), சுகாதார அமைச்சு, மெடி ஹவுஸ் கட்டிடம், முதலாம் மாடி, இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அம்முகவரியில் அமைந்துள்ள பெறுகைக் கிளைக்கு நுழையும் இடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

07. 2024-08-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த உடன் விண்ணப்பங்கள் திறக்கப்படும். விண்ணப்பங்கள் திறக்கப்படும் நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி ஒருவர் பங்கேற்கலாம். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

08. பூரணமற்ற விண்ணப்பங்கள் மற்றும் இணைத்து அனுப்ப வேண்டிய சான்று ஆவணங்கள் முறையாக சான்றுப்படுத்தப்பட்டிராவிட்டால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

09. சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை அமைச்சின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

10. கேள்வி ஆவணங்களை சுகாதார அமைச்சின் பெறுகைப் பிரிவில் சாதாரண வேலை நாட்களில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

11. இது தொடர்பிலான மேலதிக தகவல்களை சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரிடம் (பெறுகை) பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம்: 011-2112713 / 011 2112714 / 011 2112715 / 011 2112717)

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு "C",**
**சுகாதார அமைச்சு,**
**மெடி ஹவுஸ் கட்டிடம்,**
**முதலாம் மாடி, இல. 26,**
**ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு-10.**

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - மட்டக்களப்பு

மக்கள் வங்கி மட்டக்களப்பு பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.05.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 21.08.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

### ஏல விற்பனை நிகழும் தினம் 22.08.2024

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | பிராந்திய தலைமைக் காரியாலயம் - மட்டக்களப்பு |
|---|---|
| கிளைகள் | காத்தான்குடி, மட்டக்களப்பு, வாழைச்சேனை, மட்டக்களப்பு நகரக்கிளை, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, செங்கலடி, கல்லாறு, ஓட்டமாவடி |
| சேவை மையங்கள் | ஆரையம்பதி, கிரான்குளம், இருதயபுரம், வாகரை, கிரான், மண்டூர், வவுனதீவு, பழுகாமம் |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம், இல. 25/1, கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு**
**தொலைபேசி இல. 065-2224476, 065-2222653**

www.peoplesbank.lk 1961

PEOPLE'S BANK
Pride of the Nation


## பொது அறிவித்தல்

நீதிமன்றக் கட்டளை மற்றும் தகுதியுள்ள கலைப்பாளரை நியமித்தல்

கம்பனியின் பெயர்:
**T.K.S. பினான்ஸ் லிமிட்டட்**

பதிவு இல: PB 3792

பதிவு அலுவலக முகவரி :
**இல. 245, தர்மபால மாவத்த, கொழும்பு -7**

வழக்கு இல:
**CHC/82/2019/CO**

நீதிமன்றம்:
**வர்த்தக உயர் நீதிமன்றம் கொழும்பு**

தகுதியுள்ள கலைப்பாளரின் நியமனத் திகதி:
**2024 ஜுலை 11**

தகுதியுள்ள கலைப்பாளரின் பெயர்:
**கெடவாகந்தகே சுதத் குமார்**

தகுதியுள்ள கலைப்பாளரின் முகவரி:
**இல. 46, லும்பினி மாவத்தை, தளுகம களனி**

தகுதியுள்ள கலைப்பாளரின் அலுவலக முகவரி:
**3ம் மாடி, யதாமா கட்டிடம் இல. 142, காலி வீதி, கொழும்பு -03**

## அறிவித்தல்

2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் கீழ் 2024 ஜுலை 06ம் திகதி கீழ்க்காணும் கம்பனி கூட்டிணைக்கப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**எட்வர்ட் என்டப் பிரைஸஸ் (பிவிடீ) எல்டீடி**

கம்பனி பதிவு இல:
**PV 00304511**

பதிவு அலுவலக முகவரி :
**27/B, சேனநாயக்க பிளேஸ், தெஹிவளை**

சபையின் சார்பாக:
**மின்னேரிபிட்டியகே தொன் சாங்க மனிஷா கருநாரத்ன**

கம்பனி செயலாளர்:
**97/A, கடவத்த வீதி, களுபோவில**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை

| அம்ச இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 01 | கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை, தென்திசை நெடுஞ்சாலை மற்றும் தென்திசை நெடுஞ்சாலை நீடிப்பு ஆகியவற்றிற்கான கட்டணம் செலுத்தும் இயந்திரங்களுக்காக பெறுகை செயற்பாட்டு மீள் ஆரம்பம். RDA/EOM&M/ELE/TBM/2024/13. |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024 ஜுலை 22 ஆம் திகதியிலிருந்து 2024 ஓகஸ்ட் 05 ஆம் திகதி வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கத்கை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், வீஅஅ பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை**

info@cida.gov.lk Website : http://www.cida.lk

CONSTRUCTION INDUSTRY DEVELOPMENT AUTHORITY

# வெற்றிடங்கள்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### முகாமைத்துவ சேவை வகுதி MM 1-1 - II தரம்

1. **உதவிப் பணிப்பாளர் (நிதி) - MM 1-1 - IIஆந் தரம் - 01 பதவி**

- **தகைமை மற்றும் அனுபவம்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நிதி / கணக்கியல் / வர்த்தகம் / கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / அரச நிர்வாகம் / அரச முகாமைத்துவம் அல்லது முகாமைத்துவம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**அல்லது**

2. இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) இடைநிலைப் பரீட்சை அல்லது பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம் (CIMA)/ சான்றுபடுத்திய கணக்காளர்களின் சங்கத்தின் (ACCA) I அல்லது II பிரிவு பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம் / சபை அல்லது நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தனியார் துறை நிறுவனமொன்றில் கணக்கியல் மற்றும் நிதி தொடர்பில் குறைந்தபட்சம் 01 வருட காலம் நிறைவேற்றுத்தர பதவியொன்றில் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

குறிப்பு: கணனி மற்றும் கணக்கியல் தொடர்பிலான இயலுமை மேலதிக தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் (JM) கணக்கியல் அதிகாரி/ கணக்காய்வு அதிகாரி பதவியொன்றில் 05 வருடத்திற்குக் குறையாத சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2016-01-01ஆம் திகதி முதல் சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு

**MM 1-1**ரூபா 53,175/- 10 x 1,375/- 15 x 1,910/- 95,575 /-

### சகல விண்ணப்பதாரர்களும்

I. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
II. பதவிக்கான கடமைகளை செவ்வனே நிறைவேற்றுதல் மற்றும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல்
III. சிறந்த நன்னடத்தையுடைவராக இருத்தல்

### வயதெல்லை:

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

உள்வாரி விண்ணப்பதாரர்கள் மற்றும் தற்போது அரச/ நியாயாதிக்க நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மேற்கூறப்பட்ட உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### ஆட்சேர்க்கும் முறை

உள்வாரி விண்ணப்பதாரிகள் மற்றும் தற்போது அரச / நியதிகள் சபை நிறுவனங்களில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மேற்கூறிய உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### அனுகூலங்கள்:

- வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு
- ஊழியரின் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் சேமலாப நிதிக்கு நிறுவனத்தினால் 15% பங்களிப்பும் ஊழியரினால் 10% பங்களிப்பும் அத்துடன் நிறுவனத்தினால் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% பங்களிப்பும் வழங்கப்படும்.
- ‘‘அக்ரஹார ரன்’’ மருத்துவ காப்புறுதித் திட்டம்
- அரச தொழில்முயற்சி சுற்றுநிருபத்தின் பிரகாரம் போனஸ் கொடுப்பனவு வழங்கப்படும்.
- அரச தொழில்முயற்சி சுற்றுநிருபத்தின் பிரகாரம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் மற்றும் முகாமைத்துவ மட்டத்திற்கு போக்குவரத்து வசதிகள் மற்றும் தொலைத்தொடர்பாடல் வசதிகள் மற்றும் கட்டண பற்றுச்சீட்டுகளுக்கு மீளளிப்பு செய்யப்படும்.

விண்ணப்பதாரரின் சுய தரவுகள் உட்பட முறையாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கல்வி மற்றும் தொழில்சார், அனுபவம் தொடர்பான சான்றுபடுத்திய சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு 2024-08-12ஆம் திகதி அல்லது அதற்கு முன் தலைவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை / நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை தமது திணைக்கள / நிறுவனத்தின் தலைவரின் சிபாரிசு சகிதம், அவர்கள் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் எனும் குறிப்புடன் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

முழுமையற்ற அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**தலைவர்,**
**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை,**
**‘‘சவ்சிறிபாய’’, 123, விஜேராம மாவத்தை,**
**கொழும்பு-07.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கமநல அபிவிருத்தித் திணைக்களம் - வவுனியா

1. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறான நிர்மாண வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் சார்பாக மாவட்ட பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.
2. தேசிய போட்டி ரீதியான விலைக்கோரல் மூலம் விலைமனுக்கள் கோரப்படும். இந்தப் பெறுகையின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளின் மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) 04/2016(iii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
3. விலைக்கோரல் ஆவணத்தின் 4ஆம் பிரிவில் தகைமைத் தேவைப்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைக்கோரல் ஆவணத்தின் (5ஆம் பிரிவு) அட்டவணையில் தரப்பட்டுள்ளன.
4. வெட் வரிக்கு தகுதியுடைய விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களுடன் வெட் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: **024 222 2362,** தொலைநகல்: **024 222 8069**) மற்றும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் இதே இடத்தில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-07-22ஆம் திகதி 2024-08-12ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் வவுனியா, கமநல அபிவிருத்தித் திணைக்களம், உதவி ஆணையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்களை 2024-08-13ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், பெறுகைக் குழு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், வவுனியா எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான உறைகளில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதார்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் உடன் திறக்கப்படும்.
8. சகல விலைமனுக்களுடனும் 9ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறித் தொகை மற்றும் செல்லுபடிக் காலம் என்பன பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் இருத்தல் வேண்டும்.
9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-08-06ஆம் திகதி வவுனியா, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.
10. (அ) எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும்
(ஆ) எந்தவொரு அல்லது சகல விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கு
(இ) விலைக்கோரலை மீள அழைப்பதற்கு
வவுனியா, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

| ஒப்பந்த இலக்கம் | வேலைகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரிகள் இன்றி) (மில்.) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் மற்றும் துறை | விலைக் கோரல் பிணை முறி செல்லுபடிக் காலம் | தேவையான விலைக் கோரல் பிணை முறி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | செல்லுபடிக் காலம் |
| 281/13/17/94/ 05/05-14/2024 | தம்பனைக்குளம் Down Stream அபிவிருத்தியின் புனரமைப்பு | 2.728 | 90 நாட்கள் | C8 மற்றும் C7 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு | 2024-10-29 | 34,000.00 | 2024-11-26 |
| 281/13/17/94/ 05/05-15/2024 | சின்ன தம்பனைக்குளம Down Stream அபிவிருத்தியின் புனரமைப்பு | 3.022 | 90 நாட்கள் | C8 மற்றும் C7 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு | 2024-10-29 | 38,000.00 | 2024-11-26 |
| 281/13/09/ 65/90/01 | அடப்பன்குளத்தின் திருத்தவேலைகள் | 2.967 | 90 நாட்கள் | C8 மற்றும் C7 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு | 2024-10-29 | 37,000.00 | 2024-11-26 |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்,**
**வவுனியா.**

The Housewives’ companion
Classifieds on
Daily News

Daily News Classifieds, the Housewives’ companion

# பெயர் மாற்றம்

கண்டி வில்லியம் கொப்பல்லாவ மாவத்தை இல. 371 எனும் முகவரியில் நடத்திச் செல்லப்பட்ட ஸ்ரீலங்கா அசோசியேஷன் போர் வொலன்டரி சர்ஜிகல் கன்ட்ரா செப்ஷன் என்ட் பெமிலி ஹெல்த் Sri Lanka Association for Voluntary Surgical Contraception and Family Health (SLAVSC) (அரச சார்பற்ற அமைப்பு பற்றிய தேசிய செயலகம் அலுவலக பதிவு இலக்கம் L-05007) தொண்டர் நிறுவனம் இதன் பிறகு ஸ்ரீலங்கா அசோசியேஷன் போர் பெமிலி ஹெல்த் Sri Lanka Association for Family Health (SLAFH) என்று பாவிப்பதாக இலங்கை அரசிற்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

# பெறுகை அறிவித்தல்

## நாரம்மல பிரதேச சபை

ஒலியாதெனிய திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு பேல் இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி 2024.08.12 பி.ப. 2.00 வரை நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு 037-2249275 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து தொழில் நுட்ப அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**ஜே. எம். நிமல் ஜயசிங்ஹ**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**நாரம்மல.**

# இலங்கை வங்கி

**ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)**

**கேள்விப்பத்திர இல: P/PROC/2024/250**

**இலங்கை வங்கியின் பேரழிவு மீட்பு மூன்றாம் தரப்பு தரவுக்கோப்பக மையம்**

மேற்குறித்த சேகரிப்பை இலங்கை வங்கிக்கு வழங்குவதற்கு ஒட்டி முத்திரையிடப்பட்ட ஏல விலை கூறல்களை உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

| முக்கிய திகதிகள் | |
|---|---|
| விலைகூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2024.08.09 அன்று 1500 மணி |
| விலைகூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான காலப்பகுதி | : வேலை நாட்களில் 0900 மணியிலிருந்து 1500 மணி வரை |
| விலைகூறலுக்கான முற்கூட்டிய கூட்டம் | : 2024.07.29 அன்று 1400 மணிக்கு 14ஆம் தளம், இலங்கை வங்கி, தலைமை அலுவலகக் கட்டடம் |
| விலைகூறலை மூடும் திகதியும் நேரமும் | : 2024.08.12 1000 மணி |
| விலைகூறலைத் திறத்தல் | : விலைகூறல் முடிவடைந்ததும் |

மேலதிக விவரங்களுக்கு, விலைகூறுவோர் www.boc.lk என்ற இலங்கை வங்கியின் வலைத்தளத்தைப் பார்வையிடலாம்.

ஏதேனும் அல்லது அனைத்து விலைகூறல்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் எவ்வித காரணமும் தெரிவிக்காது விலைகூறலை அல்லது ஏதேனும் ஒரு பாகத்தினை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையினையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.

**பிரதான முகாமையாளர்**
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி தலைமை அலுவலகம்,
"BOC சதுக்கம்", இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 220 4266, 011 254 4310, 011 243 4786
மின்னஞ்சல்: procurement@boc.lk

மேலதிக விவரங்களுக்கு Scan செய்யவும்

இலங்கை வங்கி BOC

# பெறுகை அறிவித்தல்

## மேல் மாகாண சுகாதார திணைக்களம்

**ஹோமாகம ஆதார வைத்தியசாலை உள்ளக மின் பராமரிப்பு மற்றும் சேவையை வழங்குதல் 2024/2025**

2024/2025ம் ஆண்டிற்குள் எமது வைத்தியசாலையின் உள்ளக மின் பராமரித்தலுக்காக அத்துறையில் தகைமைகள் கொண்ட கேள்விதாரர்களை தேர்ந்தெடுப்பதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

2. ICTAD (CIDA) பதிவு குறைந்தபட்ச C6 நிலையில் இருத்தல் வேண்டும்.
3. அரச வைத்தியசாலையொன்றில் வெற்றிகரமாக மின் பராமரிப்பு விடயங்களை மேற்கொள்ளல் பற்றிய இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
4. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற நபர்கள் கேள்வி ஆவணங்களை ரூ. 2,000.00 மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணத்தை ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் கணக்காளருக்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து 2024.07.22 முதல் 2024.08.20 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
5. கேள்விப் பத்திரத்துடன் மருத்துவ அதிகாரி ஆதார வைத்தியசாலை ஹோமாகமவிற்கு ரூபா நாற்பதாயிரம் தொகையை வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பொ.ப. 1 பற்றுச்சீட்டுடன் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் 2024.08.21 மு.ப. 10.00 இற்கு முன்பு இவ் அலுவலகத்திற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிட முடிவதுடன் கேள்வி விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் மின் பராமரிப்பு விடயங்கள் 2024/2025' என்று குறிப்பிடுதல் வேண்டும்.
6. 2024.08.21 மு.ப. 10.00 இற்குப் பின்னர் உடனடியாக ஹோமாகம வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரி பணிமனையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிக்கு அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.
7. குறித்த கேள்விப் பெறுகை சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு.**
**ஆதார வைத்தியசாலை,**
**ஹோமாகம.**
**தொலைபேசி 011-2855200, 011-2098824, 011-2098825**


**For classified advertisements and for replies**

**received in response to advertisements published under Lake House box numbers**

**+94 112429342**
**+94 112429343**


# அறிவித்தல்

## மாநகர சபை - கடுவளை

**2025 வரவு செலவுத்திட்ட அறிக்கைக்கு உட்படுத்துவதற்காக ஆலோசனைகளைக் கோரல்**

2025ம் ஆண்டிற்காக கடுவளை மாநகர சபையினால் தயாரிக்கப்படுகின்ற வரவு செலவுத்திட்ட அறிக்கைக்கு உட்படுத்துவதற்காக கடுவளை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் சிவில் அமைப்புக்கள் மற்றும் பிரஜைகளிடமிருந்து மூலதன செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உற்படுத்துவதற்காக கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கோரப்படுகின்றன.

அவ் ஆலோசனைகள் 2024 ஆகஸ்ட் 05ம் திகதிக்கு முன் மாநகர ஆணையாளர், மாநகர சபை, கடுவளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைப்பதற்கு அல்லது கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தபால் மூலம் அனுப்பப்படும் ஆலோாசனைகள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '2025 வரவு செலவுத்திட்ட ஆலோனைகள்' என்று குறிப்பிட்டு அனுப்புமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

Website : www.kaduwela.mc.gov.lk
Email : mckaduwela@gmail.com
: mfdkmc@gmail.com

**தில்ருக்ஷி கமகே,**
**மாநகர ஆணையாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**கடுவளை மாநகர சபை அலவலகத்தில்**
2024.07.22

# afc தங்கக் கடன் சேவை

## தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 30.04.2024 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் திகதியில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 25-07-2024 | அக்குரஸ்ஸ, அளுத்கம, அம்பலாங்கொட, அம்பலாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம், அதுருகிரிய, அவிசாவளை, பதுளை, பலாங்கொடை, மட்டக்களப்பு, பொகவந்தலாவ, பொரளை சுப்பர், சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், தம்புள்ளை, தெஹியத்தகண்டிய, தெனியாய, எம்பிலிபிட்டிய, கலேவெல, கல்கமுவ, காலி, கம்பஹா, கம்பளை, கனேமுல்ல, ஹட்டன், ஹிங்குராக்கொட, ஹோமாகம, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், யாழ்ப்பாண நகரக் கிளை, கடவத்தை, கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, களுத்துறை, களுவாஞ்சிகுடி, கேகாலை, களனி, கிளிநொச்சி, கிரிபத்கொட, கிரிந்திவெல, கொஹுவல, குளியாப்பிட்டிய, குருமன்காடு, குருநாகல், மஹரகம, மஹியங்கனை, மாலபே, மன்னார், மாத்தளை, மாத்தறை, மதவாச்சி, மொனராகலை, முழங்காவில், நாவலப்பிட்டி, நீர்கொழும்பு, நிக்கவெரட்டிய, நிட்டம்புவ, நுவரெலியா, பாணந்துறை, பராக்கிரமபுர, பசறை, பிலியந்தலை, பருத்தித்துறை, பூகொடை, புதுக்குடியிருப்பு, புத்தளம், புத்தளம் 2, ராகலை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, தலவாக்கலே, தம்புத்தேகம, திருநெல்வேலி, திருகோணமலை, திருகோணமலை-2, உடப்புவ, வவுனியா, வார்ட் பிளேஸ், வெலிமடை, வெல்லவாய, வென்னப்புவ | இந்த ஏலம் ராஜகிரியவில் உள்ள அலையன்ஸ் ஃபைனான்ஸ் பிஎல்சி எண். 722 கோட்டே வீதியின் வளாகத்திலும் அந்தந்த கிளை வளாகத்திலும் தனித்தனியாக நடைபெறும். |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டுவர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் ஃபினான்ஸ் கோபி.எல்.சி க்கு எந்தவித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றினைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி

**அடகுச் சேவைத் தலைவர்**
**எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ**
**722, கோட்டை வீதி இராஜகிரிய**
**தொலை : 0115 573600**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

# பரீட்சைத் திணைக்களம்

## 2ஆவது விடைத்தாள் வழங்கலின் பெறுகை - 2024

ஒப்பந்த இல. **4/3/14/2024**

1. 2ஆவது விடைத்தாள் வழங்கலின் பெறுகைக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை, பரீட்சைத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்குவற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இலங்கையில் இதனையொத்த விநியோகங்களில் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
4. 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 6ஆவது பிரிவுக்கு அமைய விலைமனுதாரர் பொது ஒப்பந்த பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.
5. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் இலங்கை, பரீட்சைத் திணைக்களம், 3ஆவது மாடி, வழங்கல்கள் பிரிவு, உதவி ஆணையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு (தொலைபேசி/ தொலைநகல் 011 278 5219) 2024.08.09 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக 16,000.00 இ.ரூபாவை செலுத்தி 2024.07.22 ஆம் திகதி தொடக்கம் 2024.08.09 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை பத்தரமுல்லை, பெலவத்த, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம் (கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்).
7. விலைமனு 90 நாட்கள் வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும் (2024.11.10 வரை)
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனு ஆவணங்களுக்கு இணைக்கப்பட்ட வடிவத்தில், விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 120 நாட்கள் வரை செல்லுபடியான (2024.12.10 வரை) இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாக எழுநூற்று முப்பத்து ஓராயிரத்து முப்பது இலங்கை ரூபாவின் (இ.ரூபா 731,030.00) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களை 2024.08.12 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் வழங்கல் பிரிவு, 03ஆவது மாடி, பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது திருப்பித் தரப்படும். விலைமனுக்கள் மூடப்பட்ட பின் மேலே தரப்பட்ட முகவரியில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
10. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை (ஒற்றை கடித உறையில் இரு பிரதிகள்) கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2ஆவது விடைத்தாள் வழங்கல் - ஒப்பந்த இல. 4/3/14/2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
11. எந்தக் காரணமும் இன்றி எந்தவொரு விலைமனுவையும் அல்லது அனைத்தையும் நிராகரிப்பதற்கும் அல்லது விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழிப்பதற்கும் அதேபோன்று எந்த விலைமனுவையும் அல்லது எந்த விலைமனுவின் பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை பரீட்சைத் திணைக்களத்தின் பெறுகைக் குழு கொண்டுள்ளது.

**தலைவர்,**
**சிரேஷ்ட பெறுகைக் குழு,**
**இலங்கை, பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்த,**
**பத்தரமுல்லை.**
**2024/07/22**


Daily News Classifieds, the Housewives' companion


**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்**

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## கேள்விக்கோரல்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்த இல. | ஒப்பந்த பெயர் |
|---|---|
| SMRR/RBP/RDA/NP/KLN/24/01 | பாரதிபுரம் 9 ஆம் குறுக்கு வீதியிலுள்ள பாலத்தின் மீள்நிர்மாணம் |
| SMRR/RBP/RDA/NP/KLN/24/02 | ரங்கன்குடியிருப்பு பாலத்தின் மீள்நிர்மாணம் |

மேலேயுள்ள வேலைகளுக்காக தேசிய போட்டிரீதியிலான கேள்விமனுக்கோரல் நடைமுறையின் கீழ் கேள்விமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. 2024 ஜூலை 22 ஆம் திகதியிலிருந்து 2024 ஓகஸ்ட் 05 ஆம் திகதியன்று வரையும் வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கங்களான **www.rda.gov.lk** மற்றும் **www.mohsl.gov.lk** ஆகியவற்றை பார்வையிடுமாறு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (வட மாகாணம்),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.**

# துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை (இதுஅ) (SLPA)

**விலைக்கோரல்களுக்கான அழைத்தல்**

**கொழும்பு துறைமுகத்தின் செயற்பாடுகளுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபைக்காக இரு துறைமுக இழுவைகளை நேரத்திற்கு ஏற்ப குத்தகைக்கு எடுத்தல்**

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

**CES/FP/06/PT/6608 (HM)**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசில் உள்ள அனைத்து வர்த்தகக் கடல் துறைமுகங்களிலும் கப்பல்களை துறைசேர்த்தல் மற்றும் கட்டிவைத்தல் ஆகியன இலங்கை துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் இலங்கை துறைமுக அதிகாரசபையின் (SLPA) நோக்கெல்லைக்கு உட்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக துறைமுக இழுவைகள் தொகுதி ஒன்றை இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவி உள்ளதோடு அந்தத் தொகுதியை வலுப்படுத்தும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட காலத்திற்கு மேலும் இரு 80 தொன் பொல்லார்ட் இழுப்பு துறைமுக இழுவைகளை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. கப்பல்களை நிறுத்துமிடத்தில் நிறுத்துதல் அல்லது நிறுத்தாதிருத்தல் ஆகியவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாது இந்த துறைமுக இழுவைகளை பெற்று நிறுவப்படவுள்ளது. எனினும் கொழும்பு துறைமுகத்தில் தீயணைப்பு மிதவை, எண்ணெய் கசிவு அகற்றும் தெளித்தல் கப்பல், கப்பல்களின் நிறுத்தம் மற்றும் வெளியேற்ற செயற்பாடுகளுக்கான கப்பல்கள் முதலியவை போன்ற தயார் நிலைக்கு கப்பல்களை அழைத்துச் செல்வதற்கும் பயன்படுத்தப்படும். இந்த நோக்கத்திற்காக ஐந்து ஆண்டு காலத்திற்கு 80 தொன் பொல்லார்ட் இழுப்பு துறைமுக இழுவைகள் இரண்டின் சேவையை வாடகை அடிப்படையில் பெறுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை உத்தேசித்துள்ளது.
2. இதற்காக பெறப்படும் சேவைகளுக்கான பணக்கொடுப்பனவுகளை இதுஅ அதனது சொந்த நிதிகளிலிருந்து செலவு செய்யும்.
3. ஆகக்கூடியது இரு இழுவைகளின் சேவைகளை வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக ஆர்வமுள்ள சாரார்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இதுஅ இற்காகவும் அதன் சார்பாகவும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். விலைமனுக்கள் தனியொரு இழுவைக்கான அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணத்தில் மேலதிக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
4. மேற்குறிப்பிட்டுள்ள விலைமனுக்கோரலை பெறுவதற்காக, விலைமனுதாரர் இயைபுள்ள துறையில் முன்னைய அனுபவத்தையுடையவராகவிருத்தல் வேண்டும். விலைமனுக்கோரல் ஆவணங்களில் மேலதிக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை கடற்பரப்பில் வணிகம் செய்வதற்காக 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வணிக கப்பற் சேவைகள் மற்றும் திருத்தங்களின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென்பதை ஆர்வமுள்ள சாரார் கவனத்திற் கொள்ளவும். இழுவை/இழுவைகளை ஐந்து (05) வருட காலப்பகுதிக்கு வழங்கல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
5. விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களின் ஏற்பாடுகளுக்கும் அதன் பின்னர் வெளியிடப்படும் நியதிகளுக்கும் அமைந்தொழுகல் வேண்டும். இந்த சட்டத்தின் கீழ், முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக விலைமனுதாரருக்கு அல்லது அவர் சார்பாக செயற்படுவாராயின் அவர்கள் பங்கெடுப்பதற்கு ஆர்வமுள்ள எந்தவொரு கேள்வியின் பெறுமதியானது இலங்கை பணத்தில் ஐந்து மில்லியனுக்கு மேற்படின் இயைபுள்ள உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட பிசிஏ பதிவு செய்தல் சான்றிதழை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. இந்த விலைமனுக்கோரலுக்கான அட்டவணையானது கீழே காட்டப்பட்டுள்ளவாறு திட்டமிடப்பட்டுள்ளது.

| நிகழ்வு | திகதி |
|---|---|
| அ. விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்கல் | 2024 ஜூலை 22 ஆம் திகதியன்று |
| ஆ. விலைமனு முன்னோடிக்கூட்டம் | 2024 ஓகஸ்ட் 06 ஆம் திகதியன்று |
| இ. விலைமனுக்கோரல் ஆவணங்களின் தெளிவுறுத்தல்களுக்காக விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி | 2024 ஓகஸ்ட் 22 ஆம் திகதியன்று |
| ஈ. விலைமனுக்கோரல்களுக்கான தெளிவுறுத்தல்கள் மற்றும்/ அல்லது பிற்சேர்க்கையை வழங்குவதற்கான இதுஅ இற்கான இறுதி திகதி | 2024 ஓகஸ்ட் 29 ஆம் திகதியன்று |
| உ. விலைமனுக்களின் சமர்ப்பித்தலுக்கான மூடும் திகதி மற்றும் நேரம். | 2024 செப்டம்பர் 3ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |
| ஊ. விலைமனுக்களை திறத்தல் | 2024 செப்டம்பர் 3ஆம் திகதியன்று விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே நடைபெறும். |

7. இந்த விலைமனுக்கோரல் தொடர்பான மேலதிக தகவலை ஆர்வமுள்ள சாரார் இலங்கை, கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை, கடற்பயண வழிப் பிரிவு, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் மே/பா, துறைமுக தலைவரிடமிருந்து (Harbour Master) பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 0094112385401 அல்லது மின்னஞ்சல்: nirmalsilva@slpa.lk. ஆர்வமுள்ள சாரார் விலைமனுக்கோரல் ஆவணங்களின் உருமாதிரி பிரதியொன்றை இலங்கை, கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பரீட்சிக்கலாம்.
8. மீளளிக்கப்படாத கட்டணமாக ஆயிரம் அஐ டொலர்களை (USD 1,000.00) செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள சாரார்களினால் கொள்முதல் செய்யப்படலாம்.

   விலைமனுக்கோரல் ஆவணத்தின் வழங்கலானது அலுவலக நேரங்களில் 2024 ஜூலை 22 ஆம் திகதியன்று மதியம் 12 மணியிலிருந்து 2024 செப்டம்பர் 3 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையுமாகும்.
9. இந்த விலைமனுக்கோரல் தொடர்பாக ஏற்படும் எந்தவொரு சிக்கல்களுக்கான தெளிவுறுத்தல் மற்றும் விடை ஆகியவற்றை தெளிவுபடுத்துவதற்கான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஓகஸ்ட் 6 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு இலங்கை, கொழும்பு - 1, சைத்திய வீதி, 19ஆம் இலக்கத்திலுள்ள துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு, முதலாம் மாடி, மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள சாரார் மற்றும்/ அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அழைக்கப்படுகின்றனர்.
10. ஒவ்வொரு இழுவைக்கும் 50,000 அ.ஐ. டொலர் (50,000 அஐடொ) கேள்விப் பிணையாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 2024 செப்டம்பர் 3 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு பிந்தாமல் விலைமனுதாரர்களுக்கான அறிவுரைகளுக்கு அமைவாக தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு, துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு, இல. 19 சைத்திய வீதி, கொழும்பு-1, இலங்கை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு விலைமனுவும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாமல் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாகவே பகிரங்கமாக அதே நாளில் விலைமனுதாரர் மற்றும்/அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
11. விலைமனுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆகியன தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு அல்லது இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது எவ்வித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள மாட்டாது.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல.: 19, சைத்திய வீதி,**
**கொழும்பு-01,**
**இலங்கை.**


**The Housewives' companion Classifieds on Daily News**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

## 2024ஆம் வருடத்திற்கான Color Bond Papers அல்லது Wood free Papers வழங்குவதற்கான பெறுகை

### ஒப்பந்த இல. 4/10/3/2024

1. பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள Color Bond Papers அல்லது Wood free Papers வழங்கும் பெறுகைக்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் முழுமையான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| லொட் இல. | வகை | ஒரு லொட்டிலுள்ள பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | Pink Color Bond Paper or wood free paper (24”x36”) 80±2 GSM (500 Sheets Per Ream) | 200 ரிம்கள் (100000 தாள்கள்) |
| 2. | Yellow Color Bond Paper or wood free paper (24”x36”) 80±2 GSM (500 Sheets Per Ream) | 100 ரிம்கள் (50000 தாள்கள்) |
| 3. | Green Color Bond Paper or wood free paper (24”x36”) 80±2 GSM (500 Sheets Per Ream) | 100 பெக்கட்டுகள் (50000 தாள்கள்) |
| 4. | Blue Color Bond Paper or wood free paper (24”x36”) 80±2 GSM (500 Sheets Per Ream) | 50 பெக்கட்டுகள் (25000 தாள்கள்) |
| 5. | White Color Bond Paper or wood free paper (24”x36”) 80±2 GSM (500 Sheets Per Ream) | 150 பெக்கட்டுகள் (75000 தாள்கள்) |
| 6 | White Color Bond Paper (24”x36”) 52±2 GSM (500 Sheets Per Ream) | 150 பெக்கட்டுகள் (75000 தாள்கள்) |
| 7. | Yellow Color Bond Paper (24”x36”) 52±2 GSM (500 Sheets Per Ream) | 160 பெக்கட்டுகள் (82500 தாள்கள்) |
| 8. | Blue Color Bond Paper (24”x36”) 52±2 GSM (500 Sheets Per Ream) | 100 பெக்கட்டுகள் (20000 தாள்கள்) |
| 9. | White Manifold Paper (24”x36”) 20-28 GSM (500 Sheets Per Ream) | 100 பெக்கட்டுகள் (17500 தாள்கள்) |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இயைபுடைய பொருட்களை வழங்குவதில்/விற்பனை செய்வதில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2786200-238 அல்லது 011-2785219) மற்றும் 2024-08-09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2024-08-09ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படும் கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 4,700.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2024-11-09ஆம் திகதி வரை) செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட வடிவத்தின் பிரகாரம் 152,000.00 (ஒரு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் ரூபா மட்டும்) இலங்கை ரூபாவிற்கான விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2024-12-09ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களை 2024-08-12ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03 ஆம் மாடி, வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘2024ஆம் வருடத்திற்கான Color Bond Papers அல்லது Wood free Papers வழங்குவதற்கான பெறுகை - ஒப்பந்த இல.: 4/10/3/2024” என குறிப்பிடப்படல் வேண்டும்.
11. பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு பொறுப்பையும் ஏற்படுத்துதல் அல்லது பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்ற எவ்விதக் கடப்பாடும் இன்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்நேரத்திலும் எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது அனைத்து விலைமனுக்கோரல் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கும் எவ்விதக் காரணமும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
2024.07.22

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - பொலன்னறுவை

மக்கள் வங்கி பொலன்னறுவை பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் சேவை மையங்களில் 31.05.2023 வரை அடகு வைக்கப்பட்டு 23.08.2024 திகதி வரை மீட்கப்படாததும் புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் 24.08.2024 மற்றும் 25.08.2024**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | பொலன்னறுவை கிளை | தெஹியத்த கண்டிய கிளை |
|---|---|---|
| கிளைகள் | பொலன்னறுவை, ஹிங்குராகொட, ஹபரண, மெதிரிகிரிய, பொலன்னறுவை நகரக்கிளை, பக்கமூன, தம்பால | அரலகங்வில், வெலிகந்தை, தெஹியத்தகண்டிய |
| சேவை மையங்கள் | கதுறுவெல, தியசென்புர, வைத்தியசாலை வளாகம், தியபெதும், லங்காபுர, ஜயந்திபுர, புலதிசி | மன்னம்பிட்டிய, செவன்பிட்டிய, சிறிபுர, சந்துன்புர |

இந்த ஏலங்களை மறு அறிவித்தல் இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள்வங்கி, பிராந்திய தலைமைக் காரியாலயம், புதிய நகர், பொலன்னறுவை
தொலைபேசி இல. 027-2223900, 027-2224404, 027-2225760, 027-2226626, 027-2226625.

PEOPLE'S BANK
Pride of the Nation

# இலங்கை வங்கி

## ஏல விலைகூறலுக்கான அழைப்பு (IFB)

**கேள்விப்பத்திர இலக்கம் : P/PROC/2024/174**

### இலங்கை வங்கிக்கான பாதுகாப்புப் பெட்டகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்

**மேற்படி பெறுகைக்காக உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.**

**முக்கிய திகதிகள்**

| | |
|---|---|
| விலை கூறல் ஆவணங்களை வெளியிடுவற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 09.08.2024, 15.00 மணிக்கு |
| விலை கூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான காலப்பகுதி | : வேலை நாட்களில் 09.00 மணியிலிருந்து 15.00 மணி வரை |
| விலை கூறல் மூடும் திகதியும் நேரமும் | : 12.08.2024 10.00 மணிக்கு |
| விலை கூறலைத் திறத்தல் | : விலை கூறல் முடிவடைந்தவுடன் |

மேலதிக விபரங்களுக்கு விலைகூறுவோர், www.boc.lk என்ற இலங்கை வங்கியின் வலைத்தளத்தை பார்வையிடலாம்.

ஏதேனும் அல்லது அனைத்து விலை கூறல்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் எவ்விதக் காரணமும் தெரிவிக்காது விலைகூறலை அல்லது ஏதேனும் ஒரு பாகத்தினை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையினையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.

**பிரதான முகாமையாளர்,**
**சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி**
**14ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமையகம்,**
**‘BOC சதுக்கம்’,**
**இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு - 1.**
**தொலைபேசி: 011 2204272, 011 2544310, 011 2434786**
**மின்னஞ்சல்: procurement@boc.lk**

**மேலதிக விபரங்களுக்கு ஸ்கேன் செய்யவும்**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

Repeat Your Ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை நுவரெலியா

## கட்டிட பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான அழைப்பு

சுகாதார அமைச்சு சர்பாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு இலங்கை நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024.07.22 முதல் 2024.08.12 பி.ப. 11.30 வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும். கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் மேற்படி முகவரியில் பணிப்பாளர் பணிமனையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அதற்காக கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் தலைமையகத்தில் 2024.07.22 முதல் 2024.08.09 வரை வேலை நாட்களில் முற்பகல் 9.00 பிற்பகல் 3.00 இற்குமிடையிலான காலத்திற்குள் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் காசு அறவிடப்படாமலேயே கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம். கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு கேள்விதாரர்கள் தமது தகைமைகளை உறுதி செய்யும் சான்றுகள் மற்றும் கேள்விக் கட்டணத்தைச் செலுத்துதல் சார்பாக வைத்தியசாலையின் கணக்காளரால் விநியோகிக்கப்படும். பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொடர் இல. | கோவை இலக்கம் | உருப்படி | தகைமை | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | GH/NE/AL/01/04/2024/2025 | 2024/2025ம் ஆண்டிற்காக பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் (ரூபா 500,000.00) இற்கு மேற்படாத பராமரிப்பு ஒப்பந்தங்களுக்காக) | C09 அல்லது அதற்கு மேல் | ரூ. 3000.00 |
| 02 | GH/NE/AL/01/05/2024/2025 | 2024/2025ம் ஆண்டிற்காக பழைய வைத்தியசாலையின் சாக்கடை அமைப்பை பராமரிக்கும் ஒப்பநதக்காரர்களைப் பதிவு செய்தல் (ரூ. 500,000.00 மேற்படாத சாக்கடை பராமரிப்பு ஒப்பந்தங்களுக்காக) | C09 அல்லது அதற்கு மேல் | ரூ. 3000.00 |

மேலதிக விபரங்களுக்கு தலைமையகத்தை அழையுங்கள் கேள்வியொன்றை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**நுவரெலியா**
**தொ.பே. இல. 052-2222310 (Ext - 2271 அல்லது 2272)**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

### கிரவல் (மண்) வழங்கப்பெறுதல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திவுலப்பிட்டிய கொங்கிறீட் முற்றவெளியினால் செயற்படுத்தப்படும் அலுதபொல கர்மாந்தபுர செயற்றிட்டத்திற்கு 985 மீற்றர் கியூப் கிரவல் மண்ணை வழங்கப் பெற்றுக்கொள்வதற்கு திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| உருப்படி இலக்கம் | பொருள் விபரங்கள் | கிரவல் மண் $m^3$ | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | பணமாக ரூபா | வங்கி / காப்புறுதி பிணை மூலம் ரூபா |
| 1 | அலுதபொல கர்மாந்தபுரயின் பிரவேச வீதி Supplying Piling Soil | 985 | 12,500.00 | 25,000.00 |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2024.07.22ஆம் திகதியிலிருந்து 2024-08-05ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கூறப்பட்ட பெறுமதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விப் படிவக் கட்டணமாக (1,000 + Vat 18%) + SSCL 2.5% ரூபாவைச் செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. இந்தக் கேள்விகள் 2024-08-06ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இவ்வலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி, அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-4 849825, 011-4 849845**

Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
WE ACCEPT
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343